149

M. 1803 Vol II—No. 11

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 12, 14, 16, 18.

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 16 முதல் 20 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 15, 18, 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

பொத்தானில்லாதது நைஸானது
பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,
188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1925
MADRAS

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் உ. | குரோதனஹு ஆனிமீ 1925 ஜூன் | இதழ் கக.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	539
2.	நாட்டு வணக்கம்	540
3.	பஞ்சத்தை ஒழிப்போம்	541
4.	ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர்	546
5.	கந்தர் அந்தாதி	552
6.	தலனீபேகம் அல்லது நாயக பக்தி ...	554
7.	யசோதரன்	556
8.	வியாதிக்கிருமிகள்	567
9.	பண்டரியாத்திரை	571
10.	தேசபந்து தாசர் சரித்திரம் ...	573
11.	ஜாதி	578
12.	ஒரு கோடீஸ்வரனின் இரகசியம் ...	580
13.	விவசாயத்தில் புதுமை	581
14.	பத்திராதிபர் குறிப்புகள்	584
15.	உலகப் போக்கு	589

210350
சென்னை 600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணு 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப் படமாட்டா.

மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது!

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன்விலை ரூ. 3. தபாற்செலவு வேறு.! சொற்ப காபிகளே கைவச முள்ளது, முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்

லக்ஷ்மி துதி

செந்திருவே நின்னருள் போற்றி
நின் றுஞ் செகத்தி லுள்ளார்
தந்திருவேட்டுத் தயங்கு கின்றேன்
எனைத் தாங்க லென்றோ ?
சந்திரனோடும் அமுதோடும் பாற்
கடல் தன்னில் வந்த
இந்திரை யென்னப் பலர் கூறும்
ஞாயம் இலங் குறவே.

நாட்டு வணக்கம்.

எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனதில் இருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ?—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? (1)

இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த்தருள்
ஈந்ததும் இந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே—அவர்
கன்னியராகி நிலவினில் ஆடிக்
களித்ததும் இந்நாடே—தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளையாடி யில்
போந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? (2)

மங்கையராய் அவர் இல்லறம்
நன்கு வளர்த்ததும் இந்நாடே—அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவர் உடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? (3)

பாரதி.

பஞ்சத்தை ஒழிப்போம்.

பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை எழுதியது.

மக்கள் சுக வாழ்க்கைக்கு இன்றி யமையாதன இரண்டு:—உணவும்,உடையும். "உண்பது நாழி. உடுப்பது நான்கு முழம்" என்று ஔவையார் இவற்றையே குறித்தனர். உணவு, உடை யென்னும் இரண்டில் உணவே மிகவும் இன்றி யமையாதது என்பதை உரைத்தல் வேண்டாம். மக்கள் உடையின்றி யிருப்பினும் இருக்கலாம். உணவின்றி ஒரு நாளும் இருக்க முடியாது.

முற்காலத்தில் நமது நாடு செல்வங்கள் அனைத்திலும் சிறந்து விளங்கியது. வறுமை வறுமையா யிருந்தது. மக்கள் அன்பிலும், அறிவிலும், அறத்திலும், செலவத்திலும், இன்பத்திலும் சிறந்து விளங்கினர்கள். ஆனல் இப்பொழுதோ நாட்டிலே நாளுக்கு நாள் பஞ்சம் வளர்ந்து வருகிறது. அன்பும், அறமும் குன்றி வருகின்றன. பூலோகத்திற் கெல்லாம் அன்னபூரணியாய் விளங்கிய நமது பாரத மாதா இன்று பிச்சைக்காரியாய் விட்டாள். நாட்டிலே சோற்றுப் பஞ்சம் மிகுந்து விட்டது. நாளைக்கு ஒரு வேளை சோறுகூட இல்லாமல் குற்றுயிர் வாழும் ஜனங்கள் நமது நாட்டிலே பல கோடி. உடுக்க உடையின்றி, மானத்தைக் காக்குமாறு கந்தையும் இன்றி வருந்துவோர் பல கோடி. அவர்களுக்கு உண்பதற்கும் இல்லை. உடுப்பதற்கும் இல்லை.

நாட்டிலே, ஞாலத்திலே அன்பும் அறமும் பெருகி இன்பம் சிறந் தோங்கவேண்டு மென்ருல் மக்களுக்கு உண்பதற்கும் உடுத்துவதற்கும் பஞ்ச மிருக்க லாகாது.

நாட்டிலே, இப்பொழுது ஏற்பட்டுள்ள பரிதாப நிலைக் குரிய காரணங்களை ஆராய்தல் வேண்டும். இது நாகரிகம் மிகுந்த காலமென்று கூறுகிருர்கள். எங்கும் ரயில் வண்டி செல்கிறது. தந்தி செல்கிறது. ஆகாயக்கப்பல்

பறக்கிறது. கம்பி யில்லாத் தந்தியும் வந்து விட்டது. மின்சார விளக்குகள், விசிறிகள், இன்னும் எத்தனையோ அற்புதங்கள்.—இவை யெல்லாம் இருக்கும்பொழுது முற்காலத்தை நோக்கத் தற்காலம் எவ்வளவோ சிறந்த நாகரிகமான காலம் என்று சிலர் கருதலாம். ஆனால் நாளைக்கு என்ன செய்வதென்ற கவலை யின்றிச் சாய்வு நாற்காலியில் உறங்கும் செல்வர்களுக்கு மட்டுமே இது நல்ல காலமாகத் தோன்றும். நாட்டிலே ஒரு சில செல்வர்களுக்கே நாம் மேலே காட்டிய நாகரீக வசதிகள் நன்மை யளித்து வருகின்றன. ஆனால் நாட்டுப் பொது ஜனங்களுக்கு இவற்றால் நன்மை ஒன்று மில்லை. தீமையே மிகுதி. இந்த நாகரீக சாதனங்கள் வந்த பின்னரே நாட்டிலே பஞ்சமும் நோயும் பெருகி வருகின்றன.

நாட்டிலே விவசாயம் நடைபெறாமல் இல்லை. நிலம் விளையாமலும் இல்லை. ஆனால் நாட்டின் நன்மையைத் தலைமையாகக் கவனியாத தற்கால அரசு முறை காரணமாக நாட்டில் விளையும் உணவுப் பொருள்களிலும் பிறவற்றிலும் சிறு பகுதியும் பெரும் பகுதியும் ரயில் கப்பல் முதலிய தற்கால நாகரீக வசதிகளின் துணையால் நெடுந்தொலைகளி லுள்ள வெளி நாடுகளுக்குச் சென்று விடுகின்றன. நாட்டிலே விளையும் அரிசியில் ஒரு பகுதி வெளி நாட்டார் உணவுக்காகவும், சாராயம் செய்வதற்காகவும் வெளி நாடுகளுக்குச செல்கின்றன. கோதுமை வெளியே செல்கிறது. வெல்லமும் வேர்க்கடலையும் ஏராளமாகச் செல்கின்றன. எள், முத்துக்கொட்டை முதலியன ஏராளமாகச் செல்கின்றன. நல்லெண்ணெயும், விளக்கெண்ணெயும், தேங்காயெண்ணெயும் பெருவாரியாகச் செல்கின்றன. மலையாளக் கரையிலிருந்தும், இலங்கைத் தீவிலிருந்தும் ஆண்டுதோறும் கோடிக் கணக்கான தேங்காய்கள் வெளியே செல்கின்றன. நாட்டிலே விளையும் பருத்தியில் பெரும் பகுதி வெளி நாடுகளுக்குச் செல்கின்றது. நாட்டிலே பஞ்சம் பெருகுவதற்கு இது முதற் காரணம்.

நாட்டிலுள்ள ஜனங்கள் அத்தனை பேருக்கும் வேண்டிய உணவுப் பொருளகளும் ஏனைய பொருள்களும் போக மிஞ்சியவற்றை வெளி நாடுகளுக்கு அனுப்பலாம. ஆனால் நமது நாட்டில் இப்பொழுது நடப்பது குருட்டு வியாபாரம்.

பஞ்சத்தை ஒழிப்போம்

நாட்டிலே கோடிக் கணக்கான ஜனங்கள் சோற்றுக்கு வருந்தும் பொழுது ஏராளமான அரிசியையும் கோதுமை, வெல்லம், தேங்காய், வேர்க்கடலை முதலிய உணவுப் பொருள்களையும் ஏனைய விளைபொருள்களையும் கப்பலேற்றி அனுப்பிவிடுகிறோம். நல்லெண்ணெயையும், விளக்கெண்ணெயையும், தேங்கா யெண்ணெயையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு மண்ணெண்ணெயை ஏராளமாக வாங்கிக் கண்ணையும் மூக்கையும் சுகத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறோம். நாட்டில் விளையும் பருத்தியைக் கப்பல் கப்பலாக ஏற்றி அனுப்பிவிட்டு வெளி நாட்டு யந்திரத்துணிகளை ஒன்றுக்கு நான்கு விலைகொடுத்து வாங்கி உடுத்துகிறோம். ஒரு சில கருணையற்ற வியாபாரிகள் கோடீசுரர்க ளாவதற்காக இத்தகைய குருட்டு வியாபாரம்நடப்பதைத் தடுக்க வேண்டும். அடுத்து வரும் வருஷம் கொடிய பஞ்சத்துக்குரிய தென்று சொல்லுகின்றார்கள். இப்பொழுதே நாம் விழிப் படைய வேண்டும்.

ஒவ்வொரு ஊராரும் ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் ஊரிலும் தங்கள் நாட்டிலும் உள்ள ஜனங்கள் அத்தனை பேருக்கும் போதுமான உணவுப் பொருள்களும் தானியங்களும் துணி மணிகளும் வைத்துக் கொண்டு, மிஞ்சிய பொருள்களையே வெளி ஊருக்கோ, வெளி நாட்டுக்கோ அனுப்புவதென்று ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். வியாபாரமென்ற குருட்டு முறையால் ஒவ்வொரு நாட்டாரும் இந்த சுதேசி தர்மத்தை மறந்து விட்டதால் தான் பூலோகத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் பஞ்சமும், நோயும் பெருகிக் கோடிக்கணக்கான ஜனங்கள் உண்ண உணவும் உடுக்க உடையு மின்றி வருந்துகிறார்கள். நாட்டில் விளையும் உணவுப் பொருள்களாகிய தானியாதிகள் தானிய லக்ஷ்மியின் அம்சங்க ளாகும். நாட்டுச் செல்வங்கள் ஒவ்வொன்றும் லக்ஷ்மியின் அம்சமே யாகும். லக்ஷ்மியின் அம்சங்களான இவற்றை வெளி நாடுகளுக்கு நாம் கப்பலேற்றி அனுப்பிவிட்டால் நாட்டிலே லக்ஷ்மி எவ்வாறு தங்குவாள்? சௌக்கியமும், இன்பமும் எவ்வாறு ஏற்படும்?

பூமி தேவி ஒரு லக்ஷ்மி. பூமியை நாம் நெடுநாளாக மறந்து விட்டோம். படித்தவர்கள் விவசாயத்தை இழிவான தொழில் என்று கருதுகிறார்கள். இந்த மடமை ஒழிய வேண்டும். ஒரு பயனு மற்ற மேல் நாட்டுப் படிப்பைப் படித்து

விட்டு முப்பது ரூபாய், நாற்பது ரூபாய்க்கு அடிமைப்பட்டு வாழும் மதிகெட்ட முறையை ஒழிக்கவேண்டும். 'பூமி திருத்தி உண், சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்ற ஔவை வாக்கைப் போற்றி எல்லோரும் பூ லக்ஷ்மியின் மீது நாட்டம் செலுத்தவேண்டும். நாட்டில் உள்ள கல்வியறிவுள்ள இளைஞர்கள் நரகங்கள் எனத் தகும் நகரங்களிலே அடைபட்டு அடிமைப்பட்டுக்கிடப்பதை ஒழித்து விடுதலை பெற்ற வீரர்களாய் நாட்டுப் புறங்களை நாடி விவசாயம் தோட்டப் பயிர் முதலிய சுதந்தரத் தொழில்களில் ஈடுபட்டுச் சுதந்தரமான சுக வாழ்க்கை, இயற்கை வாழ்வு நடத்த முற்பட வேண்டும்.

விவசாயம் கல்வியறிவற்ற மூட ஜனங்களுக்கே உரிய தென்று தற்கால நம்மவர்களிலே பலர் தவருகக் கருதுகிருர்கள். இந்தக் குருட்டுச் சிந்தனையை ஒழிக்கவேண்டும். ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேனடுகளிலே டாக்டர் பர்பாங்கு முதலிய பௌதிக சாஸ்திர மேதாவிகள் தங்கள் ஆராய்ச்சியின் துணையால் விவசாயம் தோட்டப் பயிர் முதலியவற்றில் எவ்வளவு அதிசயமான அரும் பெரும் பயன்களை அடைந்து வருகிருர்கள் என்ற விஷயத்தை நம்மவர்கள் அறிவார்களானல் நமது வாலிபர்களிலே பெரும்பாலார் வேளாளர்களாக மாறி விடுவார்கள்.

மனித வாழ்க்கையின் நோக்கம் மிகப் பெரிது. மக்கள் அறிய வேண்டியனவும் புரிய வேண்டியனவுமான உண்மைகளும் செயல்களும் பல பல. ஆனல் சோற்றுக் கவலை கொண்டவன் எதிலும் துணிவு கொள்ள முடியாது. பசி வந்திடில் பத்தும் பறந்து போம். நாட்டிலே அன்பும், அறமும், கல்வியும், புலமையும், சீரும், சிறப்பும் ஏற்பட வேண்டுமானல் சோற்றுப் பஞ்சம் ஒழிய வேண்டும். சோறின்றி வீரம இல்லை. கல்வி யில்லை. கலை யில்லை. ஆண்மை யில்லை. மக்கள் தங்களுக் குள்ள உயர்ந்த குணங்களையெல்லாம் கொண்டு சிறந்தோங்க வேண்டுமானல் நாட்டிலே வறுமை ஒழியவேண்டும். சிறுமைகள் நீங்க வேண்டும். அனைத்திற்கு முதலாவதாகச் சோற்றுப் பஞ்சம் நீங்கவேண்டும். அதற்கு அன்னபூரணியின் திருவருள் வாய்த்தல் வேண்டும். பூமிதேவி மீது நாம் நாட்டஞ் செலுத்து வோமானல் நமக்குச் செல்வங்கள் பொங்கும்.

பஞ்சத்தை ஒழிப்போம்

நாட்டிலே சோற்றுப் பஞ்சத்தை ஒழிப்பது வாயிலாகப் பஞ்சத்தையும் நோயையும் ஒழித்து அறியாமை அநியாயம் முதலிய கட்டுகளிலிருந்து மக்களை விடுதலை செய்யுமாறு, வீரர்கள் பலர் நாட்டிலே தோன்றவேண்டும். செல்வத்திற்கும் இன்பத்திற்கும் வீரத்திற்கும், மேன்மைக்கும் உரிய தெய்வமான லக்ஷ்மி நமக்கு அருள் புரிக.

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை,
தானம், தவம், முயற்சி, தாழாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்து போம்.

ஆர்க்கும் இடுமின் ; அவர் இவர் என்னன்மின் ;
பார்த்திருந் துண்மின் ; பழம் பொருள் போற்றன்மின் ;
வேட்கையுடையீர் ! விரைந் தொல்லை உண்ணன்மின் ;
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.

அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சனை களவும் பொய்யும்
சினத்தையும் தவிர்ப்பா யானல்
செய்தவம் பின் வேறுண்டோ ?
உனக்கிது செம்மையான
உப தேசம் ஆகும் கண்டாய்.

ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர்

சரித்திரம்.

(ஸ்ரீமான் "முகம்மது ராம்" எழுதுகிறார்.)

முகவுரை.

தன்னுடைய பலத்திலும், சாமர்த்தியத்திலும் நம்பிக்கை கொள்ளாதவன் உலகில் ஒரு காரியமும் சாதிக்க மாட்டான். இங்ஙனமே தனது முன்னோர்கள், கவிஞர்கள், வீரர்கள், தேசதலைவர்கள் இன்னோரன்னோரின் பெருமையிலும், பேரறிவிலும், வீரச் செயல்களிலும் நம்பிக்கையும், மனவெழுச்சியுங் கொள்ளாத நாடு உலகில் உயர்வடையாது என்பது முக்காலும் உண்மை. எந்தத் தேசமும் தன் இறந்த காலப் பெருமையையும் வெற்றிகளையும் அஸ்திவாரமாகவும், நிகழ்கால முயற்சிகளை அதன்மீது கட்டிடமாகவும், தனக்கு எதிர் காலத்திலுள்ள நம்பிக்கையை அக்கட்டிடத்தின் சுவர்ண கசிதமான சிகரங்களாகவும் கொண்டு தான் உலகில் மேம்பாடடைய இயலும். நாம் எங்ஙனம் நமது மதத்தில் தோன்றிய அவதார புருஷர்கள், அடியார்கள, நாயன்மார்கள் ஆதியவருடைய நக்ஷத்திரங்களைக் குதூகலத்துடனும், பக்தியுடனும் கொண்டாடுகின்றோமோ, அங்ஙனமே மேனாட்டார்கள் தமது நாட்டுக் கவிகள் தேசத்தலைவர்கள், ராஜதந்திரிகள், நூலாசிரியர்கள் முதலானோருடைய நாட்களையும் பல வகையாலும் கொண்டாடுகின்றனர். நாடெங்கும் அவரவர்கட்கு உருவச் சிலைகள் முதலிய ஞாபகச்சின்னங்களமைத்தும், அவர்களது ஜீவிய சரித்திரங்களை வெளியிட்டும் அவர்கள் ஞாபகம் என்னாளும் தேசத்தார் மனத்தே தழைத்து நிற்கச் செய்கின்றனர். உதாரணமாக, இணையற்ற ஆங்கில ராஜதந்திரியாகிய கிளாட்ஸ்டனது ஜீவிய சரித்திரம் அவர் சிஷ்யர் மார்லி பிரபு எழுதியுள்ளதை ஆங்கில மக்கள் தமது மதககிரந்தமாகிய விவிலிய வேதத்திற்கு அடுத்ததாக மதித்துப் போற்றுகின்றனர். சில நாட்களுக்கு முன் பிரசித்த ஆங்கில கவி ஷேக்ஸ்பியர் உபயோகித்ததாக ஊகித்த ஓர் எழுதுகோல் ஆயிரக்கணக்கான பவுனுக்கு ஏலம் போயிற்று. எதிரிடையாக, நம் நாட்டவருடைய நிலைமை வெகு விபரீதமாக விருக்கிறது. நம்மவருக்குத் தமது பழைய முன்னோர்களுடைய பெருமையிலே மீளா மோகங்கொண்டு பின்னர்த் தோன்றிய நமது பெரியோர்களையும், தேச ஊழியர்களையும் போற்றும் ஆற்றலும், விரிந்த மனமும் இராதொழிந்தனர். மேலும், நம்மில் மற்றொரு பகுதியாரோ ஆங்கிலேயர் முதலிய அன்னிய நாட்டாருடைய இலகக்கியங்களையும் செயல்களையும், பழக்க வழக்கங்களையும் போற்றுவதும், தமது முன்னோர் பெருமைகளை உணரும் பொறுமையிலாது அவர்களைப் பொருட்படுத்தாமல் இழித்துரைப்பதுமே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இவ்விரு வகுப்பாரும் தேசத்துரோகிகளே யாவர். இத்தகைய தேசத்துரோகிகள நமது தென்னாட்டின் கண்ணே அதி

கமாயிருத்தலும் நாம் செய்த ஊழ்வினைப் பயனேயாம். வங்காளம், மகாராஷ்டிரம், குஜராத் முதலாம் பகுதிகள் தமது பாஷையையும், இலக்கியங்களையும், புலவர்களையும், தேசத்தலைவர்களையும் போற்றி முன்னேறும் ஆற்றலை நோக்குமிடத்து நந் தமிழ் நாடு நாணித் தலை கவிழ வேண்டியதே. தேசீய முயற்சியை எடுத்துக்கொள்வோம். இதில் நம் நாடு தான் மற்றைய நாடுகளின் பின் நிற்கிறது. நமக்கு உள்ளே கிளைத்த சண்டை சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ளவே காலமும் சக்தியும் போதவில்லை. அன்றி இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற மௌட்டீக குணத்துடன் காங்கிரஸ் முதலான சபைகளுக்கு ஏனைய நாட்டுத் தலைவர்களையே தக்கோரென மதித்து நாயகர்களாகத் தேர்ந்தெடுக்கிறோம். இங்ஙனம் நம்மவர்க்குள் சுயமரியாதையும், தன்னம்பிக்கையும் அருகி நிற்பதற்குக் காரணம், நமது தாய் மொழியையும், தேச பக்தர்களையும், தலைவர்களையும் மதித்துப் போற்றும் குணமும், பொறுமையும் இன்மையே யாகும். தமிழ் நாடு தற்போது நூதன இயக்கங்களில் மற்றைய நாடுகளுடன் தோள் தழுவி நின்றுழைக்கும் ஆற்றல் பெற்றுள்ளதற்குச் சென்ற ஒரு நூற்றாண்டில் எவ்வளவு கல்விமான்களும், தேசாபிமானிகளும், தேசத்தலைவர்களும், ஆசார சீர்திருத்தக்காரர்களும் வெகு அரிய தியாகங்கள் புரியவேண்டியதாயிற்று என்பதை ஆராயுமளவில் மிக்க அதிசயமாயிருக்கும். காங்கிரஸ் என்ற ஒரு அகில இந்திய மகாசபை ஒரே நாளிலா, மகாத்மா காந்தியாம் ஒரே தலைவராலா இவ்வளவு வியாப்தியும், செல்வாக்கும் அடைந்திருக்கிறது என்று எண்ணமிடுவோரே நம்மில் அரிது. எனில், நாம் நமது சொந்த நாட்டுத் தேசபக்தர்களையும், அவர்களது செயல்களையும், ஜீவிய சரிதத்தையும் அறிய எண்ணங் கொள்ளாதது விசித்திரமன்று. தேசத் தலைவர்களின் ஜீவிய சரிதம் தேசத்தின் ஜீவிய சரிதமாகும். தேசத்தின் ஜீவிய சரிதத்தை அறியாதவர் தேசபக்தராதல் கூடாது. இக்கருத்துடனேயே இப்பகுதியில் பகவான் மதத்தை அவ்வப்போது சீர்திருத்த அவதரிப்பது போல் தேசத்தைச் சீர்திருத்த அவ்வப்போது தோன்றியுள்ள சில தேச பக்தர்களின் ஜீவிய சரிதங்களை வெளியிட உத்தேசிக்கின்றோம். முன்னதாக நந்தமிழ் நாட்டின் தற்போதைய பெருமைக்குப் பெரிதும் காரணராயிருந்த ஸ்ரீயுத ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களது சரிதத்தை ஈண்டு கவனிப்போம்.

ஐயரவர்கள் பெருமை.

தமிழ் நாட்டைத் தேசீய மெனும் பயிருக் கேற்றவாறு பண்படுத்தி அதில் தேசீய விதை யூன்றியவர் ஸ்ரீயுத ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களே யாவர். இன்று நாம் நமது தேசீய வாழ்வில் அப்பெரியார் புரிந்துள்ள தியாகங்களின் பயனையும் ஊழியங்களின் பயனையும் அனுதினமும் அனுபவித்தே வருகின்றோம். தற்போது நமது தேசீய முயற்சிக்கு உற்ற கருவிகளாயுள்ள பொது ஸ்தாபனங்கள் பலவும் அவர் ஸ்தாபித்தன வாகவும் அவர் தலைமை வகித்து நடத்தி

யனவாகவுந் தான் இருக்கின்றன. எனில், இத்தகைய பெரியாரை நாம் ஒரு நிமிஷமும் மறத்தல் அறமா? ஆங்கிலக் கல்வி வெகு ஆரம்பத்திலிருந்த அந்நாட்களில் அளவற்ற செல்வாக்கும், பண ஆதாயமும், கௌரவ சன்மானமும் மிகுந்து கண்களைப் பறித்து நின்ற உயர்ந்த அரசாங்கப் பதவிகளைத் தாம் ஒரு சர்வ கலாசாலைப் பட்டதாரியாயிருந்தும் இகழ்ந் தொதுக்கிவிட்டு எவரும் கண்ணெடுத்து நோக்காததும் பொதுஜன ஆதரவின்மையும் அரசாங்க அதிருப்தியும் மிக்கதுமான பத்திரிகைத் தொழிலை மேற் கொண்டாரெனில், நமது ஐயரவர்களின் தீவிர தேசாபிமானத்திற்கும் தியாக புத்திக்கும் வேறு அத்தாட்சி வேண்டுவதின்று. இக்காலத்தில் நாம் தாய்ப் பாஷை மூலம் கல்வி போதித்தல் வேண்டுமென்றும் ஜனங்களுக்கு இலவசக் கல்வியும், ராஜீய ஞானமும் ஊட்ட வேண்டு மென்றும் கூக்குரல் மிகுந்திருத்தலைக் காண்கிறோம். இற்றைக்குச் சுமார் நாற்பது வருஷங்கள் முன்னரே அத்தகைய கூக்குரலின் எதிரொலியைத் தமது இதயத்தே கேட்டவர்போல் ஸ்ரீமான் ஐயரவர்கள் பெருத்த கஷ்டநஷ்டங்களையும் அசௌகரியங்களையும் பொறுக்கத் துணிந்து அஞ்ஞான விருளில் ராஜீய விழிப்பொழிந்த பெருந் துயிலுற்றுக் கிடந்த பாமர கோடிகளைத் தட்டி யெழுப்பித் தமது சக்தியையும், கடமைகளையும் உணர்ந்து நடக்கச் செய்தலே தலை சிறந்த கடமையென்றும், அக்கடமையைத் தமிழ்ப் பத்திரிகை யொன்றாலேயே முடிக்க இயலுமென்றும் தீர வறிந்து ஆங்கில 'ஹிந்து'ப் பத்திரிகையை விட்டுச் சுதேசமித்திரனுக் கெனவே வாழ்நாள் இறுதிமட்டும் ஓயாதுழைக்கப் புகுந்தாரெனில், அவர் சீரிய தீர்க்கபுத்தி தான் என்னே! சுதேசியம் என்ற புனித கொள்கையை முதன் முதலாக நம் நாட்டவர் மனத்தே பிரதிஷ்டை செய்வித்தவரும் நமது ஐயரவர்கள் தானே. தமது முதல் பத்திரிகை முயற்சிக்கு சுயமதிப்பைக் காட்டுவதாகிய 'ஹிந்து' என்ற நாமஞ் சூட்டினார்; அடுத்து அச் சுயமதிப்பு மதம், நாடு, முதலாம் வரம்புகளைக் கடந்து பெருகிபதைக் குறிக்கும் 'சுதேச மித்திரன்' என்ற பெயரைத் தமது தமிழ்ப் பத்திரிகைக்குச் சூட்டினார். சுதேசிய நிதியையும் கைத்தொழிற் சம்பந்தத்தையும் அமைத்துப் பிற மாகாணங்களுக்கெல்லாம் நம் மாகாணம் வழி காட்டச் செய்தார். ஆசார சீர் திருத்தத்திலோ நமது ஐயர் மீண்டும் முதலணியில் நின்று 'சொல்லுவ யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற பொய்யா மொழியையும் பொய்யாக்கித் தம் குடும்பத்திலேயே அச் சீர்திருத்தத்தைச் செய்து காட்டினார். அவரது வாழ்க்கையை ஊன்றிக் கவனிப்போருக்குத் தாம் முன்னதாக இந்தியன், பின்னர் ஹிந்து, பின்னரே பிராமணன் என்ற திவ்விய கோட்பாடுடன் ஒழுகிவந்திருக்கிறாரென்பது நன்கு புலனாகும். இத்தகையாரின் உதாரணத்தை மட்டில் அவர் பின் வந்த ராஜீய வாதிகளும், பத்திராசிரியர்களும் பின் பற்றி வந்திருந்தால் நமது தமிழகத்தில் பிராமணர் பிராமணரல்லாதார் போன்ற பூசல்கள் தலையெடாது ஒற்றுமை நிலைத்திருக்குமே! நமது சமூக வாழ்விலும் ராஜீய வாழ்விலும் நமது

ஐயரவர்கள் முன்னின்றுழையாத துறை தானுமுண்டோ? சர்க்காரின் கோபத்திற்காளாகிச் சிறை வாசம் புகுதலும் தேசபக்தருக்கு ஒரு யோக்கியதை யெனில் ஐயரவர்களுக்கும் அக்கௌரவமும் யோக்கியதையும் வாய்த்த தன்றோ?

பிறவியும் கல்வியும்.

மாங்கன்றை நட்டுவிட்டு உடனே அதன் பழத்தை உண்ண முடியாது. சில காலம் நாம் பொறுத்திருக்க வேண்டும். இங்ஙனமே நமது ஐயரவர்கள் போன்ற தேசத்தலைவர்களுடைய ஊழியத்தின் பயனை அவர்களுக்குப் பிற்காலத்தில் தான் சீர்தூக்கி மதிப்பிட்டு அனுபவிக்க முடியும். அன்றி நாட்டின் தற்கால நிலையில் நன்மைக்கும் தீமைக்கும் எவ்வளவு தூரம் அவர்கள் காரணர் என்பதை அளவிட்டு அவர்களைப் போற்றவோ தூற்றவோ செய்கிறோம். ஆகவே நமது ஸ்ரீமான் ஐயரவர்கள் செய்த ஒவ்வொரு காரியமும், பேசிய ஒவ்வொரு பேச்சும் தற்காலம் நமது ராஜீய வாழ்வுடன் எவ்வளவு சம்பந்தப் பட்டிருக்கின்ற தென்பதைச் சுருக்கமாய்க் கவனிப்போம். இதற்கு முன்னதாக ஐயரவர்களின் ஜனனம், பாலியம், கல்வி முதலியவற்றை வெகு சுருக்கமாய்க் கூறுவோம்.

ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் 1853-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் தஞ்சை ஜில்லா திருவையாறு என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் பிறந்தனர். அவரது தகப்பனார் கணபதி ஐயரென்பார் சிறந்த பிராம்மணோத்தமராகவும், தென்மொழி வடமொழிகளில் வல்லுநராகவும், அவ்வூர் முனிசீப் கோர்ட்டு வக்கீலாகவும் விளங்கியவர். அன்னை தருமாம்பாள் என்பவர் தம் பெயருக்குற்றவாறு தரும நெறி தவறாத உத்தமி. ஐயரவர்களுக்கு மூத்த சகோதரர் மூவரும் இளைய சகோதரர் மூவரும் சகோதரிகள் இருவரும் உண்டு. அவர் தாலூகாப் பள்ளியிலே கல்வி பயின்று 1871-ல் எப். ஏ. பரீட்சையில் தேறிக் கிராமப் பள்ளியொன்றில் பதினாறு ரூபாய் சம்பளத்திற்குத் தலைமை உபாத்தியாயராக அமர்ந்தார். பின் 1874-ல் சென்னைக்கு வந்து உபாத்தியாயர்களது போதனாமுறைப் பாடசாலையில் சேர்ந்தார். அடுத்த வருஷம் ஒரு மிஷன் பாடசாலையிலும் 1877-ல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் சேர்ந்து உபாத்தியாயராக விருந்தார். இச்சமயத்தில் தான் ஐயரவர்கள் 'ஹிந்து' பத்திரிகை ஆரம்பித்து நடத்தத்தொடர்ந்து துணை புரிந்து வந்த ஸ்ரீமான் வீரராகவாசாரியார் நண்பரானார். ஸ்ரீ ஐயர் ஒழிந்த வேளைகளில் படித்து 1877-ல் பீ.ஏ. பரீக்ஷையில் தேறினார். பின் சென்னை திருவல்லிக்கேணியில் தற்போது ஹிந்து ஹைஸ்கூல் என்று வழங்கும் பள்ளியில் தலைமை ஆசிரியராக அமர்ந்தார்.

'ஹிந்து'வின் எழுச்சி.

சிறுவர்களுக்குக் கல்வி போதித்தலாகிய நமது ஐயரவர்களின் ஊக்கம் தினே தினே விகசித மடைந்து தம் நாட்டு மக்களுக்கே ராஜீயம், சமுகம் முதலிய துறைகளில் கல்வி போதிக்கவேண்டு மென்ற ஊக்கமாகவும் தாபகமாகவும் மாறியது. அக்காலம் இவருக்குற்ற நண்

பர்களாயிருந்த ஸ்ரீமான்கள் எம். வீரராகவா சாரியார், டி. டி. ரங்கா சாரியார், பி. வி. ரங்காசாரியார், டி. கேசவராவ் பந்துலு, என். சுப்பா ராவ் பந்துலு முதலிய ஐவர் அவரது எண்ணத்தைப் பாராட்டி உடன் நின்றுழைக்க முன் வந்தனர். 1878-ம் வருஷம் செப்டெம்பர் மீ "ஹிந்து" என்ற அழகிய பெயருடன் வாரப் பதிப்பொன்று துவக்கப்பட்டது. அதன முதலிலக்சப் பத்திரிகையை வெளியே அனுப்புவதற்குத் தபால் முத்திரை வாங்குவதற்குக் கூட கையில் போதிய பணமில்லாது நமது ஐயர் ஒன்றேமுக்கால் ரூபாய் கடன் வாங்கினாரெனில், அப்பத்திரிகைக்கிருந்த மூல தனத்தின் வளத்தை நாம் கூறத்தேவையில்லை! ஆயினும் கடவுள் அருளாலும், தாய் நாட்டின் நல்வினையாலும் தொடர்ந்து வந்த சில சம்பவங்களால் பத்திரிகை வெகு விரைவில் கீர்த்தியும், பொதுஜன ஆதரவும் அடைய முடிந்தது. ஸர். முத்துஸ்வாமி ஐயர் ஹைகோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டதை ஒரே குரலாய் எல்லா ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும், இந்தியப் பத்திரிகைகள் ஒன்றிரண்டும் கண்டித்து எதிர்ப்பிரசாரம் ஆரம்பித்த போது, "ஹிந்து" அவைகளின் வாதங்களைத் துணிவாய் எதிர்த்து ஸர். முத்துஸ்வாமி ஐயரின் பாத்தியங்களையும் நியாயங்களையும் எடுத்துக் காட்டி அவற்றின் வாயை மூடியது. பின் செங்கல்பட்டு தாசில்தார் ஒருவருக்கும் குடிகளுக்கும் ஏற்பட்ட ஒரு குழப்பத்தில் நமது 'ஹிந்து' குடிகளின் கட்சியை எடுத்தோதியதால், கவர்ன்மெண்டார் அக்குழப்பத்தை மறு விசாரணை செய்து தாசில்தாருக்கு இரண்டு வருஷம் கடுங்காவல் சிட்சை விதிக்க நேர்ந்தது. மீண்டும், 1881-ல் சேலத்தில் மூண்ட ஒரு பெருங் கலகத்தின் பயனாகத் தற்போது பிரமுகராக விளங்கும் ஸ்ரீமான் ஸி. விஜயராகவா சாரியாருக்குப் பத்து வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்டது. நாடெங்கும் ராஜாங்கத்திற்கு விரோதமாக ஆத்திரமும் கிளர்ச்சியும் மிகுந்து வருகையில், நமது ஐயரவர்கள் ஸ்ரீ விஜயராகவா சாரியாரும், அவருடன் தண்டனை யடைந்த குடிகள் பலரும் குற்றவாளிகளல்லவென்பதற் குற்ற ஆதாரங்களை 'ஹிந்து' பத்திரிகை மூலமாக வெளியிட்டார். சென்னை ஹைகோர்ட்டாரும் வழக்கு அப்பீலுக்கு வந்தபோது, ஹிந்து கூறியவற்றை உண்மையெனக்கொண்டு ஸ்ரீ விஜயராகவா சாரியாரையும், தீபாந்திர சிட்சை முதலான கொடிய தண்டனைக ளடைந்த வேறு பலரையும் மொத்தமாக விடுவித்து விட்டனர். இங்ஙனமாக "ஹிந்து" பத்திரிகையால் ஜனங்களுக்கு மிகுந்த நன்றியும் விசுவாசமும் வெகு விரைவில் ஏற்பட்டுவிட்டது.

'சுதேசமித்திரன்' எழுச்சி.

ஸ்ரீ ஐயர் 'ஹிந்து'வால் ஏற்பட்ட உத்ஸாகத்தையும் தன்னம்பிக்கையும் அஸ்திவாரமாகக்கொண்டு அது வெளியான நான்காவது வருஷம் தேசமாதாவுக்கு இரண்டாவது கண் ணெனத் தக்க சுதேசமித்திரனை 1882-ல் துவக்கினார். ஆனால் 'ஹிந்து' வைவிட்டுப் பிரிந்த 1898-ம் வருஷம் வரை சுமார் பதினேழு வருஷ காலம்

தமிழ்நாடு ஆவணக் காப்பக
சென்னை-600 008

ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்

“சுதேசமித்திரன்”பால் ஐயரவர்கள் தமது முழுக் கவனத்தையும் செலுத்த முடியவில்லை.

அகில இந்திய பிரதாபம்.

சென்ற பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைப்பகுதி நம் தேச சரித்திரத்தில் வெகு முக்கியமான கட்டமாகும். அப்போது நமது தென்னாட்டில் ஸ்ரீயுத சுப்பிரமணிய ஐயர் தோன்றியது போல் வங்காளம், பம்பாய முதலாம் மற்ற பாகங்-ளிலும் பல தேசீயத் தலைவர்கள் தோன்றித் தாய்நாட்டைத் துயிலெழுப்பியதுமன்றி, விடுதலை யியக்கத்திற்கும் அடிகோலி னார்கள். இங்ஙனம் ஒருமைப்பாடான நோக்கம் வாய்ந்த தலைவர்கள் 1884-ல் இந்திய மக்களுக்கு எண்ணிறந்த நன்மைகளைச் செய்து அவர்களது மனத்தே என்றும் கோயில் கொண்டவரான ராஜப்பிரதிநிதி ரிப்பன் பிரபுவை அவர் தாய்நாட்டிற்கு வழியனுப்பக் கூடியவர்கள் நமது ஐயரவர்களும் மற்றும் சிலரும் செய்த பிரேரணைகளின் மேல் இப்போது இவ்வளவு பிராபல்ய மாகவும் தேச நன்மைக்கு இன்றியமையாத தாகவுமிருக்கிற காங்கிரஸ் மகாசபையை ஆரம்பித்து வருஷ முடிவில் ஒவ்வொரு வருஷமும் நடத்திவருவதென்று நிச்சயித்தனர். 1885-ல் பம்பாயில் ஸ்ரீ உமேச சந்திர பானர்ஜியின் தலைமையில் முதன் முதலாகக் கூடின காங்கிரஸின் முதன் முதலான தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசும் கௌரவம் நமது ஐயரவர்களுக்கே கிடைத்தது. அது முதலாக ஸ்ரீ ஐயருக்கு இந்தியா முழுவது மன்றி இங்கிலாந்திலும் கீர்த்தி பரவத தொடங்கியது. ‘ஹிந்து” பத்திரிகையும் சென்னை மாகாணமன்றி மற்ற மாகாண விவகாரங்களிலும் கவலை காட்டி எழுதிவந்ததால் வடநாட்டிலும் ஜனங்கள் ஐயரவர்களை மனத்திற் கொள்ளவும் போற்றவும் சந்தர்ப்ப மேற்பட்டது. அன்றிச் சுதேச சமஸ்தானங்களும் தேசீய ஊக்கத்தில் பின்னிற்க முடியாதென்ற கொள்கை யுடையவ நாதலால் ஸ்ரீ ஐயர் இந்தூர், பரோடா முதலான வடநாட்டு சமஸ்தானங்களிலும், மைசூர், ஹைதராபாத், திருவாங்கூர் முதலான தென்னாட்டு சமஸ்தானங்களிலும் நடைபெறும் விவகாரங்களையும் ஊழல்களையும் அடிக்கடி வெளியிட்டு வந்தார். அன்றி 1886-ல் பப்ளிக் சர்விஸ் கமிஷன் (Public Service Commission) முன்பு இந்திய சிவில் உத்தியோகஸ்தர்களது கட்சியை ஐயரவர்கள் எடுத்துரைத்த திறமையாலும், அடுத்த 1887-லே காங்கிரஸ் மகாசபை சென்னைக்கு வந்தமையாலும், 1889-ல் ‘ஹிந்து’வைத் தினசரிப் பத்திரிகை யாக்கியதன்றி ஆசார சீர்திருத்தத்தைத் தீவிரமாக போதிக்கத் தொடங்கித் தமது குடும்ப விவகாரத்திலேயே வெகு தீரமாக அதை நடத்திக் காட்டியதாலும் அவருக்குத் தாம் ராஜீய வாழ்வு தொடங்கிய பத்து வருஷ காலத்திற் குள்ளாகவே தேச முழுவதும் அழியாப் புகழும் அகில இந்தியத் தலைவர்களுள் ஒருவர் என்ற பதவியும் சித்தித்து விட்டது.

(தொடரும்.)

கந்தர் அந்தாதி.

ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A., எழுதியது.

எம்மை யாளும் முருகக் கடவுளைத் தலையாரக் கும்பிட்டு வாயாரப் போற்றி செய விரும்பின் தோத்திர நிறைந்த சொற்றொடர்களும் பொருள் நிறைந்த வாழ்த்துக்களும் ஸ்ரீ அருணகிரி நாத சுவாமிகளுடைய திருப்புகழாதிய நூல்களுள் நிரம்பக் கிடக்கின்றன. அந்நூல்களுள் ஒன்றாகிய கந்த ரந்தாதியி லுள்ள அருமைத் தோத்திரங்களையும் அருணகிரியார் முருக பிரானை வேண்டிக்கொள்ளும் விண்ணப்பங்களுட் சிறந்தன சிலவற்றையும் கீழே காட்டுவோம்.

I. செவ்வந்தி மாலையையுங் கருங்குவளை மாலையையும் புனைந்திடும் புயங்களையுடைய முருகா! யமன் எனது உயிரைக் கண்ணமிட்டுக் கொள்ளை கொண்டு போகாதபடி என் உயிரைக் காக்கும் வண்ணம் என் புந்தியில் நீ திருக்கரத்து வேலுடன் வந்து வீற்றிருத்தல் வேண்டும்.

II. மாயூர வீர! அரிமருக! சூரனைச் செற்றவனே! நமது ஊர், நமது சீர் என்று அகந்தை கொண்டவர் பால் யான் சேராதிருக்க அநுக்கிரகிக்க வேண்டும்.

III. திருச் செங்கோட்டு மலைக்கு அதிபனே! உன் திருப்புகழைக் கேட்டதினால் உனது கோழிக்கொடி பயப்படாதே என்று என்னை அடிமை கொண்டது; உனது வேலாயுதம் பிறவிக்கு வித்தாகிய ஆசையை ஒழித்து விட்டது.

VI. மனமே! நீ சேது முதலிய தீர்த்தங்களில் ஆடுதல் வேண்டும் என்னும் எண்ணங் கொண்டு வீணாக அலையாதே. முருக பிரான் வீற்றிருக்கும் திருச் செந்திற்பதியைக் கருதித் துதித்து உய்வாயாக:

(குறிப்பு:) இதனால் திருச் செந்தூரின் பெருமை நன்கு விளங்கும். இத்தலத்துள்ள சமுத்திர தீரத்துக்கு வதனாரம்ப தீர்த்தம் என்று பெயர். கலிங்க தேசத் தரசன் மகளாகிய கனக சுந்தரி என்பவள் குதிரை முகமுடைய ஹயக்ரீவ முனிவரைக் கண்டு அவமதித்துச் சிரித்தனள். முனிவரும் நீ மறு பிறப்பிற் குதிரை முகத்துடன் பிறக்கக் கடவை எனச் சபித்தனர். இச் சாபத்தைக் கேட்ட கனக சுந்தரி அவர் பாதத்தில் வீழ்ந்து பிழையைப் பொறுக்கும்படி வேண்ட அவரும் நீ புண்ணிய தீர்த்தம் ஆட அம் முகம் மாறி நன் முகம் பெறுவாய் எனக் கூறினர். கனக சுந்தரியும் மறு பிறப்பிற் பாண்டியன் மகளாகப் பிறந்தனள். முகம் மாத்திரம் குதிரை முகம். ஏனைய அங்கங்கள் வெகு அழகாய் அமைந்தன. அரசனும் கவற்சியுற்று வருந்தினன். பெண்ணுக்கு அங்கசுந்தரி எனப் பெயரிட்டனன். ஒரு நாள் அரசன் கவலைப படும்போது "புண்ணிய தீர்த்தம் ஆடினால் நன்மை வரும்" என அசரீரி கேட்டது. அவ்வாறே பாண்டியன அங்கசுந்தரியைச் சேது முதலிய தீர்த்தம் ஆட அனுப்பினன். அவளும் பல தீர்த்தங்களில் ஆடி ஈற்றில் திருச்செந்தூரிற் சமுத்தி

ரத்தில் ஸ்நானஞ்செய்து எழுந்தபோது குதிரை முகந் தொலைந்து சுந்தர முகம் எய்திப் பொலிவுற்றனள். இதனை "மகள் வாசிமுகைத் தோ" எனக் கந்தரந்தாதியில் (51) அருணகிரியார் குறிப்பிட்டனர். இங்ஙனம், மூர்த்தி, தலம், தீர்த்தம் எனப்படும் மூன்றும் மஹா விசேஷமாய் அமைந்துள்ள திருச்செந்தூரை ஸ்ரீ அருணகிரிநாதர் பெரிதுஞ் சிறப்பித்துக் கூறியுள்ளார். "மஹா புநிதந் தங்குஞ் செந்தில்" என்றார் ஓரிடத்து; "திருச் செந்தில் உரைத் துய்ந்திட" என்றார் பிறிதோ ரிடத்து; "செந்தில் என் றவிழ உளம்" என்றார் பின்னர் ஓரிடத்து; செந்தில் உணர்ந் துணர்ந் துணர்வுற" என உபதேசித்தார் மற்று மோரிடத்து.

V. தெய்வயானை தாசனே! சனன மரணத்துக்கிடமாய் எலும்பு முதலிய கூடிய இவ் வடற்பை தீயில் வேகுமுன் உன்னைத் துதித்து வழிபடும் புத்தி எனக்குக் கூடும்படி அருள் செய்வாயாக.

VI. எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே! ஐம்பொறிகளை உடைய என் உடல் வேகின்றது நிச்சயம். எருமைக் கடாவை வாகனமாக உடைய யமன் என்னைக் கொண்டு போய் "வாயைத் திற" என்றும், யான் செய்த பாவத்திற்காகத் "தீயை (நெருப்பை) உண்" என்றும், "நற்றவஞ் செய்யாத பாவியே" என்றும் சொல்வது நிச்சயம். ஆதலால் இனியாவது பிரமன் கையில் யான் சிக்காத வண்ணம் என் பிறவி வேரை அறுத்துத் திருவருள் செய்வாயாக.

VII. மயில் வாகனனே! செவ் வேலவனே! இலஞ்சிப் பதியோனே! பிரமதேவன் எழுதிய விதியின் பயன் தவறாது என்று தெரிந்திருந்தும் பின்னும் எனது அறிவு மூவாசையை ஒழிக்க முயலுவ தில்லை. இஃதென்ன பாவம்!

VIII. வள்ளி நாயகனே! திருமால் மருகோனே! உனது திருவருட் பிரகாசம் என்னிடம் சேர்ந்த வுடன் 'பொறுமை' எனப்படும் பாணம பட்டுக் கோபம் முதலிய தீக்குணங்களாம் மிருகங்கள் அழிந்து பட்டன.

IX. குமாரக் கடவுளே! உன் அருளின் திறத்தைக் கண்டறிந்த என்னை இருவினைச் சேற்றினுட் படுத்த லாகுமோ?

X. திருச் செந்திற் பதியோனே! சித்தம் நிலையற்றவர்கள் வெளிப் பூஜை செய்து மோக்ஷம் அடையத் திரிவது என்னே?

XI. கிரௌஞ்ச கிரியைப் பிளந்த பெருமானே! என் உடல் கெடும் கடைத்தினத்தில் உனது திருவடியே என் சிந்தையை வைக்கும் அடைக்கலத் தானமாகும்.

XII. ஒரு தும்ம லுண்டாகும் போதுங் "குமரா சரணம்" எனக் கூறிவீர்களாயின் உய்வீர்கள்.

தலனீபேகம் அல்லது நாயக பக்தி

(C. S. ஜகதீசசுந்தரம் எழுதியது.)

டில்லி பாக்ஷாவுக்கு தலனீ பேகம் என்றொரு உத்தம மனைவி இருந்தாள். அவள் கற்பிற் சிறந்தவள்; கணவனே தெய்வமெனக் கொண்டவள்; அவனைத் தன் மனத்தினின்றுங் கணமும் பிரியாதவள்.

"அன்னை தயையும, அடியாள் பணியும் மலர்ப்
பொன்னின் அழகும், புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும், விறன்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்."

என்றவாறு பெண்களுக்கு இருக்கவேண்டிய உத்தம லக்ஷணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவள். இவளுடைய தமையன் பாக்ஷாவிடம் சேனாதிபதி உத்தியோகத்தை வகித்து வந்தான். பாக்ஷாவுக்குத் தன் சேனாதிபதி தன் மனைவிக்குத் தமையன் என்று தெரியாது. சேனாதிபதி தன் தங்கையைப் போல நற்குணம் வாய்ந்தவனல்லன். மிகவும் வஞ்சகக் குண முடையவன். அவன் மனதில் 'எவர் குடியைக் கெடுக்கலாம்; எவர் பொருளைப் பறிக்கலாம்' என்ற எண்ணமே நிறைந்திருக்கும். கடைசியில் இவன் தன் எஜமானனுக்கே துரோகஞ் செய்ய ஆரம்பித்து விட்டான். பாக்ஷாவின் அரசைக் கவர எண்ணங் கொண்டு அதற்கு வேண்டிய முயர்சிகளை இரகசியமாக நடத்தத் தொடங்கினான். இதை யெல்லாம் வெளிக்காட்டாமல் பாக்ஷாவை அங்கிலேயர்மேல் படை யெடுக்கச் சொன்னான். பாக்ஷா இவனுடைய துரோக சிந்தையை அறியாமல் படை யெடுக்கத் தொடங்கினான். தலனீ பேகம் மாத்திரம இவனுடைய கொடிய எண்ணத்தை அறிந்து கொண்டாள். இதைத் தன் கணவனிடம் கூறினாலோ தன் தமையனைக் கொன்றுவிடுவான். அன்றியும் 'அத்தகைய கொடியவனுடைய தங்கை யல்லவா இவள்' என்று தன்னை வெறுத்துத் தள்ளிவிடுவான். அப்படி வெறுத்துத் தள்ளினால் அவனை விட்டு எப்படிப் பிரிந்திருப்பது? இது ஆகாத காரியமன்றோ? அதனால் அவள் எப்படி யுத்தத்தைத் தடுப்பது என்று சிறிது யோசித்தாள். பிறகு தானே ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். இருட்டின வுடனே பல்லக்குக் கொண்டுவரச் சொல்லிக் காச்மீர சால்வையால் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் போர்த்துக் கொண்டு பாக்ஷாவுக்குத் தெரியாமல் பல்லக்கேறிச் சென்றாள்.

நேராகத் தன் தமையனுடைய விடுதிக்குச் சென்று அவனைக் கண்டு படையெடுக்க வேண்டாம் என்று கெஞ்சினாள். எவ்வளவு பரிதாபமாகக் கெஞ்சியும் என்ன பிரயோசனம்! முரட்டுத் தமையன் அவளுடைய வேண்டு கோளுக்கு இணங்கவே இல்லை. "ஆகா! என்ன இவனுடைய கடின ஹிருதயம்! இவன் மனம் இளகாப் பாறையோ! நான் எவ்வளவு கெஞ்சிக்கேட்டும் இவன் இரக்கங்கொள் ளவில்லையே! என் செய்வது!" என்று கலங்கி நின்றாள். அப்பொழுது தமையன் அவளை நோக்கி, "தலனீ! ஏன் வருந்துகிறாய்? பாக்ஷா போனால் போகிறான். அவன் கெட்டான் கழுதை! ஒழிந்தது சனி

யன் என்று தலை முழுகிவிட்டு இன்னொருவனை மணந்து சுகமாயிரு" என்றான். இக்கொடிய சொல் அவள் காதில் ஈயத்தை உருக்கி விட்டது போல் இருந்தது. அவள் பதை பதைத்து, "அடா, படுபாவி! துரோகி! நீ என் உடன் பிறந்தவன் அல்லன். இன்று முதல் நான் உன் தங்கை என்று எண்ண வேண்டாம். உன்னைத் தமையன் என றெண்ணுவதே மஹா பாபம். எஜமானத் துரோகம் உன்னை லேசில் விடாது. பெண்களுக்குக் கணவனே வழிபடு தெய்வம். உற்றார் பெற்றார் எல்லாம் அவனே. கணவனைப் பற்றி யாரேனும் இழிவாகச் சொன்னால் அவர்கள் முகத்திலே விழிக்கமாட்டாள். அதுவே பதிவிரதையின் லக்ஷணம். உன் எதிரில் நிற்பதே பெரும் பாவம். இதோ உன்னைவிட்டு ஒழிகிறேன்" என்று புறப்பட்டாள்.

அவன், தன் வஞ்சகச் செயலைத் தங்கை பாக்ஷாவிடம் தெரிவித்து விடுவாளோ என்று பயந்தான். அவளை அன்றிரவு வெளியில் விடாமலிருக்கும்படி காவற்காரருக்கு உத்தரவிட்டான். காலையில் போனால் பாக்ஷா இவளைக் கொன்று விடுவான் என்பது அவனுடைய எண்ணம். ஏனெனில் துருக்கர் வீட்டில் மனைவி வீட்டை விட்டு வெளியில் செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் மறுபடியும் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்.

தலனீ அங்கு அகப்பட்டுக் கொண்டு இருதலைக் கொள்ளியின் இடைப்பட்ட எறும்பு போலத் தவித்துக் கொண்டிருந்தாள். சிலர் டில்லி பாக்ஷாவிடம் போய் தலனீ அன்னியன் மனையில் இருக்கிறாள் என்று கூறினார்கள். பாக்ஷா கோபங்கொண்டு, 'அந்தத் தூர்த்தையை உடனே விஷமிட்டுக் கொன்று விடுங்கள்' என்று உத்தரவிட்டான். உடனே தலனீயிடம் சென்று அரசனுடைய உத்தரவைச் சொல்ல அவள் விஷத்தை வாங்கிக் கொண்டு, "நான் நிரபராதி; நான் என் கணவருக்குத் துரோகம் செய்யவில்லை. அவருக்கு எது விருப்பமோ, அது எனக்கு விருப்பம். அவருக்கு எது வெறுப்போ அது எனக்கும் வெறுப்பு. அவருக்கு நான் இருப்பது வெறுப்பாயிருந்தால் அது எனக்கும் வெறுப்புத்தான். அவருக்கு நான் இறப்பது விருப்பமாயிருந்தால் அதுவும் எனக்கு விருப்பந்தான்; அவர் என்னை விஷம் குடிக்கச் சொன்னால் இதோ குடிக்கிறேன். இதை அவர் பார்த்துச் சந்தோஷிக்கக் கொடுத்து வைக்கவில்லையே" என்று கூறி, தன் கணவனைத் தூஷிக்காமலும், வெறுக்காமலும், இறக்கப் போகிறோமே என்ற விசனமில்லாமலும், அதைரியப் படாமலும், குன்றாத மாங்கல்யக் கோமளமாக இறக்கப் போகிறோம் என்ற சந்தோஷத்தினால் முகத்தில புன்னகை தவழ விஷத்தை உட்கொண்டு விட்டாள். இத்தகைய பெண்மணிகளை நம் பாரத மாதா காலந்தோறும் பெற்றுக் கொண்டே வருகிறாள். அவர்களின் உயரிய ஒழுக்கங்களை நம் பெண்மணிகள் பின் பற்றவேண்டும்.

தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய் யெனப் பெய்யும் மழை.

யசோதரன்.

(470—ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாயம்—III.

நஞ்சினு லிறந்த யசோதரன் விந்த மலையிலுள்ள ஓர் மஞ்ஞை யின் வயிற்றில் முட்டை வடிவங் கொண்டு தங்கினன். ஆண்டுறை யும் வேட னொருவன் அம்மயிலைக் கண்டு, அதனைத் தன் கையம்பால் எய்தான். அப்பொழுது அம்மயிலின் வயிற்றிலிருந்த அண்டம் வெளிப்பட்டது. அதனை அவன் தன் மனையாளிடங் கொடுத்துக் கோழி முட்டைகளோடு அதனையும் வைத்து வளர்த்துவர ஏற்பாடு செய்தான். அவளும் அவ்வாறே செய்து வருவா ளாயினள்.

மகனைப் போலவே இறந்த தாய் சந்திரமதியும் உச்சயினி நகரத்திலுள்ள பறையர் சேரியில் நாயாகப் பிறந்து வளர்ந்து கொண்டிருந்தாள். அந்நாய் கண்டோர் விரும்பும்படி மிகவும் அழகாயிருந்தது. அதுபோலவே மயிலும் பொன்னிறத்தோகை யுடன் பொலிவு பெற்று விளங்கியது. அவற்றை அன்போடு வளர்த் தவர்கள், அவைகளின் பேரெழிலைக் கண்டு, இவை நமது இறை வன் காண்டற்குரிய காட்சிப் பொருளா'மென எண்ணி, அவைகளை யசோமதி அரசனிடம் சேர்த்தார்கள். அரசன் அவைகளின் வனப் பைக்கண்டு அதிசயித்து, அவற்றை வளர்த்தவர்களுக்குச் சன்மான மளித்தான். பின்பு அவைகளை அரண்மனையிலேயே வைத்துச் சிராக வளர்த்து வரும்படி அரசன் பிராணி காப்பாளர்க்குக் கட்டளை யிட்டான்.

பண்டு பார்த்திபனு யிருந்த பொழுது தன்னைக் கண்டு அஞ்சி எழுந்து வாய்பொத்தி வினயமாக நின்றுரிடத்து மஞ்ஞையாயினபின் அஞ்சி அடக்கமாய் நிற்கும்படி யாயிற்று. மாதர்கள் அடி வருடப் பஞ் சணை மீது பள்ளி கொண்ட மன்னன், மயிலானபின் 'அச்சத்தோடு தோகைகளைச் சுருக்கிக் கொண்டு மண்ணில் உலாவலாயிற்று. ஏந்தி ழையார பொற்கலத்தில் அளித்த பாலன்ன முண்ட அரசன் இப்பிறவி பெற்றபின் அரண்மனை வெளியிடத்துள்ள இரையைத் தேடிச் செல்லும் இழிதகைமை யாயிற்று. முன்னம் அரசியாயிருந்த சந்திர மதி நாயானபின் பிறருண்டு கழித்த உச்சிட்டத்தையும், இழிந்த பிறவற்றையும் தின்று வயிறு வளர்க்குங்கதியாயது; கண்டோர் கல் லெறியக் கால்தூக்கி ஓலமிட்டோடும் துன்ப நிலையாயது; அகழியின் நீரருகிலும் அழுக்குநீர் தங்கும் சாக்கடைகளி னருகிலும் சஞ்சரிக் கும் இழிவாயது. இது பூர்வ' வினையன்றோ?

நல்வ தத்தொ டறத்திற நண்ணலர்
கொல்வ தற்குள முன்செய் கொடுமையான்
ஒல்வ தற்கரு மாதுய ருற்றனர்
வெல்வ தற்கரி தால்வினை யின்பயன்.

இவை யிரண்டும் இங்ஙன மிருக்க, ஓர் நாள் அரண்மனையின் மணி மண்டபத்திலே அமிர்தமதியும் அஷ்டபங்கனும் மதன கேளி விலா

ஸத்திலாழ்ந்து களித்துத் திளைத்திருந்தனர். அச்சமயத்தில் அரண்மனையில் வளர்ந்து கொண்டிருந்த மயிலானது தற்செயலாய் அங்கே வந்தது. அதற்கு அப்பொழுது முற்பிறப்பின் உணர்வு வரவும், முன் காதலியாயிருந்த அமிர்தமதியின் தீச்செய்கையைக் கண்டு சகியாமல், உடனே அது விரைந்து சென்று அஷ்டபங்கனது கண்களைக் கொத்தி யழித்தது. அதனைக் கண்டதும் அமிர்தமதிக்குக் கோபமுண்டாயிற்று. உடனே கையில் ஒரு கல்லையெடுத்து அம்மயிலின் மீது வீசினாள். அக்கல்லும் குறி தப்பாது மயிலின் கழுத்திற் பட்டது. அது அக்கணமே கண்டகதப் பிராணனாகி மண்ணிற் சாய்ந்து மாண்டது. அதனைக் கண்ணுற்ற முன் சந்திரமதியாயிருந்த நாயானது அம்மயிலை வாயிற் கௌவிக் கொண்டு போய் அரசன் யசோமதி முன் போட்டது. அரசன் அதனைக் கண்டு மயிலின் மீதிருந்த பிரியத்தினால் 'இந்த நாயே இம்மயிலைக் கொன்றிருக்க வேண்டு' மென்றெண்ணி ஆத்திரத்துடன் அந்நாயைப் பலகையாலடித்துக் கொன்று விட்டான். முற்பிறவியின் மூளாவிரோதம் இப் பிறப்பிலும் மூண்டது முன்வினைப் பயனன்றோ?

மன்னனாயிருந்து பின்பு வினையின் காரணமாக மஞ்ஞையாகப் பிறந்து, அமிர்தமதியின் கைக்கல்லால் மாண்ட அம்மயிலானது, தொலையா தீவினைத் தொடர்பால் விந்தகிரியை யடுத்த வனத்தில் முள்ளம் பன்றியாய் வந்து பிறந்தது. பண்டு சந்திரமதியெனும் அரசியாயிருந்து பின்பு நாயாய்ப் பிறந்து அரசனால் மாண்ட அதுவும் அதே காட்டில் கரும்பாம்பாய் வந்து உற்பவித்தது.

இவை இரண்டும் ஒரே காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற காலத்து ஓர் நாள் சூகரம் இரைக்காக எங்குந் தேடியலைந்தது. ஒன்றும் கிடைக்கவில்லை. பசியினால் அது அங்குமிங்கும் பார்த்து அலைந்து கொண்டிருக்கும் பொழுது மேற்கூறிய கரும்பாம்பு அதனைக் குறுக்கிட்டது. உடனே அது அதனைப் பிடித்து இரையாக்கிக் கொண்டது. சின்னாட்குப் பின் அப்பன்றியும் கரடியொன்றிற்கு இரையாயது.

இங்ஙனம் மாண்ட பன்றி உச்சயினி நகருக்கருகே ஓடும் கிருப்பிரை எனும் நதியில் உலோகிதம் எனும் ஓர் அழகிய மீனாய்ப் பிறந்தது. பன்றிக் கிரையாய கரும்பாம்பும் அதே ஆற்றில் முதலையாய் வந்து உற்பவித்தது. அவை இரண்டும் அந்த நதியில் நீந்தி வாழ்கின்ற காலத்து ஓர் நாள் அரண்மனையிலிருந்து தாதி யொருத்தி வந்து அந்நதியி லிறங்கி நீராடினாள். நதியிலிருந்த அம்முதலை அவளுடைய காலை பிடித்திழுத்துக் கொண்டுபோய்க் கொன்று தின்று விட்டது. அதனை யறிந்த யசோமதி மன்னன் அம் முதலையைப் பிடித்துக் கொன்று விடும்படி கட்டளை யிட்டான். அங்ஙனமே வலைஞர்களும் அந்நதிக்குச் சென்று வலை வீசி அதனைப் பிடித்துக் கொன்று விட்டார்கள். இறந்த அம்முதலை அந்நகரிலே யுள்ள பறையர் சேரியில் ஓர் ஆடாகப் பிறந்தது. முன்னம் முதலையைப்

பிடிக்க வீசிய வலையிலேயே லோகித மெனும் மீனும் அகப்பட்டுக் கொண்டது. அது மிக்க அழகா யிருந்தமையால் அதனை வலைஞர் கள் அரசனிடங் கொண்டு போய்க் காட்டினர். அப்பொழுது அரசன் அருகிருந்த அந்தணரிற் சிலர் அம்மச்சத்தினது அழகைக் கண்டு, "இது அரசன் செய்யும் சிரார்த்த கர்மத்திற்கு உரித்தெண" மொழிந்தனர். அரசன் அங்ஙனமே செய்ய அந்தணர், "யசோ மதி மன்னன் இங்கில வுலகில் நீடு வாழ்க; மன்னன் தந்தை யசோ தரன் துறக்கத்தில் இன்புற்று வாழ்க" வென்று ஆசி கூறினர். சிரார்த்த கர்மத்தில் அம்மச்சம் பூர்வ பிறப்புணர்ந்து, அந்தணர்

தின்று தின்று துறக்கத் திருத்துதல்
நன்று நன்றென நைந்திரங் திட்டதே.

இறந்த அம்மச்சம் முன்னர், சேரியில் பிறந்த ஆட்டின் வயிற்றில் ஓர் ஆட்டுக் கிடாவாய் வந்துதித்தது. அது கொழுத்துப் பருத்து வளர்கின்ற நாளில், ஒருநாள் தன் தாயின் மீது மோக முற்று அதனை யணைந்தது. அச்செய்கையினைக் கண்டு சகியாத வேறொரு கிடா அக்கிடாவின் மேற் பாய்ந்து கொன்று விட்டது. மரித்த அந்தக் கிடா மறுபடியும் தாயின் வயிற்றில் ஆணாகப் பிறந்து வளர்ந்தது.

அவைகள் இங்ஙன மிருக்க, ஓர் நாள் உச்சயினி நகரத் தரசனுன யசோமதி வனஞ் சென்று வேட்டையாடித் திரும்புகையில் சேரியி லிருந்த அந்த ஆடுகளைக் கண்டனன். தாயும் குட்டியும் பார்ப்ப தற்கு மிக்க அழகா யிருந்தமையினுல் தாயாட்டைச் சண்டமாரி தேவிக்குப் பலியிடக் கருதினன். கருதின வண்ணமே அதனைத் தேவிக்குப் பலியிட்டனன். குட்டியை மாத்திரம் அரசன் ஒரு பறையனிடம் ஒப்புவித்து அதனைச் சீராக வளர்த்து வரும்படி ஆக்ஞாபித்தான். அவனும் அவ்வாறே வளர்த்து வந்தான்.

மற்றோர் நாளும் மன்னவன் வனஞ் சென்று பல் லுயிர்களைக் கொன்று வேட்டை யாடித் திரும்புகையில் எருமை யொன்றினைப் பிடித்து வந்து தேவிக்குப் பலி கொடுத்தனன். அதனை யறிந்த அந்தணர், "அம்மகிஷத்தின் மாமிசம் சிரார்த்த கர்மத்திற்கு யோக் கியாமா" மென அரசனுக்கு அறிவித்தனர். அவருள்ளே சிலர், "வெயிலி லுலர்ந்து, காகம் முதலிய பக்ஷிகளாற் கவ்வி யுண்ட இம்மா மிசம் சிரார்த்தத்திற்குத் தகுதியுடைய தன்று; ஆயினும், ஓர் ஆட்டுக் கிடா இம்மாமிசத்தை முகரும்படி செய்யின், இதுவும் சிரார்த்தத் திற்கு அருகமாகும்" என்று ஒரு பரிகாரமுங் கூறினர். அரசன் அவர்கள் மொழிப்படியே, முன் தான் புலையனிடம் வளர்க்கும்படி விட்டிருந்த ஆட்டுக்கிடாவை வரவழைத்து அப்புலாலை முகரச் செய்து சிரார்த்தஞ் செய்தனன். நான் மறையாளர் சிரார்த்தத்தில் நன்கு புசித்து, "யசோதரன் தன் அன்னையுடன் உம்ப ருலகத்தில் நாளும் வாழ்க" வென்று ஆசீர்வதித்தனர்.

அவர்களது ஆசீர் வசனங்களைக் கேட்டுக் கொண்டு ஆண்டிருந்த ஆட்டுக்கிடாவுக்குப் பூர்வ பிறப்பின் உணர்வு தோன்றிற்று. அப்பொழுது அது,

'இத்தலத் திறை யான வசோமதி
மத்த யானையின் மன்னவன் என்மகன் !

இதுவென் மாநகர் உஞ்சய னிப்பதி !
இதுவென் மாளிகை யாமென் னுழைக்கலம் !
இதுவெ லாமிவர் என்னுழை யாளராம் !
இதுவென் யானிவன் இன்னண மாயதே !

யான்ப டைத்த பொருட்குவை யாமிவை !
யான்வ ளர்த்த மதக்களி றுமிவை !
யான ளித்த குலப்பரி யாமிவை !
யான் விளைத்த வினைப்பய னின்னதே !

இவர்கள் என்கடைக் காவல ராமிவர் !
இவர்கள் என்படை நாயக ராமிவர் !
இவர்கள் என்னிசை பாடுந ராடுநர் !
இவர்க ளும்மிவர் என்பரி வாரமே !

என்னை நஞ்சுபெய் தின்னண மாயிழைத்
தன்ன மென்னடை யாளமிர் தம்மதி
மன்னு தன்மறை யாளொடு வைகுமோ ?
என்னை செய்தனள் !.....................'

என்று தனக்குள், தான் யசோதர னெனும் மன்னனா யிருந்த போதுள்ள நிலைமையையும் பின்னர் அமிர்தமதியின் நஞ்சினா லிறந்து இப்பொழுது அநுபவிக்கும் கதியையும் எண்ணி வருந்தியது. பின்னும் அது, 'நல்லறம் மருவா நான் மறை யாளர் மொழிப்படி நம் மகனும் சிராத்த கருமத்திலே பல்லுயிர்களைக் கொன்று பாபம் தேடிக் கொள்ளுகின்றான். தசை தின்னும் அவ்வந்தணாளரும் என்னை உம்பருலக கிருத்தி வாழ்த்துகின்றனர். நான் உம்பருலக கிருப்ப தெங்ஙனம்? மஹா பாபிகளாகிய இவர்களது ஆசீர் வசனத்தால் எனக்கு வானுலகும் உய்க்குமோ? இவ்வுலகு மிக்க பேதைமை யுடைத்து.'—என்று பலவா றெண்ணியது.

இது இங்ஙன மெண்ணி அரண்மனையில் வளரா நிற்க, முன்னம் அரசனால் பலி யிடப்பட்ட இக்கிடாவின் தாய் கலிங்க தேசத்தில் ஒரு மகிடமாய்ச் சனித்தது. அதனை வணிகர் கூட்டத்தார் விலைக்கு வாங்கி அதன் மீது வர்த்தகச் சரக்குகளை ஏற்றி, அவர்கள் ஊரூராய்ச் சென்று வியாபாரஞ் செய்ய லானார்கள். அங்ஙனம் செய்பவர்கள் ஓர் நாள் உச்சயினி நகருக்கருகே யோடும் நதிக்கரையில் வந்து தங்கி, மகிடத்தின் மீ தேற்றியுள்ள பாரத்தை வாங்கி வைத்து அதனை இளைப்பாற வெளியே விட்டனர். அது நெடுந்தூரம் பாரஞ்சுமந்து

வந்த இளைப்பை யாற்றிக்கொள்ள ஆற்றிலிறங்கி நீரில் துளைந்தாடி மகிழ்ந்து பின்பு கரையேறியது. அப்பொழுது அக்கரையில் அரசனுடைய பட்டத்துக் குதிரை யிருந்தது. அதனை மகிடம் முட்டிப் பாய்ந்து கொன்று விட்டது. குதிரைக் காப்பாளர் இதனை அரசனுக் கறிவிக்க, அரசன் மிக்க கோபங்கொண்டு "வணிகர் பொருளையுங் கவர்ந்து மகிடத்தையுங் கொன்று விடுமின்" என அவர்களுக்குக் கட்டளை யிட்டனன். அவர்கள் அப்படியே சென்று வணிகர் பொருளையுங் கவர்ந்து மகிடத்தையும் பலவாறு துன்புறுத்திக் கொன்று விட்டார்கள். கொன்ற அவ்வெருமையின் மாமிசத்தைப் புசிக்க விரும்பி அமிர்தமதி அதனைப் பக்குவப் படுத்தித் தரும்படி தனது மடையர்களுக்கு ஆக்ஞாபித்தனள். அவர்கள் அவ்வெருமையின் நாக்கு மூக்கு கண் உடல் முதலாதிய உறுப்புக்களின் மாமிசத்தை வேறு வேறு வகையாகச் சமைத்து அவளுக் கிட்டனர். அவள் அவற்றைத் தின்று நாவின் அவாவைப் பூர்த்தி செய்து கொண்டனள். அவ்வளவோடும் அவள் அமையாது அரண்மனையில் வளர்ந்து கொண்டிருந்த ஆட்டுக்கிடாவின் மாமிசத்தைப் புசிக்கவும் எண்ணங் கொண்டாள். கொண்டதும் அவள் தனது மடையர்களை அழைத்து, "மடைத் தொழில் வல்லீர்! நமது அரண்மனையில் வளரும் ஆட்டுக்கிடாவின் தொடை மாமிசத்தைப் புசிக்க என் நா பெரிதும் விரும்புகின்றது. இன்னே அதனைப் பிடித்துக் கொன்று அதன் மாமிசத்தை எனக்கு உணவாக்குக" என்று கட்டளை யிட்டாள்.

அதனை யறிந்த நகர மாந்தர் பலரும், "அரசியாய்ப் பிறந்த அமிர்தமதி அநங்கனையும் பழிக்கும் அழகு வாய்ந்த யசோதர மன்னனை நஞ்சிட்டுக் கொன்று, மனஞ் சகியாத குட்டநோய் கொண்ட மாநுட நாயனும் அட்டபங்கனைக் கூடிக் குலாவுகின்றாள்; அவனது சேர்க்கையால் நல்லெழில் வாய்ந்த மேனியும் குட்ட நோய் தொடர்ந்து குலைவுற்றது; அங்கமெல்லாம் தொழுநோய் கண்டு சீயொழுகி முடைநாற்றம் வீசுகின்றது. எண்ணித் தொலையாத பல்பிணியும் இவளிடத்தே வந்து குடிகொண்டது. இவையெல்லாம் முன் செய்த வினையால் தொடர்ந்ததோ வெனின், அல்ல! அல்ல!! பூர்வம் செய்த நல்வினையாலேயே இப்பொழுது அவள் அரசியாய் வந்துதித்தனள்; இம்மையில் செய்த தீவினையே அவளை இங்ஙன மாக்கியது. மறுமையிலும் இத்தீவினை அவளை விடாது தொடரும்; இது சத்தியம். இன்னும் அவள் ஆசை நோயினாலோ, அன்றி நுண்ணுணர் வின்மையினாலோ, தீய வல்வினை தேடுதலினாலோ மேதியின் நிணத்தையும் புசிக்க அவாவுகின்றாள்." என்று பலவாறு பேசலானார்கள்.

அமிர்தமதியின் கட்டளைப்படி பிராணி சேதிப்பார் அரண்மனையில் வளரும் மேதியைப் பிடித்தார்கள். அது அப்பொழுது அமிர்தமதியைப் பார்த்துத் தனக்குள்ளே, "ஏ பாபி! என்னையும் என் அன்னையையும் நஞ்சிட்டுக் கொன்றனையே! இன்னும் உனது பகை

தீர வில்லையா ? பாவியாகிய அட்டபங்கனைச் சேர்ந்தன்றோ உன்னுடலம் குட்ட நோய் கொண்டு குறைகின்றது. அவன் சேர்க்கையிலன்றோ என்னையும் புசிக்கப் பற்றினை. மகிட மாமிசத்தால் நிரம்பிய உன் வயிறு என்னையும் அழைக்கின்றதோ ?'' என்று பூர்வ உணர்வினால் எண்ணி வருந்திக் கண்ணீர் வடித்தது. அமிர்தமதி சிறிதும் சிவகாருண்ய மில்லாதவளாய் "இம்மேதியை இன்னே கொன்று இதன் தொடை மாமிசத்தைச் சமைக்க'' வென மடைத் தொழிலாளர்க்குக் கட்டளை யிட்டனள். பிராணி சேதிப்பார் அக்கிடாவைக் கதறக் கதறக் கொன்று அதன் மாமிசத்தை மடையரிடங் கொடுத்தார்கள். அவர்கள் அதனை வாங்கிக்கொண்டு போய்ப் பக்குவப் படுத்தி அமிர்தமதிக் கிட்டனர். அமிர்தமதி அதனைச் சுவைத்து உண்டு மனத் திருப்தி கொண்டனள்.

இங்ஙனம் மாண்ட இக்கிடாவும் எருமையும் உச்சயினி நகரத்துப் புலையர் சேரியில் அழகிய இரண்டு கோழிகளாகப் பிறந்தன. அவை யிரண்டும் முத்தைப் போன்ற கண்களையும் பொன்னிறமும் நீலமுங் கலந்த அழகிய சிறகுகளையும் செம்மணி போன்ற உச்சிக் கொண்டைகளையும் தங்கம் போன்ற கால்களையும், வயிரம் போன்ற முட்களையும் பெற்றுப் பார்ப்போர் கண்களைக் கவரக் கூடியதா யிருந்தன. அவற்றை ஒருநாள் அரசன் கண்டு விருப்பமுற்று, அவைகளை விலைக்கு வாங்கிச் சண்டகரும னெனும் தளகர்த்தனிடம் கொடுத்துச் சீராக வளர்த்து வரும்படி ஆக்ஞாபித்தான். அவனும் அவற்றைச் சீராக வளர்த்து அவைகளுக்குப் போர்த்தொழில் முதலியவைகளையுங் கற்பித்து வந்தான். அவைகள் ஒன்றுக் கொன்று இடும் போர் பலருக்குக் காட்சியா யிருந்தது. அவற்றிற்கு அது மீளா வருத்தமாயிருந்தது. எருதின் வலி காக்கை யறியுமோ ?—

"இச்சரிதத்தைக் கவனத்தோடு கேட்கும் மாரிதத்த மன்னனே ! இனி யசோதரன் மகன் யசோமதியின் வரலாற்றினைக் கூறுகின்றேன். அதனையுங் கேட்பாயாக'' வென அபயருசி மேலுங் கூறலுற்றான்.

அத்தியாயம்—IV.

அகம்பனர் தருமோபதேசம்.

செந்தளிர் புனைந்த சோலைத் திருமணி வண்டுந் தேனுங்
கொந்துகள் குடைந்து கூவுங் குயிலொடு குழிமியார்ப்பச்
செந்துண ரளைந்து தென்றற் றிசைதிசை சென்று வீச
வந்துள மகிழ்ந்த தெங்கும் வளர்மதுப் பருவ மாதோ.

மாந்தர்க்கு இதத்தைத் தரும் இளவேனிற் பருவம் வந்ததும் யசோமதி மன்னன் தனது மனைவி புட்பாவலியுடனும், மற்றும் பரிவாரங்களுடனும் உச்சயினி நகர்க் கடுத்த அழகிய உய்யான வனஞ் சென்றான். அவ்வனம் உயர்ந்த பல தருக்களையும், வாசனை வீசும் பல மலர்ச்செடி கொடிகளையும், லதா மண்டபங்களையும், பளிங்கு மேடை

களையும், மணலை அரித்தோடும் ஓடைகளையும், செய் குன்றங்களையும், இன்னும் பலவித இயற்கை செயற்கை நலன்களையும் பெற்று மனோகரமாயிருந்தது. அம்மனோகர வனத் துள்ளே வல்லிகள் நாற் புறமுஞ் சூழ்ந்து குளிர்ச்சியா யிருந்த அசோக மரத்தடியிலே லதா மண்டபத்திலே மன்னனுந் தேவியும் மகிழ்வுடன் வீற்றிருந்தனர். அவர்கள் முன்னே ஆடலிலும் பாடலிலும் தேர்ந்த நாடக மகளிர்கள் வந்து நயனானந்தமும் செவியானந்தமு முண்டாகப் பரத நாட்டிய மாடியும், இன்பந்தரும் நாடகங்களை நடித்துக் காட்டியும் யாழ் முதலிய இசைக் கருவிகளைத் தாங்கி இனிய கீதம் பாடியும் அரச தம்பதிகளை ஆனந்த சாகரத்தி லாழ்த்தினர். அவர்கள் இவ்வுலகையே மறந்து இன்ப வாரி தியிற் படிந்திருந்தனர். அப்பொழுது சண்டகருமனெனும் தளவரன் வனசரர்களும் வனத்தில் வாழும் கொடிய மிருகங்களும் அரச தம்பதிகளி னருகே வரவொட்டாமற் றடுத்துக் கொண்டு சேவகர்களோடு காவல் புரிந்து வந்தான்.

அச்சமயத்தில் அவ்வனத்திலே ஓர் புறத்தில் ஒரு மரத்தினடியிலே சிலாதலத்தின் மிசை முனிவ ரொருவர் வீற்றிருந்தார். அவர் முக்கால வுணர் வுள்ளவர். அகப் புறப் பற்றுக்களை அறவொழித்தவர்; கருணைசொரூபி, நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்னும் இரத்தினத் திரயத்தையே அணியாகப் பூண்டவர்; நிர்வாண நிலை கைக்கொண்டவர்; அவரே அகம்பனரென்னும் பெயர் பூண்டவர். அம்முனிவர் தன்னையும் மறந்து யோகத்தி லமர்ந்திருக்கையில் சண்டகருமன் தற்செயலாக அவரைக் கண்டான். கண்டதும் அவன் கைமுகுளித்து வணங்கி முனிவரது யோகு கலையுந்தனையும் அங்கேயே காத்திருந்தான். முனிவர் சமாதி தெளிந்து எதிரிலிருக்கும் சண்டகருமனை நோக்கினார். அவன் மிக்க விநயத்துடன் அவரை நோக்கி, "சுவாமிகளே! இத் தனி யிடத்திருந்து கொண்டு ஒன்றின் மீதும் நாட்டமில்லாமலும், மேனி அசைத லில்லாமலும் தாங்கள் இங்ஙன மிருப்பதற்குக் காரணம் என்ன? இந்நிலையினால் தாங்கள் அடையப் போகும் நன்மை என்ன? தேவரீர் அடியேனுக்கு அருளிச் செய்தல் வேண்டும்" என்று வேண்டினான்.

அம்முனிவர் அவனை நோக்கி, "தளவரனே! தன்னுள்ளே வாளுங் கூடும்போல வுறைந்து அநந்த ஞானாதி குணங்களுக் கிருப்பிடமாகிய நித்தியானந்த பரமான்மாவை யன்றோ முனிவர்கள் மனத்திற் குறிப்பது! யானும் அப்பரமான்ம சொரூபத்தை யடையவே இங்ஙனம் தவமேற் கொண்டொழுகு கின்றேன்." என்றார். சண்டகருமன் அதைக் கேட்டு, "சுவாமிகளே! இவ்வுடலில் ஆன்மாவொன்று உண்டென்பதைப் பலருஞ் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அவ்வான்மா உடலில் எங்ஙனம் கலந்திருப்பது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. இதனை நான் அறியப் பல முயற்சிகள் செய்தேன். அரச தண்டனை யேற்ற பல குற்றவாளிகளை எனது வாளினால் சேதித் திருக்கின்றேன். அவர்கள் உடலத்தில் சீவ னிருப்பதைக் கண்டிலேன். மற்றோர் நாள் ஒரு சோரனைப் பலவாறாகச் சேதித்துப் பார்த்தேன்.

அப்பொழுதும் சீவன் புலப்படவில்லை. வேறோர் நாள் ஒரு கள்வனைச் சேதிப்பதற்கு முன்னும் சேதித்ததன் பின்னும் துலாவில் வைத்துத் தூக்கிப்பார்த்தேன். இவ்விரு வழியாலும் நிறையளவில் பேதங் காண்கிலேன். ஓர் நாள் சீவன் போகும் வழியைத் திட்டமாய்ப் பரிசோதிக்க வெண்ணி ஒரு பெருங் குற்றவாளியை மண்ணிற் குழி தோண்டிப் புதைத்தேன், அப்பொழுதும் சீவன் சென்ற வழியை நான் அறிகிலேன். அப்படியிருக்க உடலில் சீவன் உண்டென்பதை எப்படி நம்புவது? அதனை எப்படிக் காண்பது?—எனக்கு இதனை விளங்க உரைத்தருள வேண்டும் என்று மீண்டும் முனிவரை வேண்டினான்.

முனிவர், "சண்டகருமனே! சீவன் கட்புலனுக்குத் தோற்றும் பொருளன்று. அது தீயுடன் கூடிய விறகு போன்றது. விறகு நீருடன் கலந்து பசுமையை அடைந்திருக்கின்றது. அதனைப் பல வாறு சேதித்துப் பார்க்கினும் அதில் அக்கினி யிருப்பது புலப்படாது. அவ்விறகை வெய்யிலி லுலர்த்தி வேறோரு விறகுடன் சேர்த்தால் அதிலிருந்து தீ வெளிப்படுகின்றது. அதுபோலவே நமது சரீரமும் ஒரு நனைந்த விறகுக்குச் சமானமாகும். சரீரத்தைத் தவமென்னும் வெய்யிலி லுலர்த்தி ஞானத் தியான மென்னும் பொருளுடன் சேர்த் தால் சீவனது சொரூபம் தோன்றும். இவ்வித மல்லது சீவன் நிறை பேதத்தாலும் மற்றும் பல உபாயத்தாலும் அறியக் கூடிய தன்று. சீவ சொரூப மறியாதார் சம்ஸார மென்னும் சாகரத்திலே வெய்ய தீவினைகளாகிற சுழற்சியி லழுந்தி நாற்கதி வாய்ப்பட் டுழலு வர். அறிபவரே பிறப் பிறப்பென்னும் துன்பத்தி னின்றும் நீங்கி நித் தியானந்த நிலையாகிய பரமான்ம சொரூபத்தை யடைவர். அங்ஙன மடைபவர்கள் நன்ஞானம் நற்காட்சி நல்லொழுக்கம் ஆகிய இரத் தினத்திரயத்தினை மேற்கொள்ளுவர்." என்றார். இத் தத்துவத் தினைக் கேட்ட சண்டகருமன், "அடிகளே! தேவரீர் போன்றவர்கள் சீவ சொரூபத்தை யறிதல் எளிதாகும். என் போன்றோர் எளிதி லறிவது எங்ஙனம்? உலக மோகத்தி லீடுபட்ட நான் சிவ சொரூ பத்தை யறிவதற்கான எளிதான மார்க்கங்களையும் விரதா நுஷ் டானங் களையும் அருளல் வேண்டு" மென்று பிரார்த்தித்தான்.

முனிவரரும் அவனை நோக்கி, "சண்டகரும! முற்கூறிய மும் மணியாம் நன்ஞானம் நற்காட்சி நல்லொழுக்கத்தைப் பெரியோரிடங் கேட்டுணர்ந்து அதன்படி ஒழுகுவார்க்கு உம்பருலகில் இறைமையும் முக்கால வுணர்வும் பிற பேறும் தானே வந்து கைகூடும். நன்ஞான மாவது, உலகிலுள்ள பொருள்களின் தன்மையையும் தர்மா தர்மங் களின் பாகுபாடுகளையும் அறிவதே யாகும். நற்காட்சியாவது, அறிந்த பொருள்களின் மீது சந்தேக விபரீதங்களை வைக்காமல் தெளிவு கொள்வதும், அருகக் கடவு ளருளிய திருவறத்தைப் பக்தி சிரத்தை யுடன் போற்றுவது மாகும். நல்லொழுக்கமாவது, நன்ஞனத்தா லறிந்து நற்காட்சியால் தெளியப்பட்டதை மேற்கொண் டொழுகு தலே யாகும். அவை,

பெருகிய கொலையும் பொய்யுங்
　　களவொடு பிறன்ம னைக்கட்
டெரிவிலாச் செலவு சிந்தை
　　பொருள்வயிற் றிருகு பற்றி
மருவிய மனத்து மீட்சி
　　வதமிவை யைந்தோ டொன்றி
ஒருவின புலைசு தேன்கள்
　　ஒருவுதல் ஒழுக்கம்..........

இவற்றில் கொலை யென்ப தொன்றை ஒருவன் புரியானாயின் அவன் இவ்வுலகில் உயர்ந்த பதவியை அடைவான்; அதனால் அவன் வாய்மையனு மாவான்; அவனது வாய்மொழியை உலகம் மதிக்கும்; அவனும் உலகத்திலே பெருமையை அடைவான்; அப்பெருமையினாலே அவன் பிறர் பொருள் கவர்தல் முதலாகிய களவொழுக்கத்தி னின்றும் நீங்கிப் பரிசுத்தனுவான்; அப்பரிசுத்த விசேஷத்தினாலே அவன் மனத்தெளிவடைந்து கொலைக்குச் சமானமாகிய தேனுண்ணலையும், தீய காரியங்கட்கு மூலகாரணமாய் விளங்கும் சுட் குடித்தலையும் நீக்கிப் பெரியோ னுவான்; இவற்றின் வினைவால் அவன் நல்ல தேஜஸையும், வசீகரத்தையம் வெற்றியையும் மிக்க செல்வத்தையும் குலப் பெருமையையும் இன்பத்தையும் அடைவான். ஆதலின் நீ இவ்வொழுக்கங்களில் எவற்றைக் கைக் கொள்ள விரும்புகின்றனை யோ அவற்றைக் கைக் கொள்வாயாக" என்றனர்.

சண்டகருமன், "சுவாமிகளே! ஜீவ வதையே எனது ஜீவனோ பாயமா யிருக்கின்றமையால் நான் இவ்விரத மொன் றொழிய பிற வற்றை யெல்லாங் கைக்கொள்ளுகின்றேன்" என்று கூற முனிவர் கூறுவார்: தளவரனே,

அறிவெனப் படுவது துன்பந் துடைத்தல்
செறிவெனப் படுவது மும்மையுஞ் செறிதல்

ஆண்மை யெனப்படுவ தைம்புலன் வென்றல்
கேண்மை யெனப்படுவது கேட்டிடத் துதவல்
அருமை யெனப்படுவ தறநெறி வழுவாமை
பெருமை யெனப்படுவது பிறனில் விழையாமை

அறமெனப் படுவ தாருயி ரோம்பல்
உறவெனப் படுவ துற்றுழி நிற்றல்
வாய்மையெனப் படுவது வருந்தா துரைத்தல்
தூய்மையெனப் படுவ துள்ளந் தூய்மை

இன்பமெனப் படுவது ஈறி லின்பம்
அன்பெனப் படுவ தார்வ முடைமை
தவமெனப் படுவ தைம்புலம் வெறுத்தல்
வதமெனப் படுவது கொல்லா விரதம்.

ஆதலின், இதுவே எல்லா விரதங்கட்கும் தலையாயது. இதைத் தவிர்த்துச் செய்யப்படும் ஒழுக்க மெல்லாம் தீயொழுக்கமே யாகும். நீயோ இதுகாறும் கொலைத் தொழில் புரிந்து உனது வாழ் நாளை வீணிலே கழித் தொழித்தாய். நீ பிறந்த பிறந்த பிறவிகள் தோறும் செய்த பாவங்க ளெல்லாம் சிறந்த தருமவழி ஒழுகுதலா லன்றிப் பிற வற்றால் நீங்கா. கொலைத் தொழில் புரிந்து வாழ்ந்த கொற்றவரும் இவ்வுலகில் சில பகல் வாழ்ந்து இறந்தனரே யன்றி ஒருவரும் நீடித்து ஜீவித் திருந்தாரில்லை. அவரெல்லாம் பிறவிப் பெருங்கடலில் அனந் தங்காலம் அழுந்தி வருந்துவர். உச்சயினி நகராளும் யசோமதி யரச னது தந்தையாம் யசோதரனும், அவன் தாய் சந்திரமதியும் மாக் கோழி யொன்று செய்து சண்டமாரி யென்னும் மாகாளிக்குப் பலி யிட்ட காரணத்தினாலே மானிடப் பிறவி நீங்கி விலங்கு கதியிலே பன் னெடுங் காலம் உழன்று மீண்டும் பாப மிகுதியால் இரண்டு கோழிக ளாகப் பிறந்து உனதருகிலுள்ள கூட்டில் அடைந்திருக்கின்றனர் பார். இதைக்கண்டேனும் நீ தெளிவு கொள்க. மாக் கோழிக்கு உயிரில்லை யெனினும் மனத்தால் உயிருள்ளதுபோலப் பாவித்து அவர்கள் கொலை செய்ததனால் அவர்களுக்குக் கொலைப் பாவம் தொடர்ந்தது. மனம் வாக்குக் காயமாதிய மூன்று கரணங்களிலும் கொலையை நாடா திருப் பதே சீவகாருண்ய மெனப்படும். மக்களாய்ப் பிறந்தோரிற் சிலர் உயி ருள்ள பிராணிகளின் மீது சிறிதும் காருண்யம் பாராட்டாது அவை களைக் கொன்றொழிக் கின்றனர். அவர்களுக் கெல்லாம் முடிவில் செல்லிடம் வெய்ய நரக மல்லது வேறோ ரிடமில்லை.'' என்று கொலைத் தொழிலின் கொடுமையை எடுத்துக் கூறினார். அதனைக் கேட்டுச் சண்டகருமன் தான் முன்செய்த பாப கருமங்களுக்காக மனம் கலங்கி அக்கணமே ராகத்வேஷ மதமாச்சர்யாதி தீக்குணங்களை விலக்கி அருகக் கடவு ளருளிய திருவறத்தை மருவி முனிவரை வணங்கி, "சுவாமிகளே! கொலைப் பாதகனாகிய யான் தேவரீரது தரிசனத்தி னாலும் உபதேச மொழிகளாலும் பெரும் பயன் பெற்றேன்; இனித் தேவரீர் அருளிய நல்லொழுக்கங்க ளனைத்தும் கைக்கொண்டு ஒழுகு கின்றேன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றான்.

முனிவர் மொழிந்த தரும வுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்த வாரணங்க ளிரண்டும் முற்பிறப் புணர்வு பெற்று, தங்களது நிலை மைக்கு வருந்திப் பின்பு தேறி, 'நாம் அடிகளது தருமாமிர்தத்தை யுண்டோம்; நமக்கு இனி இத்துன்பம் வாரா; இதினின்றும் பிழைத்தோம்' என்று மனத்துட் கொண்டு, மகிழ்வினால் பெரிய சிறகை யடித்து உரக்கக் கூவி பெருஞ் சத்த மிட்டன. அச்சத்தம் லதாமண்டபத்தில் அயர்வு கொண்டிருந்த அரசன் யசோமதிக்குக் கர்ண கடூரமா யிருந்தமையால், அவன் அப்பொழுதே வில்லொன்

றெடுத்துச் சப்தவேதி யென்னும் அம்பைத் தொடுத்து ஒலி வந்த வழியே விட்டனன். அஃது குறிதப்பாது அக்கோழிக ளிரண்டின் மீதும் பாய்ந்து கொன்றன. அக்கோழிகள் இறக்குந் தருவாயில் நல்ல பரிணமங் கொண்டிருந்தமையால், அவைகள் விலங்கு கதியி னின்றும் நீங்கி அரிதாகிய மானிடப் பிறவிக்கேதுவாகி, யசோமதி யினது தேவியாம் புட்பாவலி உதரத்திற் சென்று தங்கின.

ஈதிங்ஙனமாக, யசோமதி மன்னன் வசந்தக் களிவிளையாட்டி னின்றும் நீங்கித் தன் தேவிமார்களுடனும் அரச பரிவாரங்களுடனும் உச்சயினி நகர்க் கேகினன். ஆண்டடைந்த பின் புட்பாவலி கருப்ப முற்று நவமாதங் கடந்தபின் பத்தாவது திங்களில் நல்ல ஓரையில் இரண்டு குழந்தைகளைப் பெற்றனள். அரசன் இஃ தறிந்து பெரு மகிழ்வு கொண்டு அன்று புத்திரோர்சவம கொண்டாடி அந்தணர்க் கும் இரவலர்க்கும் அளவிலாத் தானங்க ளீந்து, பிறந்த சிசுக்களுக்குச் சாதகன்மம் செய்தனன். அதன் பின் சோதிடர்களைக் கொண்டு அக்குழந்தைகளினது கிரக நிலையை ஆராய்ந் தறிந்து முன்னாழிகை யில் ஆணாய்ப் பிறந்த குமரனுக்கு அபயருசி யென்றும் பின் நாழிகை யில் பெண்ணாய்ப் பிறந்த குமரிககு அபயமதி யென்றும் அரசன் நாமகரணஞ் சூட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக அம்மக்களை வளர்த்து வந்தான்.

அவர்கள் வளரா நிற்க, புட்பாவலி சின்னாட்குப் பின் சூல் கொண்டு ஓர் மகவை ஈன்றனள். அரசன் அம்மகவிற்கும் முறைப் படி செய்ய வேண்டிய கர்மங்களைச் செய்து யசோதரன் எனும் நாமம் சூட்டினன். அம்மதலை வளர்பிறைச் சந்திரன் போல் வளர்ந்து வித்தியாப்பியாசத்திற் குரிய பருவத்தை எய்தியது. அரசன் யசோ தரனை நல்லாசிரியர் பால் சேர்த்து அரச மக்களுக் குரிய சகல வித் தைகளுங் கற்பித்து வைத்தான்.

தொடரும்.

ரஷியாவில் ஆயுள் முழுவதும் சிக்ஷிக்கப் பட்ட ஒரு கைதிக்கு ஒரு லாட்டரிச் சீட்டில் முதல் பிரைஸ், ரூ. 90,000 கிடைத்ததாம். பாவம். அந்தப் பணம் அவனுக்குப் பிரயோஜனப்படாது. அவ்வூரிலுள்ள கவர்ன்மெண்ட் பாங்கில் அவன்பேரால் போடப்பட் டிருக்கிறது. அவன் செத்ததும், அவன் பையனுக்கு வட்டியும் முதலு மாகக் கொடுக்கப்படும். அவனுக்கு ஐந்து வயதுள்ள ஒரு பைய னிருக்கிறான்.

கஞ்சாச் செடி 1920-ல் 1,16,000, ஏக்கராவும் 1922-ல் 1,14,060 ஏக்கராவும் பிரிட்டிஷ் இந்தியாவில் பயிராக்கப் பட்டிருக் கிறது. சுதேச சமஸ்தானத்தில் 50,000, 64,000 ஏக்கர் பூமி முறை யே பயிராக்கப் பட்டிருக்கிறது. 1924-ம் வருஷத்தில் 71,200 பவுன் விலைமதிப்புள்ள அபின் ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது.

வியாதிக் கிருமிகள்

வியாதிகளுக்குக் காரணமான கண்ணுக்குத் தெரியாத சூக்குமக்கிருமிகளை முதல்முதல் கண்டுபிடித்தது யார் ? அவற்றைக்கண்டு பிடித்தற்கு எவ்வித ஆராய்ச்சி செய்யப் பட்டது ?

(ஸ்ரீமான் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்னே லூயிஸ் பாஸ்டியூர் (Loueis Pasteur) என்பவர் பிரான்ஸ் (France) தேசத்தின் கிழக்கில் ஆர்புவா என்னுஞ் சிறு பட்டணத்தில், அத்தேச நகராதிகாரிக்குட்பட்ட ஒரு மாகாணக் கலாசாலையில்(Communal College) மாணாக்கராயிருந்தனர்.

அவர் தந்தை ஆழ்ந்த யோசனை யுள்ளவராயும் லௌகிக காரியங்களை நன்றாயறிந்த வராயு மிருந்தனர். இவர் தோல் பதனிடும் வேலையிலிருந்து பிழைப்புக்குப் போதுமான வருமான மில்லாமல் இடுக்கண்பட்டு வந்தனர். பிறகு சேனையிற் சேர்ந்துழைத்து யுத்த களத்தில் நல்ல பராக்கிரமசாலி யென்னுங் கீர்த்தியால் அலங்கரிக்கப்பட்டனர்.

லூயிஸ் பாஸ்டியூர் மேற் சொன்ன கலாசாலையின் தலைவராக வந்திருக்கலாம் ; ஆனால், அவர் அப்போது சிறு பிள்ளையா யிருந்தனர். நாள் முழுதும் தம் வேலையை விட்டு மீன் வேட்டை யாடுவதிலே காலத்தைக் கழிப்பவ ராயினர். அவர் தம்முடைய வீட்டில் பாடங்களை எழுதுவதற்குப் பதிலாகத் தம்முடைய சிநேகிதர்களுடைய உருவங்களைச் சிறிதும் பிழைபடாமல் படங்க ளெழுதுவார். இன்னும் அவர் மிக்க யூகசாலியாயிருந்ததுடன், ஏதேனும் விவகாரம் வரும்போது வெகு திறமையாகவும் பேசுவார்.

அவருக்குச் சிறு பருவத்திலேயே பொருள்களை ஆராய்ந்தறியுஞ் சக்தியுண்டா யிருந்தது; அதனால், அவர் தமது சிறு பிள்ளைத்தனமான வேலைகளை விட்டு மிக்க ஊக்கத்துடன பிரயோசனமான வேலைகளைச் செய்யத் தொடங்கினார். இவ்வித நல்லெண்ணமே அவருக்கு முதல் முதல் உற்சாகத்தை யுண்டாக்கியது. அவர், தமக்குக் கிடைக்கும் சமயங்களை நல் வழியில் உபயோகப் படுத்தாமல் அசட்டையாயிருந்து விடுவாராயின், அவருடைய தந்தை தமக்குக் கல்வி கற்பித்துக கொடுக்கும் நிமித்தம் எவ்வளவு நஷ்ட மாவாரென்பதையும், அவர் தம்மீது வைத்த நம்பிக்கைக்கு என்ன பங்கம் உண்டாகலா மென்பதையும் அவர் உணரா திருக்கவில்லை. ஆதலால், அவர் உறுதியான மனத்தோடு தாமே வேலை செய்யத் தொடங்கினர். அவ்விதமாக அவர் தொழில் முயற்சியில் ஒரு தரம் பழகி விட்டதால், அந்தப் பழக்கம் அவரை விட்டு நீங்கவே யில்லை. அம்முயற்சி பெரிய காரிய சித்திக்கும். பெரும் புகழுக்கும் ஆரம்பமா யிருந்தது ; ஏனெனின், அவர் செய்த வேலை, எல்லா மனிதர்கட்கும் உபகாரமாகவும்,

பிரயோசனமாகவு மிருந்ததினாலே அவருடைய பெயர் பிரசித்தியாய் உலகமெங்கும் மெச்சிக் கொள்ளலாயிற்று.

பாஸ்டியூருக்குப் புதிய வேலை.

லூயிஸ் பாஸ்டியூர் இரசாயன சாஸ்திர (Chemistry) சம்பந்தமான வேலை செய்து அதில் அநேக மேலான புதிய விஷயங்களைக் கண்டு பிடித்தனர். அவர் சில வருஷங்களாகப் பாரிஸ் நகரிலிருந்து அநேக விஷயங்களை ஆராய்ச்சி செய்து, அவற்றைப் பரிசோதித்து அனுபவ வுணர்ச்சி யடைவதில் முழு நாட்ட முள்ளவரா யிருந்தனர். அச்சமயத்தில் அவர் செய்து வரும் வேலையை அறவே விட்டு முற்றும் புதிய மாதிரியான வேலையை யெடுத்துக் கொள்ளும்படி அவரைக் கேட்டுக் கொள்ளலாயினர்.

அவரைக் கேட்டுக் கொண்டவர் யார்? பாஸ்டியூரின் மீது அன்புடையவரும் நன் மதிப்புடையவரும் இரசாயன சாஸ்திரங் கற்றுக் கொடுத்த அவருடைய போதகாசிரியருமே யாம். தம்முடைய போதகாசிரியர் கேட்டுக் கொள்ளா திருப்பாராயின், தாம் பேராவலோடு செய்துவரும் வேலையை விட்டு விடவும், முக்கியமாய்ப் புதிய ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயத்தைப் பற்றித் தமக்கு ஒன்றுந் தெரியாததினாலும், தாமிருக்கும் பாரிஸ் நகரை விட்டுப் பிரான்சுக்குத் தெற்கே தூரமாகப் போகும்படி நேரிடுவதாலும் அவர் வேண்டுகோளை மறுத் திருப்பார். ஆனால், கேட்டுக்கொண்டவர் தமது பழைய போதகாசிரிய ரானதால் அவருடைய விருப்பத்திற்கு இணங்கினார்.

பிரான்ஸ் தேசத்திற்குத் தெற்கே யுள்ள சனங்களைப்பற்றி நீங்கள் பூகோளத்தில் வாசித்திருக்கலா மென்று நான் நம்புகிறேன். அவர்கள் பட்டு விருத்தி செய்யுந் தொழில் முயற்சியுடை யவர்களா யிருந்தார்கள். பட்டு விருத்தித் தொழிலுக்குப் பட்டுப் பூச்சி (Silk worm) அவசிய மாயிருந்தது.

நீங்கள் பட்டுப் பூச்சிகளைப்பற்றிப் புத்தகங்களில் வாசித்திருப்பீர்கள். சில சமயம் அவற்றைப் பார்த்து மிருப்பீர்கள்; அவை சாதாரணமாகத் தங்கள் ஆகாரத்திற்கு முசுக்கட்டைச் செடியின் இலைகளை (Mulberry leaves) ச் சாப்பிட்டு வளர்ந்து மாறுத லடைவதையும் நீங்கள் பார்த்திருக்கலாம்.

உங்களில் அநேகர் பட்டுப் பூச்சியைக் கண்ணாடி மூடிபோட்ட பெட்டியில் வைத்து வளர்த் திருக்கலாமென்று நான் நினைக்கின்றேன். அவை சாதாரணமாகத் தங்கள் ஆகாரத்திற்கு முசுக்கட்டை இலைகளுக்குப் பதிலாக நல்ல முருங்கை யிலைகளைச் (lettuce leaves) சாபபிடுவதையும், முட்டை புழு வாவதையும், அப்புழுவுக்கு நான்கு முறை தோலுரிந்த பிறகு சிறிது மஞ்சள் நிறமான அழகிய கூட்டில் (cocoon) கூட்டுப்புழுவாகி (chrysalis)ன்றதையும், அதன் பின்னர் பட்டு பூச்சி (Moth) யாகின்றதையும் நீங்கள் கவனித்திருக்கலாம்.

வியாதிக் கிருமிகள்

மேலே கூறிய மாறுத லெல்லாம் பிரான்ஸுக்குத் தென் பாகத்திலுள்ள ஆயிரக்கணக்கான சனங்கள் மிக்க ஆவலோடு கவனித்து வந்தார்கள். 1849ஆம் அந்நகரில் சனங்கள் புழுக் கூட்டுக்களிலிருந்து பட்டு நூற்பதை ஆரம்பிப்பதற்கு முன்னமே ஏராளமான பட்டு நூற் பூச்சிகள் நோய்கொண்டு இறந்து விட்டன. அதனால் சனங்களுக்குப் பெரிய மனக்கலக்க முண்டாயிற்று. இந்நோய் ஓரிடத்தி லிருக்கும் பூச்சிகளிலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவிப் பட்டு விளைவு இழுப்பாய் விட்டது. மறு வருஷங்களிலும் ஒரு பலனு மில்லாமற் போய்விட்டது.

கோடை காலந்தோறும் பட்டு விருத்தி செய்வோர் இவ்வியாதியைத் தொலைப்பதற்கு என்னென்ன செய்யக்கூடுமோ அவற்றை யெல்லாம் செய்தார்கள்; ஆனால், இவ்வியாதி யுண்டானது முதல் 1865 வருடம் வரையில் இடையில் ஒரு வருடந்தான் அவர்களுக்கு நல்ல வருடமா யிருந்தது. மற்ற வருடங்களில் அவ்வியாதியின் தொந்தரவு, ஜப்பான் தேசந் தவிர மற்றப்பட்டு விளையும் தேசங்களி லெல்லாம் பரவி விட்டது. அதனால், அநேக சனங்கள் பாழாய்ப் போயினர். பட்டுநூல் வேலை சம்பந்த முள்ள ஒவ்வொருவரும் ஏக்க முற்றனர். சனங்க ளெல்லோரும் ஒன்று கூடி இந்தப் பெருவாரி நோய்க்குக் காரணங்களையும், அதனை யொழிப்பதற்கு உபாயங்களையும் கண்டுபிடிக்கப் பாரிஸ் நகரிலிருந்து சாஸ்திர முணர்ந்த நல்ல பண்டிதர்களை அனுப்ப வேண்டு மென்று அரசாங்கத்தாருக்கு மனுச் செய்து கொண்டார்கள். அம்மனுவை அரசாங்கத்தார் பாஸ்டியூர் (Pasteur) என்பவருடைய பழைய போதகாசிரியர் ஆலோசனையைக் கேட்பதற்கு அவருக்கு அனுப்பினதின் மேல், அவரும், மேலே சொல்லியது போல பாஸ்டியூரே அவ்வாராய்ச்சி செய்யும் வேலையை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்தினர்.

பாஸ்டியூர் பட்டுநூற் பூச்சி நோய்க்குக் காரணங் கண்டு பிடித்தது.

பாஸ்டியூர் இந்நோயைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியிருந்த ஆலேய்ஸ் (Alais) பட்டணம் வந்து சேர்ந்தனர். இந்தப் பட்டணத்திலும் இதைச் சூழ்ந்த பட்டணங்களிலு முள்ள சனங்களின் துன்பங்களைப் பார்த்து, இதற்குமுன் தாம் ஊக்கத்தோடு செய்து வந்த வேலையை அறவே விட்டதற்கு விசனப்படாமல், இந்த ஏழைச் சனங்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்னும் ஒரே மனமுடையவரா யிருந்தனர்.

அவர் ஆலேய்ஸ் பட்டணம் வந்து சேர்ந்த சில மணி நேரத்திற்குள், அநேகம் பட்டு நூற் பூச்சிகளைச் சிற்றுருவிளக்கி (Microscope) என்னும் பூதக் கண்ணாடியின் மூலமாய்ச் சோதனை செய்தனர்.

அவ்வாறு சோதனை செய்ததில் சில பட்டு நூற் பூச்சிகளுள், இவருக்கு முன் இரண்டொருவர் சோதித்துப் பார்த்த மிக நுண்ணிய உயிர்களையே இவரும் பார்த்தனர் ; ஆனால், எவரும் அந்நுண்ணிய உயிர்க ளென்ன வென்று தெரிந்துகொள்ளச் சிரத்தை யெடுத்தார்க ளில்லை. பாஸ்டியூருக்கு மாத்திரம் அந்நுண்ணிய சீவிகள் தாம் சிலவேளை அப்பெருவாரி நோய்க்குக் காரணமா யிருக்கலா மென்று உடனே அவர் புத்தியில் பட்டது.

அந்த வெய்யிற் கால முழுதும், அதன் பிறகு இரண்டு வருஷ காலமும் ஓயாமல் ஆராய்ச்சி செய்து வந்தனர். அவ்வேலைக்குத் தமது மனைவியும் மகளும் பாரிஸ் நகரில் தாம் முன்பு செய்துவந்த வேலையில் சம்பந்தப் பட்டிருந்த அநேகரும் அவருக்கு உதவி செய்தனர். அவ்வித சோதனை எவ்வளவு அதிகமாகச் செய்தனரோ அவ்வளவுக்கும் பட்டுநூற் புழுவின் உடம்பி னுள்ளிருந்து மேற் சொன்ன நுண்ணிய உயிர்களோ அவ்வளவு தீங்கையும் செய்தன வென்று தெளிவாய்த்தெரிந்து கொண்டனர். அவ்வுயிர்களுக்கு ஆங்கில மொழியில் பாரசைட் (Parasite) என்று சொல்லப்படுகின்றது. அதாவது, ஜீவன்கள் தங்கள் சொந்த உயிர் வாழ்க்கைக்குத் தாங்களே ஆகாரந்தேடி யுண்பதற்குப் பதிலாக, மற்றத் தாவரங்கள் அல்லது பிராணிகள் உடம்பில் வசித்து அவற்றி னிடமிருந்து தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை யுண்டு சீவிக்கின்றவையே யாம் ; ஆகவின், பாரசைட் (Parasite) என்பதற்குச் சீவசீவிகள் என்று சொல்லலாம்.

பாஸ்டியூர், அச் சீவ சீவக்கிருமிகள் பட்டுப் புழுவில் மாத்திரமல்லாமல் அவற்றின் முட்டைகளிலும், அவற்றின் கூட்டுப்புழுக்களிலும், பட்டுநூற் பூச்சிகளிலு மிருந்ததைக் கண்டனர். அக்கிருமிகள் சாதாரணமாக முதலில் குடலில் மிகு வேகமாகப் பெருகி, அவ்வேளைப் பூச்சிகள் உண்ட ஆகாரத்தைச் ஜீரணிக்க வொட்டாமற் செய்துவிட்டன. இக்கிருமிகள் குடலி லிருந்து புழுவினுடைய மற்ற மெல்லிய பாகங்களிலெல்லாம் பரவிக் கடைசியில் அஃது இறந்து விடும்படி அதன் உடம்பைக் கெடுத்து விட்டன.

முதலில் சில சமயம் புழுவானது இக்கிருமிகளி னின்றுந் தப்பித்துக்கொண்டாலும், சிறிது பொறுத்தாகிலும் அக்கிருமிகளால் அது தொத்தப்பட்டுத் தன் கூட்டை (cocoon)ப் பின்னுவதற்கு உயிரோடிருந்து, அக்கூட்டி னின்றும் பூச்சியாய் வெளிவந்து முட்டைக ளிடும். அவ்விதப் பூச்சி எப்போதும் பலவீனப்பட்டு நோய்கொண்டு விடுகிறது. அதன் முட்டைகளைச் சோதித்துப் பார்த்ததில், அவற்றிலும் வியாதிக ளிருந்தன. ஆனால், அக்கிருமிகள் அதன் முட்டைகள் பொறிப்பதி னின்றுங் கொடுத்த தில்லையானாலும், பொறித்த புழுக்களை யெல்லாம் விரைவில் நாசமாக்கி விட்டன.

(தொடரும்).

பண்டரி யாத்திரை.

ஒரு சிறு கதை

மகாராஷ்ட்ர தேசத்திலே ஒரு கிழவி யிருந்தாள். அவள் பண்டரி யாத்திரையின் மகிமையைப்பற்றி மிகவும் கேள்விப் பட்டிருந்தாள். அவள் அந்தப் புண்ணியத்தை அடைய விரும்பித் தன் வீட்டைத் தனது மருமகளிடம் ஒப்புவித்து விட்டு யாத்திரை போவதாகத் தீர்மானஞ் செய்தாள். ஆனால் மருமகள் குடும்பக் காரியங்களைக் கிரமமாகச் செய்ய மாட்டாளென்று கிழவி நினைத்தாள். அவள் ஒரு நாள் தனது வீட்டிலிருந்து யாத்திரை புறப்பட்டு, ஊரின் எல்லை வரையில் போன பின்னர், வீட்டைப் பற்றிப் பலமுறை சிந்தித்துத் திரும்பவும் வீடு வந்து சேர்ந்தாள். பேர்போன மகாராஷ்டிர ஞானியான துக்காராம் அப்பொழுது மாமிக்கும் மருமகளுக்கும் நடந்த சம்பாஷணையை அழகாக வர்ணித்திருக்கிறார்.

கிழவி சொல்லுகிறாள்: 'கேளடி, மருமகளே, பாலையும் தயிரையும் விற்காதே. நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேள். பால் கறக்கும் பொழுது கன்றுக்குட்டிக்கு அதிகமாகப் பால் விட்டு விடாதே. பெண்ணே, அந்த மர மரவையைக் கவனமாய்ப் பார்த்துக் கொள். நீ எனது சிறிய கோப்பையை எடுத்து உபயோகித்து, நான் வருவதற்குள் உடைத்துப் போடாதே. இப்பொழுது, தயார் செய்து அந்த வெண்கலப் பானையில் மூடி வைத்திருக்கிற சேமியாவை நான் இல்லாத சமயத்தில் திறக்காதே. கடலை யுடைக்கும் யந்திரம், அரிசி புடைக்கும் முறம், நமது உரல், உலக்கை இவை யெல்லா வற்றையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். அண்டை வீட்டுக்கார லக்ஷ்மி அடிக்கடி வந்து கடன் கேட்பாள். அவளுக்கு ஒன்றும் கொடுக்காதே. அந்தப் பாவி பிச்சைக்காரர்கள் அடிக்கடி வந்து உன்னைத் தொல்லை பண்ணுவார்கள். நான் பண்டரிக்குப் போயிருக்கிறேனென்று சொல்லி அவர்களை அனுப்பிவிடு. நீயும் அதிகமாகச் சாப்பிடாதே. கிரமமாய்க் கொஞ்சம் சாப்பிடு. பட்சண பலகாரம் ஒன்றும் செய்ய வேண்டாம்."

மருமகள்:—"கட்டாயம் அப்படியே செய்கிறேன். மாமி! நீங்கள் சொல்லுகிறபடியே எல்லாம் செய்கிறேன். இங்கே யுள்ள சங்கதிகளைப் பற்றி எவ்வித கவலையு மில்லாமல் நீங்கள் யாத்திரை போய் வாருங்கள். மாமி, வீட்டுச் சிந்தனைகளை யெல்லாம் விட்டு விட்டு நீங்கள் கவலையற்ற மனத்துடன் பண்டரிக்குப் போய்வாருங்கள். உங்கள் மனத்திலுள்ள கவலைகளை யெல்லாம் விட்டு விடுங்கள்."

மருமகளின் இந்த வார்த்தைகளைக் கேட்ட கிழவி தனக்குள்ளே சொல்லுகிறாள். "ஆமாம். இது வெல்லாம் நல்ல சகுனங்க ளல்ல. இதில் ஏதோ தந்திரம் இருப்பதாகத் தெரிகிறது. நான் யாத்திரை

போய்விட வேண்டுமென்று மருமகள் சொல்லுகிறாள். ஆனால் ஏன் போகவேண்டும்? இல்லை. இல்லை. அது சரி யல்ல. நான் எதற்காக யாத்திரை போகவேண்டும்? அங்கே போய் நான் என்னத்தைப் பார்க்கப் போகிறேன். இங்கேதான் எனது பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். இங்கேதான் எனது வீடு இருக்கிறது. இங்கேதான் எனது வீட்டுச் சாமான்கள் இருக்கின்றன. எனது மாடு கன்றுகளெல்லாம் இங்கேதான் இருக்கின்றன. எனது யாத்திரை ஸ்தலம் எனது வீடும், எனது குடும்பமும், எனது பொருள்களுந்தான். இவை யெல்லாந்தான் எனது பண்டரிபுரம்."

இவ்வாறு மனத்தில் சொல்லிக் கொண்டு அந்தக் கிழவி தனது வீட்டிலேயே இருந்து விட்டாள். பண்டரிக்குப் போகவே யில்லை.

உலகத்து ஜனங்கள் இவ்வாறு தான் மாயையில் அகப்பட்டுக் கொண் டிருக்கிறார்களென்று துக்காராம் சுவாமி சொல்லுகிறார்.

லோகோபகாரி

திருப்புகழ்.

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறு கேளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வள மேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மதியாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே!
குருந்திலேறிய கொண்டலின் வடிவினன் மருகோனே!
குரங்குலாவிய குன்றுறை குறமகள் மணவாளா!
திருந்தவேதம் தண்டமிழ் தெரிதரு புலவோனே!
சிவந்த காலும் தண்டையும் அழகிய பெருமாளே!

தேவாரம்,

திருவே, என் செல்வமே, தேனே, வானோர் செழுஞ் சுடரே,
செழுஞ்சுடர் நற் சோதீ, மிக்க
உருவே, என் உறவே, என் ஊனே, ஊனின் உள்ளமே,
உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே, என் கற்பகமே, கண்ணே, கண்ணிற் கருமணியே,
மணியாடு பாவாய், காவாய்,
அருவாய வல்வினை நோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறை யுறையும் அமரர் ஏறே!

தேசபந்து தாசர் சரித்திரம்.

[தேசபந்து தாஸர் ஜூன் மாதம் 16வ செவ்வாய்க்கிழமை மாலை ஐந்தரை மணிக்கு டார்ஜீலிங்கில் ஆண்டவன் அடியிணை சேர்ந்தார். அவருடைய சரித்திரத்தைச் சுருக்கமாக ஈண்டு வெளியிடுகிறோம்.]

தேசபந்து தாஸர் கல்கத்தாவில் 1870-ம் வருஷம் நவம்பர் மாதம் ஐந்தாந் தேதி பிறந்தார். பரம்பரையாகச் செல்வாக்கையும் அசாதாரணமான அறிவையும் பெற்றிருந்த ஒரு குடும்பத்திலேயே இவர் தோன்றினர். இவருடைய தகப்பனர் பூடன் மோகன தாஸர் கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தில் பிரசித்தி பெற்ற ஓர் அட்டர்னியாக இருந்தார். இந்தத் தொழிலில் இவர் மிகப் பிரசித்தி பெற்று அதிகப் பொருள் சம்பாதித்தார். ஆனல் தாம் சம்பாதித்த பொருளனைத்தையும் பிறர்க்கு உபகாரம் செய்வதிலேயே செலவழித்துவிட்டார். இந்தக் குணமே இவரது திருக்குமாரர் தேசபந்துவுக்குரூ உதித்தது போலும். பூபன் மோகனதாஸர், அட்டர்னி உத்தியோகம் செய்ததோடு நில்லாமல், இரண்டு பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவு மிருந்தார். முதலில் "பிராமோ பப்ளிக் ஒபினியன்" என்ற பத்திரிகைக்கும் பிறகு "வங்காள பப்ளிக் ஒபினியன்" என்ற பத்திரிகைக்கும் இவர் ஆசிரியராக இருந்து அவைகளைத் திறமையுடன் நடத்திவந்தார். இவர் பிரம்ம சமாஜ இயக்கத்தில் சேர்ந்து அதி தீவிரமாக உழைத்தார். தமது ஏழை உறவினர்களுக்கும் பிறர்க்கும் தம்முடைய வருவாய்க்கு அதிகமாக உதவிசெய்து வந்ததால், இவருக்குக் கடன் ஏற்பட்டது. இதனல் இவர் இன்சால்வெண்டு கொடுக்கும்படி நேர்ந்து விட்டது.

*　　*　　*　　*　　*

பாபு பூபன் மோகனருடைய திருக்குமாரராகத் தோன்றிய சித்தரஞ்சன தாஸருக்குப் பல சகோதரர்களும் சகோதரிகளும் உண்டு. சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீமான் பி. ஆர். தாஸ் இதுகாலை பாட்னு உயர்தர நீதி மன்றத்தில் நீதிபதியாக இருக்கிறார். மற்ருெருவரான ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் கல்கத்தாவில் அட்வொகேட் ஜெனரலாயிருக்கிறார். இவருடைய சகோதரிகளில் இருவர் ஒத்துழையாமை இயக்கத் தோற்றத்தின்போது இவருடன் சேர்ந்து உழைத்தது நேயர்களுக்கு ஞாபக மிருக்கும். இது நிற்க. தேசபந்து இளமையில் பவானிபூரிலுள்ள லண்டன் மிஷனரி கல்லூரியில் படித்தார். பிறகு கல்கத்தா பிரசிடென்சி காலேஜில் படித்து பி. ஏ. பட்டம் பெற்ருர். பிறகு ஐ. சி. எஸ். பரீட்சைக்குப் படிப்பதற்காக இங்கிலாந்து சென்ருர். அப்பொழுது தாதாபாய் நௌரோஜி, பார்லிமெண்டுக்கு ஓர் அபேட்சகராக நின்ருர். அவருக்குச் சாதகமாக இவர் பல இடங்களில் உபந்நியாசம் செய்தார். பிறகு ஸ்ரீமான் ஜான் மக்லீன் என்ற ஒரு பார்லிமெண்டு அங்கத்தினர் ஒரு பிரசங்கத்தில் ஹிந்துக்களையும் முஸல்மான்களையும் தூஷித்துப் பேசினர்.

இதைக் கண்டித்து தேசபந்து தாஸர் எதிர்ப்பிரசங்கம் ஒன்று செய்தார். இதன் பயனாக ஸ்ரீமான் மக்ளீன் என்ற அந்த அங்கத்தினர் மன்னிப்புக் கேட்டார். அவர் தமது காமன்ஸ் சபை அங்கத்தினர் பதவியையும் இழக்க வேண்டியதாயிற்று. பிறகு, பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக அப்பொழுதிருந்த ஸ்ரீமான் கிளாட்ஸ்டனுடைய தலைமையில் இவர் இந்தியா விஷயங்களைப் பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு இவர் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்து அதில் தேறியதும் 1893-ம் வருஷத்தில் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.

* * * * *

கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்ததும் இவர் தமது பாரிஸ்டர் தொழிலை நடத்த ஆரம்பித்தார். ஆனால், இவர் தகப்பனார் இன்சால்வெண்டு கொடுத்தவராதலால் அது இவருடைய அபிவிருத்திக்கு ஒரு தடையாகவே இருந்தது. ஆதியிலே பொது விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளாமலிருந்ததற்கு இஃதொரு முக்கிய காரணம் என்று கூறலாம். எனவே, தமது தகப்பனார் பட்ட கடனை எப்படியாவது தீர்த்து விடுவதென்றும், தமது குடும்பத்திற்கு இன்சால்வெண்டு குடும்பம் என்ற பெயரில்லாமற் செய்துவிட வேண்டுமென்றும் சங்கற்பம் செய்துகொண்டார். கல்கத்தா ஹைகோர்ட்டில் தமக்கு அதிக வரும்படி கிடைப்பதில்லை யென்று தெரிந்து கொண்டதும், இவர் சிறிது காலம் வெளியூர்களுக்குச் சென்று அங்குத் தமது தொழிலை நடத்தி வந்தார்.

* * * * *

கடைசியில் 1903-ம் வருஷம் பாபு அரவிந்தகோஷ் மீது அரசாங்கத்தார் வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கில் இவர் அரவிந்தர் சார்பில் நியாயவாதியாக ஆஜரானார். இவருடைய திறமையான வாதத்தின் பயனாக பாபு அரவிந்தர் விடுதலை பெற்றார். இதற்குப் பிறகே சித்தரஞ்சனருடைய கீர்த்தி எங்கும் பரவலாயிற்று. மீண்டும் கல்கத்தாவிலேயே நிரந்தரமாகத் தமது வக்கீல் தொழிலை நடத்த ஆரம்பித்தார். நல்ல வரும்படி கிடைக்க ஆரம்பித்தது. தகப்பனாருடைய கடனை ஒரு தம்படி கூட இல்லாமல் தீர்த்து விடுவதாகச் செய்துகொண்ட உறுதியை அநுபவத்திற்குக் கொண்டுவர ஆரம்பித்தார். சுமார் பதினாறு லட்சம் ரூபாய் கடனையும் தீர்த்து விட்டபிறகு, இன்சால்வெண்டு பந்தத்தினின்று தம்மை விடுதலை செய்ய வேண்டுமென்று, தேசபந்து தாஸர் ஹைகோர்ட்டில் மனுச்செய்து கொண்டபோது நீதிபதி பிளெட்சர் இன்சால்வெண்டாகப் போன ஒருவருடைய பழைய கடன்களை மீண்டும் ஒருவர் ஏற்றுக் கொண்டு அவைகளைத் திருப்பிக்கொடுத்து இன்சால்வெண்டு பந்தத்தினின்று நீங்கிக்கொள்வது இதுவே முதல் தடவை என்று பேசினார். இச்செய்கையினால் ஜனங்களுக்கு தேசபந்துவினிடத்தில் ஒரு நம்பிக்கையும் மரியாதையும் ஏற்பட்டன.

இதற்குப் பிறகு ஸ்ரீமான் தாஸர் இலக்கியத் துறையில் தமது கவனத்தைச் சிறிதளவு செலுத்த ஆரம்பித்தார். 1915-ம் வருஷத்தில் "நாராயணா" என்ற ஒரு மாதப்பத்திரிகை ஆரம்பித்தார். மகாமகோபாத்தியாய ஹரப்பிரசாத் சாஸ்திரி, விபின் சந்திர பாலர் முதலிய அறிஞர்கள் இதற்குக் கட்டுரை எழுதி வந்தார்கள். ஸ்ரீமான் தாஸருடைய குடும்பத்தைக் கவிஞர் குடும்பம் என்று கூறலாம். இங்ஙனமே தேசபந்துவும் புதிய துறையில் கவிகள் இயற்றுவதில் அபாரமான சக்தி வாய்ந்தவர். 1894-95-ம் வருஷத்தில் பல கவிகள் அடங்கிய "மலஞ்சா" என்ற ஒரு நூலை தேசபந்து தாசர் வெளியிட்டிருக்கிறார். இதற்குப் பிறகு வேறு பல நூல்களையும் வெளியிட்டிருக்கிறார். வங்காள இலக்கிய மகா நாட்டார் இவரை ஒரு வருஷத்தில் தமது தலைவராகத் தெரிந்தெடுத்தார். பிறகு அரசியல் துறையிலும் தலையிட்டு உழைக்க ஆரம்பித்தார்.

* * * *

தேசபந்துவின் தேசபக்தி மாசு மறுவற்றது; உண்மையானது. தமது சுய நலத்திற்காக அவர் தேச வேலையில் ஈடுபட்டதேயில்லை. அவருடைய திறமையும் தரும சிந்தனையும் அவரை முன்னுக்குக் கொண்டுவந்து விட்டன. அவர் ஒரு தீவிர காங்கிரஸ் வாதியாக இருந்தார். வக்கீல் தொழிலில் இவருக்கு ஏராளமான வரும்படி வந்து கொண்டிருந்த காலத்திலும் இவர் தேச சேவையைச் சிறிதும் மறக்கவில்லை. 1917-18-ம் வருடங்களில், அப்போதைய அரசியல் நிலைமையைப் பற்றி வங்காள மெங்கும் பல பிரசங்கங்கள் செய்திருக்கிறார். பெசண்டம்மையார் காப்பில் வைக்கப்பட்ட காலத்து, அதைப் பலமாகக் கண்டித்துப் பேசிய தலைவருள் இவரும் ஒருவர். பெசண்டம்மை காப்பில் வைக்கப்பட்டதைக் கண்டிக்கக் கல்கத்தா டவுன் ஹாலில் கூட்டுவதாக இருந்த ஒரு கூட்டம் அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்டது. அந்தத் தடை, தேசபந்து தாஸரின் முயற்சியினால் நீக்கப்பட்டது. 1917-ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரசில் சுய ஆட்சி தீர்மானத்தைப்பற்றி இவர் செய்த உபந்நியாசம் அனைவராலும் போற்றப்பட்டது.

* * * * *

1919-ம் வருஷத்தில் நடைபெற்ற பஞ்சாப் படுகொலை இவருடைய உணர்ச்சியைத் தீவிரமாகக் கிளப்பிவிட்டதென்று கூறலாம். அப்படு கொலையைப்பற்றி விசாரிக்கக் காங்கிரசால் நியமிக்கப்பட்ட கமிட்டியில் இவர் ஓர் அங்கத்தினராக நியமிக்கப் பட்டார். இக்கமிட்டியார் மிகவும் சாதாரணமான எல்லாராலும் அங்கீகரிக்கப் படக்கூடிய சிபார்சுகளையே செய்தனர். ஆனால் அரசாங்கத்தார் இவைகளைக் கவனிக்கவில்லை. எனவே, சட்டசபைக்குள் சென்று ஒத்துழையாமை செய்யவேண்டுமென்று அமிருதசரஸ் காங்கிரசில் இவர் கூறினார். மகாத்மா காந்தி பூரண ஒத்துழைப்பே செய்ய வேண்டுமென்று கூறினார். கடைசியில் லோகமானிய திலகர் பரஸ்

பர ஒத்துழைப்பு என்ற முறையைக் கையாள வேண்டுமென்று கூறினார். இதை இருவரும் அங்கீகரித்துக் கொண்டனர். பிறகு சுமார் ஆறு மாதம் கழித்து மகாத்மா காந்தி ஒத்துழையா இயக்கத்தைத் தோற்றுவித்தார். கல்கத்தாவில் லாலா லஜபதிராய் தலைமையில் கூடிய விசேஷ காங்கிரசில் ஒத்துழையாமைத் தீர்மானத்திற்கு மாறாகத் தேசபந்து போராடிய போதிலும், காங்கிரஸ், அத்தீர்மானத்தை நிறைவேற்றி விட்டபடியால் அதற்குத் தாம் கீழ்ப்படிய வேண்டுமெனக் கருதி 1921 வருஷம் ஜனவரி மாதம் தமது வக்கீல் தொழிலை நிறுத்திவிட்டார். இவர் வக்கீலா யிருந்து சம்பாதித்த காலத்தில், அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு இரை யானவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றி வந்தார். இன்னும் பலர்க்கும் பலவித மான உதவிகளைச் செய்துவந்தார். இத்தகைய தரும சிந்தையுடைய வர் திடீரென்று வக்கீல் தொழிலை நிறுத்தியதும் பலர்க்கும் சங்கடம் ஏற்பட்டது. பிறகு 1921ம் வருஷம் டிசம்பர் மாதம் தேசபந்து கைதி செய்யப்பட்டார். 1922-ம் வருஷம் பிப்ரவரி மாதம் ஆறு மாதம் தண்டனை விதிக்கப்பட்டார். இந்தத் தண்டனையைத் தேசத்தின் பொருட்டு இவர் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார்.

* * * * *

பிறகு 1922-ம் வருஷம் டிசம்பர் மாதம் கயை காங்கிரசில் இவர் தலைமை வகித்துச் செய்த உபந்நியாசத்தில் பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்தியா எந்நிலை யடைந்திருக்கிற தென்பதைப் பற்றி விரிவாகக் கூறினார். அதற்குப் பிறகே சுயராஜ்யக் கட்சி ஏற்பட்டது. காங்கிரஸிடத்தில் இவருக்கு அளவுகடந்த பக்தி இருந்ததனால் காங்கிரஸின் ஓர் அம்சமாகவே சுயராஜ்யக் கட்சி இருக்கும்படி செய்தார். இவைகளைப்பற்றி இங்கு நாம் விரிவாகக் கூற வேண்டுவ தில்லை. பிறகு வங்காள மாகாணச் சட்டசபையில் அங்கம் பெற்று, அங்கு இரட்டையாட்சி முறையை எப்படியாவது ஒழித்துவிட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். சென்ற வருஷம் பெல்காமில் நடைபெற்ற காங்கிரஸுக்கு இவர் விஜயம் செய்து அகில இந்திய புஸ்தக சாலை மகாநாட்டுக்குத தலைமை வகித்தார்.

* * * *

பெல்காம் காங்கிரசிலிருந்து திரும்பி வந்தவுடன் இவர் அதிக நோயாகப் படுத்துக்கொண்டார். பிறகு சிறிது காலம் ஓய்வாக இருக்க வேண்டி, பாட்னாவில் தமது சகோதரருடன் தங்கி யிருந்தார். சென்ற மார்ச்சு மாதம் நடைபெற்ற வங்காளச் சட்டசபைக் கூட்டத்திற்கு இவர் ஒரு நாற்காலியில் எடுத்துவரப் பட்டதும், இவர் பிரசன்னமா யிருந்த தன் பயனாக மந்திரிமார்களுடைய சம்பளம் நிராகரிக்கப் பட்டதும் நேயர்களுக்கு ஞாபக மிருக்கும். கல்கத்தா நகர சபையைச் சுயராஜ்யக் கட்சியார் கைப்பற்றியதும் இவர் மேயராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். சென்ற ஏப்ரல் மாதம் முதல் தேதி இவர் மீண்டும்

ஒரு வருஷத்திற்கு மேயராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். சமீபத்தில் பரித்பூரில் கூடிய வங்காள மாகாண மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். இதற்குப் பிறகு இவர் டார்ஜீலிங்கு சென்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். இங்கே எவரும் எதிர்பாரா திருக்கும் போது ஆண்டவன் திருவடி நீழலில் சேர்ந்தார்.

* * * *

தேசபந்து தாஸர், தமது நாட்டிற்காகப் பொன்னைக் கொடுத்தார்; பொருளை விடுத்தார்; சுகபோகங்களைத் துறந்தார்; தமது தொழிலை உதறித் தள்ளினார்; கடைசியில் தமது உயிரையும் தேசத்திற்காக விட்டார். தேசபந்து தாரகேஸ்வர சச்சரவின்போது நடந்துகொண்ட பான்மையையும் அப்பொழுது அவர் பேசிய வீர மொழிகளையும் எவரும் மறந்துவிட மாட்டார். தேசபந்து தம்முடைய அரிய மாளிகையையும் தேசத்தின் பொது உபயோகத்திற்காகவே அர்ப்பணம் செய்துவிட்டார். இது சம்பந்தமாக மகாத்மா காந்தி, சமீபத்தில் கல்கத்தாவில் செய்த ஓர் உபந்நியாசத்தில் பின் வருமாறு கூறினார்:—"(தேசபந்துவின் வாசஸ்தலமா யிருந்த) ரஸ்ஸா ரோட் 148-வது எண்ணுள்ள இல்லத்தில் நான் இன்று எவ்வளவு துக்கத்துடன் நுழைந்தேன் என்பதை உங்களுக்கு முன்னர்க் கூறி யிருக்கிறேன். அந்த வீடு இனி தேசபந்துவின் வாசஸ்தலமா யிராது என்று தெரிந்து கொண்டேன். பொதுஜன உபயோகத்திற்காக அதைச் சில டிரஸ்டிகளிடம் அவர் ஒப்புவித்துவிடத் தீர்மானித் திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஆனால், உலகப் பற்றுள்ள ஒரு மனிதன் என்ற முறையில் நான் அந்த மாளிகையில் நுழையும் போது, அதனுடைய சொந்தக்காரர் தாமாகவே அதைத் துறந்து விட்டார் என்ற எண்ணத்துடன் பிரவேசிக்கும்போது, என் கண்களில் நீர் பெருகியது."

* * * * *

தேசத்திற்குப் பந்துவாயிருந்த சித்தரஞ்சன தாஸர் தேசத்திற்காகவே இருந்தார்; தேசத்திற்காகவே இறந்தார். அவர், சிறைக்குச் செல்லு முன்னர்க் கூறிய கீழ்க்கண்ட மொழிகள் எவருக்கும் ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. "என் மணிக்கட்டுகளில் கைவிலங்குகள் இருப்பதுபோல நான் உணர்கிறேன். என் தேகத்தில் இரும்புச் சங்கிலிகள் பிணிக்கப்பட் டிருக்கிறதை நான் அறிகிறேன். இதுவே பந்தத்தின் துயரம். இந்தியா முழுவதும் ஒரு பெரிய சிறைச் சாலை. காங்கிரஸ் வேலை எப்படியாவது நடைபெற வேண்டும். நான் சிறைக்கு உள்ளே யிருந்தாலென்ன? வெளியே யிருந்தாலென்ன? நான் உயிருடன் இருந்தா லென்ன? இறந்து போனாலென்ன?"

ஜாதி

ஆதியிலே ஜாதி கிடையாது; ஜாதி இடையிலே ஏற்பட்டது.

ஜாதி நாம ரூபமாகிய தேக சம்பந்த மானதே. தேகத்தை நோக்கியே பலர் நாம் பிராமணர் அவர் சூத்திரர், இவர் முகமதியர் எனப் பல வகையாக பெயரிட்டுத் தங்களை அழைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஆராய்ந்து பார்க்கின் எல்லாத்தேகங்களும் வித்தியாச மின்றிப் பஞ்ச பூதங்களால் அமைந்தவை களே. மண்ணால் செய்யப்பட்ட பாண்டங்கள் உரு வித்தியாசத்தாற் பல பெயர்களைக் கொண்டிருப்பினும் அவை யனைத்தும் மண்ணே யாகும் என்பது யாவரும் ஒப்பத் தக்கது. மனித தேகத்திலோ யாதொரு வித்தியாசமு மில்லாமல் ஒரே விதமான அங்கங்களைக் கடவுள் ஏற்படுத்தி யிருக்கிறார். மற்ற வித்தியாசங்கள் நம்மாலேயே கற்பிக்கப் பட்டவைக ளாகும். ஆனால், ஆன்மாக்களில் வித்தியாசங்கள் கற்பிக்க வழி யில்லாததால் எல்லா ஆன்மாக்களும் ஒன்றாகக் கடவுள் சொரூபமாய் அமைந்திருக்கின்றன. அவ்வான்மாக்களை ஆட்டி வைப்பவரும் அவரே. எல்லாம் வல்ல பரம் பொருள் வித்தியாச மில்லாது படைத்திருக்க, இவர்கள் ஏனோ வித்தியாசம் பாராட்டுவது ?

தொழில் ஒற்றுமை கருதி ஒரே வகைத் தொழிலாளிகள் ஒன்று சேருதல் இயற்கை யாதலால், தொழில் வேற்றுமை கருதி ஜாதி, வேற்றுமை ஏற்பட்டிருக்க வேண்டு மென்பது தெளிவாகின்றது. நம் இந்தியாவில், ஆரியர் குடியேற்றத்திற்குப் பின் சிலர் ஜனசமூகத்திற்கு வேத மோதுவதும், கல்வி கற்பதுமே தொழிலாகக் கொண்டனர். சிலர் தீய விலங்குகளாலும் அந்நிய அரசர்களாலும் ஜனங்கள் தீங்குறா வண்ணம் பாதுகாத்தலை மேற் கொண்டனர். பலர் பண்ட மாற்றலை பெரிதாகக் கையாண்டனர். எஞ்சி நின்றவர் மற்றுமுள்ள சாதாரணப் பணிகளைச் செய்ய ஆரம்பித்தனர். இவர்கள் யாவரும் நெடு நாள் ஒற்றுமையுடன் ஒருவருக் கொருவர் உதவியாய் வாழ்ந்து வந்தனர். நால்வகைத் தொழிலாளருக் குள்ளும் யாதொரு உயர்வு தாழ்வு இல்லாது ஒவ்வொருவரும் பொதுவாக ஜனசமூகத்திற்குப் பாடுபட்டு வந்தனர்.

இவ்வாறு பல வாண்டு கழிய, தேக வன்மையாலும், அறிவு முதிர்ச்சியாலும், செல்வச் செருக்காலும் ஒருவருக் கொருவர் விரோத மாயினர். அதனால் ஜனசமூகத்திற்கு விளையும் நன்மை அகன்றது. ஒவ்வொருவரும் தாங்கள் பிறருக்குச் செய்ய வேண்டிய கடமையை மறந்தனர். மறக்கவே ஒற்றுமை குலைய லாயிற்று. நாடும் க்ஷீணிக்க ஆரம்பித்தது.

பின்னர் சமயபேதம், அகம்பாவம், சுய நலவிருப்பம் முதலியவைகளால் ஜாதிப் பிரிவுகள் ஏற்பட்டன. "சிறப்பும் சீலமும் அல்லது பிறப்பு நலந்தருமோ பேதையீரே" என்ற முதுமொழியை மறந்து, அகந்தை கொண்டு ஜாதி மத பேதத்தை விருத்தி செய்து

விட்டனர். ஜாதி மதபேதம் வளர்ந்து நாளடைவில் பெரிய போராட்டங்களுக்கு இடம் தந்து விட்டது. இப்போராட்டங்கள் அயல் நாட்டார் நம்மை இழிவாகக் கருதும்படி செய்து விட்டன. நமது சுக வாழ்க்கையையும் கெடுத்து விட்டன. கல்வி யறிவுடைய பெருமக்கள் இதனை உய்த்துணர்ந்து, கைத்தொழிலால் சீர்ப்படுத்தி, நாணயத்தால் நன் மதிப்புப் பெற்று, நம் பாரத மக்கள் பயன் பெற்று, அந்நிய தேசத்தவரால் மதிக்கப் படும் கண்ணியத்தைப் பெற்றுச் சிறப்புடன் வாழச் செய்ய வேண்டாமா? நம் முன்னோர் கள் நல்ல ஸ்திதியில் இருந்தார்கள் என்று சொல்வதில் பயன் என்ன? நாமும் அவர்களைப் போல் ஒன்று பட்டு உயர் நிலை அடைய வேண்டியது அவசிய மல்லவா?

சகோதரர்களே! நாம் ஜாதி மதபேதங்களை வேரோடு களைந்து வேற்றுமை நீங்கி ஒற்றுமைப் படவேண்டும். நாம் அனைவரும் பாரத மாதா வாகிய தாயின் பிள்ளைகளான சகோதரர் என்று கருத வேண்டும்.

நம் தாய் நாடு க்ஷீண தசை யடைய ஜாதி மதபேதமே முதல் காரணமாகும். அதைப் போக்கி நம் தாய் நாட்டை முன்னேற்ற மடையச் செய்ய பலர் கங்கணங் கட்டி இராப்பகலாய் உழைத்து வருகிறார்கள்! நாமும் அவர்களுடன் கூடி, ஜாதிக் சர்வத்தை ஒழித்து, ஒற்றுமைப் பட்டு நம் நாட்டின் நன்மையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

"எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்"

"சாதிக ளில்லை யடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்."

ரா. பி.

திருவாய் மொழி.

பண்டை நான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும்
பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல் மாருதமும், குரைகட லேழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்
அண்டமுந் தானாய் நின்ற எம்பெருமான்
அரங்கமா நகர் அமர்ந்தானே.

ஒரு கோடீஸ்வரரின் இரகசியம்

இந்தக் கோடிஸ்வரரின் இரகசியத்தை ஐரோப்பாவில் சிலரே அறிந்திருக்க முடியுமானால், நம் இந்தியாவில் ஒருவரும் தெரிந்திருக்க நியாயமில்லை. இவர் 1850-ம் வருஷத்தில் கிரேக் நாட்டில் பிறந்தவர். இவரைப் பெற்ற தாய் தந்தை ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர் பாரிஸிலும் லண்டனிலும், வித்தை பயிலுவிக்கப்பட்டார். லண்டனிலிருந்து வயிற்றுப் பிழைப் புக்காக பரிஸியாவுக்குப் பயணமானார். கணக்கில்லாத ஐச்வரியம் எண்ணை ஊற்றில் அங்கு புதைந்திருப்பதாகக் கண்டு கொண்டார். கையில் பணமில்லாத படியால் அச்சமயம் இது விஷயமாய் முயற்சி செய்ய முடியவில்லை. அங்கிருந்து உடனே ஜெர்மனிக்குத் திரும்பினார். குருப் ஆயுத சாலையில் கூலிவேலையில் அமர்ந்து கொண்டார். கஷ்டப்பட்டு வேலை செய்கிறவரானபடியால், மேல் உத்தியோகஸ்தர்களின் தயவை விரைவில் சம்பாதித்துக் கொண்டார். புத்திசாலித்தனமாய்,குண்டு, துப்பாக்கி செய்கிற ரகசியங்களையும் கற்றுக்கொண்டார். எப்பொழுதும், கஷ்டப்பட்டு வேலை செய்யப் பிரியப்படுவார். எவ்வளவு கடினமான வேலையா யிருந்தாலும் சலிப்பதில்லை. தேனீயைப்போல் சதாவும் ஏதாவது செய்து கொண்டே இருப்பார். ஒவ்வொரு விஷயத்தையும் காலந் தவறாமல் குறித்த காலத்தில் முடிப்பர். (Punctuality) அவருடைய வார்த்தையே பத்திரம். எது வந்தாலும், வாக்குப்படி நடக்கும் சுபாவ முள்ளவர்.

குறித்த காலத்தில் கிரமப்படி கஷ்டப்பட்டு உழைக்கும் தன்மை வாய்ந்தவர். நாளைக்கு நடக்கப்போவதை உணர்ந்து சிந்திக்கிறவர். செல்வந்தனாக வேண்டுமென்று ஆசை கொண்டவர்.

ஆசை யென்பது என்ன ? நாம் இப்பொழுது இருப்பதை விட சற்று உன்னதமாக நாம் வாழ்நாளைச் சுகமாகக் கழிக்க நினைப்பதே யல்லாது வேறொன்று மில்லை. எப்பொழுதும் தீவிர முயற்சி செய்து கொண்டிருப்பது தான் ஆசையின் அந்தரங்கமான அர்த்தம். தனக்கு எதிரில் தோற்றும் உன்னதமான கோட்டையை அடைய அவாக்கொண்டு உழைப்பதுதான் ஆசை. ஆசை இருந்தால் சோம்பேறித்தன மில்லை யென்று சொல்லலாம். ஆசை யிருப்பவராயின் எச்சமயமும் வேலை செய்யவே பிரியப்படுவார்கள். ஆசை யிருப்பவனுக்கு, நன்மையில் வளர்ச்சிக்கு அவகாசம் எப்பொழுதும் ஏற்படுகிறது. ஆசையிருப்பவனை அதிகாலையில் நித்திரா தேவி எழுப்பி விடுவாள். ஆசையுள்ளவன் எப்பொழுதும் நல்ல சகவாசம், நல்ல சினேகிதனைத் தேர்ந்தெடுப்பான். ஆசையுள்ளவன் எதிலும் அதைரியப்பட மாட்டான்.

நேயர்களே, உங்களிடமும் அத்தகைய ஆசை ஏற்படவேண்டும். இல்லையேல் முயற்சி செய்யுங்கள். நமது வாழ்நாள் ஜீவிய

காலம் சந்தோஷமாயும், திருப்திகரமாயும், கழிய வேண்டுமானல் ஆசை தான் வேண்டும்.

இவர் ஆசைக்குத் துணையாக, கொடிய யத்தமும் ஆரம்பித்தது போலும். எதில் கை வைத்தாலும் தங்க மாயிற்று. எண்ணெயிலும் யுத்தத் தளவாடத்திலுமே கோடிப் பவுன் சம்பாதித்து விட்டார். பின் ஏனோ சும்மா யிருப்பார்? பாங்குகளிலும் எண்ணெக் கிணறுகளிலும், கப்பல் கட்டும் கம்பெனிகளிலும், ஐரோப்பாவிலுள்ள பெரிய போஜன விடுதிகளிலும் பங்கு வாங்கத் தொடங்கி விட்டார். அவர் வலையை எவ்வளவு தூரம் வீசமுடியுமோ அவ்வளவு தூரம் வீசி சில வருடங்களுக்குள் ஐரோப்பாவிலேயே பெருத்த பணக்காரராகிவிட்டார். கோடி கோடியாய்ச் சம்பாதிக்க நினைத்துக் கொண்டிருந்தார். "மனம் போல் வாழ்வு" என்ற ஆன்றோர் வார்த்தைக் கிணங்க இவருக்கும் அப்படியே வந்து கொண்டிருந்தன. இவருக்கு எந்த மாதிரி செல்வம் பெருகி வந்ததோ அதே மாதிரி தாராளமாய்த் தர்மமும் செய்து வந்தார். பல சர்வகலாசாலைகளுக்குப் பெருத்த பண உதவி ரகசியமாய்ச் செய்திருக்கிறார். தன் பெயரைப் பகிரங்கப் படுத்தக் கொஞ்சமும் பிரியமில்லை—கோடிக்கணக்காய்த் தர்மஸ்தாபனங்களுக்குக் கொடுத்திருக்கிறார். ஆனல், கொடுத்தவர் யாரென்று அநேகருக்குத் தெரியாது.

கோடிக்கணக்காய்ச் சம்பாதித்தது வியாபாரத்தினல் தான். ஒரு துரைத்தனத்தாரிடமும் சேவகம் செய்ய வில்லை. நமது நாட்டில் உத்தியோகம் உத்தியோகமென்று அலைந்து திரியும் யௌவன பட்டதாரிகள் கவனிப்பார்களாக.

இவர் டாம்பீக மற்றவர். தெருவில் போகும் போது இவரைத் திரும்பிக் கூட ஜனங்கள் பார்க்க மாட்டார்கள். இவர் பெயர் ஸர் பேஸில் ஸஹராவ் (Sir Bazil Zaharoff.) ஐரோப்பாவி லுள்ள அரசர்களை விட பன் மடங்கு செல்வார்க்கு வாய்த்தவர். K. S. S.

விவசாயத்தில் புதுமை

காலஞ் சென்ற ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் 'பால பாரதி' யில் எழுதிய ஒரு வியாசத்தி னிடையே கூறுகிறார் :—

இந்த (புதிய) வழிகளில் வேலை செய்து ஐரோப்பியரும் அரிய பயனை அடைந்து வருகிறார்கள். பெல்ஜியம் நாட்டில் பத்து வருஷத்து விளைவைச் சராசரி பார்த்ததில்

ஒரு ஏகராவில் ஒரு போகத்துக்கு 550 பக்கா கோதுமை விளைந்ததாம். நன்றாகப் பண் படுத்தின பூமியில் 1134 பக்கா வந்ததாம். அந்த நாட்டில் ஓர் சதுர மைலுக்கு 586 ஜனங்கள் வீதம் இருக்கிறார்கள். 40 வருஷங்களுக்கு முன் இவர்களில் 490 ஜனங்களின் ஆகாரம் அவர்களுடைய குறுகிய நாட்டிலேயே உண்டாக்கப் பட்டதானால் அவர்களுடைய வேளாண்மைத் திறத்தை ஒரு வாறு நிச்சயம் செய்து கொள்ளலாம். அமெரிக்காவில் நன்றாக வேலை செய்த பத்து வேளாளர் ஒரு ஏகராவில் 1730 படி முதல் 2300 படி வரையில் மக்காச் சோளம் அறுத்தார்கள். சில ஏகராக்களில் 31 டன் அதாவது 69,440 ராத்தல் உருளைக் கிழங்கு எடுத்திருக்கிறார்கள்! தென் மார்க்கில் ஏகராவிற்கு 800 பக்கா கோதுமை விளைகிறது. இந்நாட்டில் 28 லக்ஷம் ஜனங்கள் தானிருக்கிறார்கள். சாகுபடிக்கு யோக்கியமாக எழுபது லட்சம் ஏக்கர் தான் இருக்கிறது. இந்த பூமியிலிருந்து இவர்கள் 4 கோடி பவுன் கிரயமுள்ள உணவுப் பதார்த்தம் உண்டு பண்ணுகிறார்கள். 145 லக்ஷம் பவுன் விலையுள்ள உணவுப் பண்டங்களை இவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள்!

ஆனால் பிரெஞ்சுத் தோட்டக்காரர்களோ பழ மரங்கள் வைத்தும் கறிகாய்ப் பதார்த்தங்கள் பயிர் செய்தும் மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமான லாபம் சம்பாதிக்கிறார்கள். ஓர் உதாரணம் எடுத்துக் காட்டுவோம். போன்ஸ் என்று ஓர் தோட்டக்காரன் இரண்டே முக்கால் ஏகரா வைத்திருந்தான். தண்ணீர் இறைப்பதற்கு ஓர் யந்திரம் உள்பட அவனுடைய நிலத்தின் கிரயமும் செலவும் சேர்த்து 1136 பவுன் அல்லது ரூ. 17000 ஆயிற்று. தோட்டத்தில் போன்ஸைச் சேர்த்து எட்டுப் பேர் வேலை செய்தார்கள். கறிகாய்களைப் பாரிஸ் சந்தைக்குக் கொண்டு போவதற்கு போன்ஸ் ஒரு குதிரையும் வைத்திருந்தான் பாரிஸிலிருந்து திரும்பும் போது அவனும் ஆட்களும் எரு அள்ளி வருவார்கள். ஓர் வருஷத்தில் இவ்வாறு ரூ. 1500 பெறும்படியான எரு வாரி வருவார்கள். குத்தகைக்கும் வரிக்குமாக வருஷம் ரூ. 1500 செலவாகும். இந்த இரண்டே முக்கால் ஏகர் நிலத்தில் வரும் வரும்படியோ சொல்லி முடியாது. அவற்றுள் முக்கியமா

ணவை, 20,000 ராத்தல் கரோத்து (பறங்கிக்காய் போலத் தித்திக்கும் ஒருகாய்); 20,000 ராத்தல் வெங்காயம், முள்ளங்கி முதலியன; 6000 முட்டைக் கோஸ்; 3000 காலிப்ளவர்; 5000 கூடைத் தக்காளிப் பழம்; 60000 முதல் தரப் பழங்கள்! 1,54,000 ஸலாது! எல்லாம் சேர்த்துப் பார்த்ததில் இரண்டரை லக்ஷம் ராத்தல் சாகங்கள் அகப்பட்டன! இவன் ஒருவன் தான் இவ்வாறு வேலை செய்து வந்தான் என நினைக்க வேண்டாம். பாரிஸ் நகரத்தைச் சுற்றி 5000 பேர் 2125 ஏகராக்கள் பயிர் செய்து, பாரிஸிலுள்ள 20 லக்ஷம் ஜனங்களுக்கு வேண்டிய சாகங்கள் (காய் கறிகள்) உற்பத்திசெய்வது மில்லாமல் லண்டனுக்குக் கூட அனுப்பி வருகிறார்கள்.

இன்னும் ஒரு உதாரணம் மாத்திரம் காட்டுவோம். கொன்ஸே என்று இங்கிலாந்துக்குச் சொந்தமான ஓர் பிரெஞ்சுத் தீவு இருக்கிறது. அதிலுள்ள பாறைகள், மலைச் சிகரங்கள் உட்பட அதன் விஸ்தீரணம் 16000 ஏகராவுக்கு மேலில்லை. அவற்றுள் 6884 ஏகராக்கள் தாம் பயிர் செய்ய யோக்கிய மானவையாம். ஆனால் அத்தீவிலிருந்து வருஷா வருஷம் ஏற்றுமதி யாகும் சாகங்களைக் கணக்கிட்டு எடுத்துச் சொன்னால் பொய் போல இருக்கும்.

முப்பது வருஷங்களுக்கு முன் $11\frac{1}{4}$-லக்ஷம் ராத்தல் கொடி முந்திரிப் பழம், $22\frac{1}{2}$- லக்ஷம் ராத்தல் தக்காளிப் பழம், 20,000 பவுன் பெறுமானமுள்ள உருளைக் கிழங்கு, 9000 பவுன் முள்ளங்கி முதலியன, 3000 பவுன் மதிப்புள்ள புஷ்பங்கள், 200 பவுன் விலையுள்ள நாய்க்குடை ஆக ஒரு லட்சம் பவுனுக்குச் இத்தீவார் லண்டனுக்குச் சாகங்கள் அனுப்பி வந்தார்கள். ஆனால் 1832-ல் அதாவது 14-வருஷங்களுக்கு முன் அவர்கள் 5-லட்சம் பவுன் விலையுள்ள உருளைக் கிழங்கு உட்பட 11-லட்சம் பவுனுக்குச் சாகங்கள் ஏற்றுமதி செய்தார்களாம்! இன்றைக்கு இவ்வியாபாரம் இன்னும் அதிகமாயிருக்கும் என்பதில் தடையே யில்லை. இதனோடு இவர்களுடைய நிலங்களில் 7260 மாடுகளுக்கும் 900 ஆடுகளுக்கும் 1480 குதிரைகளுக்கும் தீவனம் கிடைத்ததாம்!

பத்திராதிபர் குறிப்புகள்

ஐயோ! அந்தோ! பரிதாபம். பரிதாபம். குருகுலத் தலைவரும் உண்மை தேச வீர சிகாமணியுமான ஸ்ரீமான் வ. வெ. சு. ஐயர் பாவநாசத்தில், கலியாணதீரத்தில் பரிதாபமான மரணத்தை அருமை மகள் சுமித்திராவுடன் அடைந்தாரென்பதைப் பாரத நேயர்களுக்குத் தெரிவிக்க எழுதுகோலைக் கையில் எடுக்கும் போதே கைகள் பதருகின்றன. மனம் வருந்தி ஏங்குகிறது. கண்கள் நீரால் மறைபடுகின்றன. இச்செய்தி கேட்டுத் தக்கித்துக் கண்ணீர் வடியாத தமிழனும் பாரிலுண்டோ? ஏககாலத்தில் வீர புருஷனையும், அருமைப் புதல்வியையும் இழந்த ஐயரின் மனைவி எப்படித்தான் துடிப்பரோ? ஈசனே! ஐயரின் பாலன்—ஒரே மைந்தன் என்ன பாடுபடுவான்? இவர்களுக்கு யாரால் ஆறுதல் சொல்ல முடியும்?

குருகுல பசலைகள்பால் இவர் அன்புதா னென்னே? தம் சொந்தக் குழந்தைகளைப் போலல்லவோ நடந்து வந்தார்? ஐயர் எண்ணமெல்லாம், குருகுல பிரமச்சாரிகளில் பலரை, நானக், கோபிந்தசிங்,

பத்திராதிபர் குறிப்புகள்

சிவாஜி, கரிபால்டி, மஜினி போன்ற வீரர்களாக்க வேண்டு மென்று ஒரே கனவு கண்டு கொண்டிருந்தார். தமிழ் நாட்டை வீர நாடாகச் செய்ய வேண்டு மென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார். தமிழ் நாட்டில் ஒரு புது சமயம் உண்டு பண்ண வேண்டுமென்று எண்ணி யிருந்தார். தமிழ் மொழியின் கீர்த்தி உலகில் பரவவேண்டு மென்று திருக்குறள் முதலிய பலசிறந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தார். இன்னும் சில காலம் இருந்திருந் தால் அரிய வேலைகள் செய்து முடித்திருப்பார். ஐயோ தமிழ் நாடே, ஏனோ! இம்மகானை விழுங்கி விட்டாய்? இம்மாதிரி நினது தவப் புதல்வர்களை இழந்து கொண்டிருந்தால் வருங்காலம் மிகவும் கவலைக்கிடமாயும், நெருக்கடியாயு மிருக்கு மென்று பயப்பட வேண் டியிருக்கிறது.

தமிழ் நாட்டுத் 'தாதாபாய்' தியாகராஜரை இழந்து, அப்புண் நன்கு ஆறுமு லிருக்கும்போது, இடிவிழுந்ததுபோல் இன்று நமது ஐயரின் செய்தியைக் கேட்டு திடுக்கிட்டுப் போனோம். என்ன செய் வது? யாரிடம் முறை யிடுவது? தெய்வமே. தமிழ் நாட்டின்பால் நினது கருணை யில்லையா?

நமது ஐயரை நாம் முதல் முதல் சென்னையில் காந்தியடியின் முன் பார்த்தது குருகுல வாதத்தில்தான். அன்று அவர் சாந்தமே உருக் கொண்டால்போல் நீண்ட அழகிய தாடியுடன் வீற்றிருந்த தோற்றம் முன்காலத்து முனிபுங்கவரின் ஞாபகம் வந்தது. அவர் வச்சிர தேகமும், தியாக கோலமும், சாந்த மொழியும் இனிய புன்முறுவலும் நம்முன் தோன்றி எமது உள்ளத்தை உருக்கு கின்றன. வீரத்துடன் தனது வாழ்நாளை ஆரம்பித்தார். முடிவில் வீரத்திலே முடித்தார்? தமிழ் நாட்டில் இவரைப் போன்ற வீரரும், தியாகியும், கல்விக்கரசும், பரிசுத்த வாழ்வும், ஆடம்பரமற்ற வாழ்க்கை யும் உள்ளவர்கள் கிடையாதென்றே சொல்லலாம். இந்நாளில், தொ ண்டராயிருந்து சிலமாதம் சிறைக்கோட்டம் சென்று வந்தவர்களுக்கு எத்தனை புஷ்பஹாரங்கள் விழுகின்றன. கூட்டங்கள் கூட்டி, ஆசி கூறப்படுகின்றன. தலைவ ரென்றும் கூசாமல் சொல்ல முன் வந்து விடுகிறார்கள். நமது ஐயர் பாலிய மாணாக்கனாய் பாரிஸ்டர் பரீட் சைக்குச் சென்றது முதலே, தேசவிடுதலையைக் கோரினவர். அன்று முதல் சாகும்வரை, உலக இன்பத்தை எதிர்பார்க்காமல் தேசத் தொண்டராகவும், வீரராகவும் இருந்து அநேக கஷ்டங்களை அடைந் தவர் இறந்தார்.

தமிழ் நாட்டிலோ, ஜாதிச் சண்டை, சமயச் சண்டை, அனந் தம் தமிழன் அன்பை அறவே மறந்து விட்டான். பெருந்நினை வில்லை. பெருஞ் செயலில்லை. குற்றம் கண்டு பிடிப்பதும் இகழ்வது மே தமிழனிடம் இயற்கையாக அமைந்து விட்டது. நமது ஐயர், ஓர்

சுதந்தர தேசத்தில் ஜனித்திருந்தால் இவர்தான் மேஸினி. இவர்தான் நெப்போலியன். நம்நாடோ—தமிழ் நாடு. ஒற்றுமை சீர்குலைந்து கிடக்கும் நாடு.

குருகுல வாதத்திலும்,ஐயர் நடந்து கொண்டது நமக்குப் பிடிக்க வில்லை யானாலும் அவர்பால் நமக்கு அன்பும், மதிப்பும், சிறிதளவு கூடக் குறைய வில்லை.

குருகுல குழந்தைகள் இனி மழைமுகம் காணாத பயிரைப்போ லவும் தாய்முகங்காணாத இளங்கன்றைப் போலவு மன்றோ வருந்தும். ஐயர் ஆரம்பத்தில் குருகுலம் ஸ்தாபித்ததும், நமது எண்ணங்கள் 2000 வருஷங்களுக்கு முன் பாரத நாட்டில் ஜ்வலித்துக்கொண்டி ருந்த சரஸ்வதி பீடமாகிய நலந்த, தக்ஷஸீல விடம் சென்றது. பெரிதும் எதிர் பார்த்திருந்தோம் தக்ஷிண நலந்தாவை. வீணாயின, வீணாயின.

இவருடைய பத்தினிக்கும், அருமைப் பாலனுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். இவர், ஆத்மா சாந்தி யடைந்து திரும்பத் தமிழ் நாட்டில் ஜனித்து தேச கைங்கரியத்தைச் செய்ய பராசக்தி அருள் புரிவாராக. ஓம் சாந்தி.

***

நமது தேசபந்து சித்தரஞ்சர்—நம்மை—பாரத நாட்டைப் பரித விக்க விட்டுவிட்டுச் சென்றாரென்று கேட்கும் போதோ இடி விழுந் ததுபோ லிருக்கிறது. நினைக்கும்போது உள்ளம் பகீரென்று பற்றி எறிகிறது. மனம் நொந்து புண்ணாகிறது. கண்ணோ அருவியைப் போல் கசிகிறது. வங்க தேசத்து முடி சூடா மன்னரும், கவர்ண் மெண்டைக்கலங்கித் திகிலடையச் செய்த சுயராஜ்யக் கட்சித் தலை வரும்,கல்கத்தா வார்டு மேயரும், சட்டமே உருவா யவதரித்த சட்ட நிபுணரும், கருணை வள்ளலும், தற்காலத்திய புத்தரும் மறைந்து விட் டார். பாரத மக்களை அவர் விட்டு பாரத பந்து தாஸர் சென்று விட்டார்.

பாரத மாதாவே, அன்னையே! எங்கு நோக்கினும், கருமேகம் கடலைப்போல் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நினது தவப் புதல்வர் களில் சிறந்த, ஒப்புயர்வற்ற, ஜோதியான கோஹினூர், இன்று கையைவிட்டுத் தவறிவிட்டது. இத்தகைய மாணிக்கம், இனி பார்ப்ப தரிது. காண்பதரிது. தாஸரை இழக்கவும் இது தருணமில்லை. தெய்வமே, எங்கள் நாட்டின்பால் நின் கருணை தானென்னே? தலை வன் இல்லாத சேனையைப்போல் எங்கள் கதி யாகிவிட்டது. அந்த வீரரை, தீரரை வங்க சிங்கத்தை இனி எப்போது காண்போம். இனி அழுதாவ தென்ன ? நொந்தாவ தென்ன ? நம்மை விட்டுப் போய் விட்டார். கடவுளே திரும்ப அவர் பாரத நாட்டில் ஜனித்து, பாரத மாதாவுக்குக் கைங்கரியம் செய்ய விரைவில் அருள் புரிவாயாக.

பத்திராதிபர் குறிப்புகள்

சிலகாலம் தேசபந்து ஜீவித்திருந்தால் மகத்தான காரியங்கள், நன்மைகள் நாட்டிற்கு உண்டாகி யிருக்கும். வெண்ணை எடுக்கும் தருவாயில், தாளி உடைந்தது போலல்லவோ இன்று முடிந்தது. ஐயோ இதைவிட துரதிர்ஷ்டம் வேறு வேண்டுமா ?

இவர், தேசத்திற்காகச் செய்த தியாகத்தை வர்ணிக்க யாரால் முடியும்? சுமார், 8 முதல் 10 லட்சம் வரை, வக்கீல் தொழிலில் வருஷம் ஒன்றுக்கு வருமானம் வந்து கொண்டிருந்தது. ஒத்துழையா இயக்கத்தில் ஈடுபட்ட வருஷம் 20 லட்சத்திற்கு வருமான முள்ள கேஸ்களை எடுக்க மறுத்து விட்டார். இருபதாம் நூற்றாண்டில் தாஸரைப்போல் தியாகி, ஞாலத்தில் எவரேனு முண்டோ ? பட்டத்திற்கும், அதிகாரிகளின் புன்சிரிப்புக்கும், கொஞ்சம் செலவழிக்கக் கூடிய காலமிது. 2000 வருஷங்களுக்கு முன் புத்த பகவான் ராஜ்யத்தையும் சகல சம்பத்தையும் அருமை மகவையும் மற்ற பந்துக்களையும் வெறுத்து திருவோடு கையில் ஏந்தி வாழ்வை வெறுத்து, காட்டிற்குச் சென்றார்.

இன்றோ, வங்க நாட்டில், நமது தாஸர் நாட்டிற்காக, சகல சம்பத்துகளையும் வெறுத்து ஒரே மைந்தனை பாரிஸ்டர் சிரன்ஜன் தாசையும் வக்கீல் தொழில் செய்யத் தடுத்து, தேசத் தொண்டில் ஈடுபடச் செய்து முடிவில், 8 லக்ஷம் மதிப்புள்ள, மாளிகையையும் தர்மத்திற்குக் கொடுத்து விட்டு, உயிரையும், தேச சேவையிலே விடுத்தார்.—நீத்தார்.

வைத்திய நிபுணர்கள் சில காலம் ஓய்வு எடுத்துக் கொள்ளும் படி எவ்வளவோ வேண்டியும் செவி சாய்த்தா ரில்லை. உண்மை வீரரால் யாங்ஙனம் முடியும்? வங்காளச் சட்டசபைக் கூட்ட மொன்றுக்குக் கடுஞ்சுரமா யிருந்தும், பல்லக்கில் தூக்கிக் கொண்டு போகும் படி செய்து, கூட்டங் கலையும்வரை அங்கே யிருந்தார். என்ன தீரம், என்ன வீரம்! சரீரத்தைக் கவனித்தா ரில்லை. சுகத்தை நாடினா ரில்லை. ஒரே நினைவு—ஒரே சொப்பனம்—அதாவது நாட்டின் விடுதலை. அவர் நினைத்த படியே இரட்டை யாட்சியை ஒழித்து விட்டே சென்றார்.

ஒத்துழையா இயக்கத்திற்கு முன் உன்னதமான ஐரோப்பிய ஆடை தரித்து, நாகரீக வாழ்வு வாழ்ந்திருக்கும் போதும் தேச பந்துவைப் பார்த் திருக்கிறோம். மகாத்மா தெய்வீக இயக்கத்தில் ஈடு பட்டு, கரடு மொரடான கத்தரைத் தரித்திருக்கும் போதும் பார்த்திருக்கிறோம். என்ன மாறுதல், என்ன வியப்பு. உண்மையாகத் தாஸர் இப்படி மாறிவிட்டா ரென்று சந்தேகித்தது முண்டு.

காசிமா நகரத்தில் நடந்த ஒரு சிறு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. சுமார் 10 வருஷங்களுக்கு முன், ஒரு ராணியின் கேஸ்க்காக ஒரு மாதம் வரை அங்கு தாமதித் திருந்தார். நாளொன்றுக்கு

ரூ. 1000 பீஸ். ஆங்கில ஹோட்டல் ஒன்றில் தாமதித்தார். அந்த இடம் காற்று வசதியில்லையென்று கங்கா நதியில் பெரிய படகு ஒன்றில் சகல வசதிகளும் செய்யப் பட்டு, படகிலே வசித் திருந்தார். 10 மணிக்குச் சரியாய் படகு கரையோரம் தேசபந்துவைக் கொண்டு விடுவதும், திரும்ப நாலு மணிக்கு ஏற்றிப் போவதுமாக, ஒரு மாதம் வரை இருந்தது. அச்சமயத்தில், இவரை ஜனங்கள் தேசபந்து வென்று அழைக்க வில்லை. தேசத்திற்காக, சகலத்தையும் துறந்து விடுவாரென்றும் நினைக்க வில்லை. கல்கத்தா பாரிஸ்டர் வந்திருக்கிறு ரென்ற பேச்சே எங்கு மிருந்தது. இன்றோ, இம்மகானின் நாமமோ இளம் பசலைகளுக்கும் தெரியும். பாரி லுள்ளோருக்கும் நன்கு தெரியும். நாம் இனிச்செய்ய வேண்டிய தென்ன? தாஸர் எப்படி விரும்பினரோ அப்படி நடப்பதே, அவருக்குத் திருப்தியாயிருக்கும். அதையே ஏக மனதாய்ப் பாரத புத்திரர்கள் செய்ய வேண்டும். நமது ஆழ்ந்த துக்கத்தை நம் தாயார் அம்மாளுக்கும், சிரன்ஜன் தாஸருக்கும் தெரிவிக்கிறோம்.

***

நமது நண்பர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி சர்மாவும் சென்றுவிட்டார். இவ்வளவு விரைவில், தமிழ் நாட்டை விட்டுச்சென்று விடுவாரென்று நாம் கனவிலும் நினைக்க வில்லை. நமது நாட்டிற்கு இது சோதனை காலமா? அல்லது, கடவுள் சந்நிதானத்தில், தேச பக்தர்களின் கூட்டங்கூடி, இந்தியர் விஷயமாய் ஆலோசிக்கத் தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராகச் செல்லுகிறார்களா? தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு, தேச பக்தியை ஊட்டக் கூடிய, பல தேசிய புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார். 18 வயதிலேயே, தேசபக்தி ததும்பி, பச்சையப்பன் கலாசாலையின் அருகில் நின்று கொண்டு, பிரசங்கம் செய்து கொண்டிருப்பார். பல முறை காராக்கிரஹம் சென்றிருக்கிறார். இவர் ஆத்மா சாந்தியடைந்து தமிழ் நாட்டிற்கே திரும்பிவர கடவுள் அருள் செய்வாராக. இவர் தாயாருக்கும், தம்பிக்கும் எமது வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிளாஸ் கோவில் (இங்கிலாந்து) ஒரு சாப்பாட்டு விடுதியில் உணவருந்திக் கொண்டிருந்த எட்டு இந்தியர்களை வெள்ளைக் கொள்ளைக்கூட்டக் காரர்கள் பிரவேசித்து அடித்து, பொருள்களையும் கொள்ளைகொண்டு போயினராம். அதுதான் நாகரீக மடைந்த ஜாதியின் செய்கை போலும்?

உலகப் போக்கு.

அமெரிக்காவில் பத்திரிகைத் தொழில்.

அமெரிக்காவிலுள்ள அயோவா, சர்வகலாசாலையில் தனசாஸ்திர போதகாசிரியர் டாக்டர், சுதீந்திர போஸ் என்பார் அமெரிக்காவில், பத்திரிகைத் தொழிலைப்பற்றிச் சென்னை, 'ஹிந்து' பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதி யுள்ளார். அதன் சாரத்தைக் கீழே தருகின்றோம்.

உலகத்தில் மிகவும் பெரிய பத்திரிகை என்னும் அடைமொழியுடைய "சிக்காகோ டெயிலி டிரிப்யூண்" பத்திரிகைக்கு சமீபத்தில் ஒரு காரியாலயம் கட்டப் பட்டதாம். அதற்கு 33 மாடிகள் உண்டாம். "நியூயார்க்கு டைம்ஸ்" என்னும் பத்திரிகையின் ஆபீசுக்கு 19 மாடிகள் உண்டாம். அதில் மூன்று மாடிகள் பூமி நிரப்பின் கீழே கட்டப் பட்டிருக்கிறதாம்.

"நியூயார்க்கு டைம்ஸ்" என்னும் பத்திரிகை தினந்தோறும் மணி ஒன்றுக்கு 20 புறமுள்ள நான்கு லட்சம் பிரதிகள் அச்சிடப் படுகின்றனவாம். அப்பத்திரிகை ஆபீசிலுள்ள அச்சுக்கூடங்களில் தினந்தோறும் 175 டன் காகிதங்கள் அச்சிடச் செலவாகின்றனவாம். அப்பத்திரிகை ஆப்பீசின் பிரதி தின அச்சு, மைச் செலவு 4 டன்னும். ஒரு வருஷத்தில் காகிதத்துக்கும், அச்சு மைக்குமாக ஒரு கோடி எண்பது லட்சம் ரூபாய் செலவாம்.

'சிக்காகோ டெயிலி டிரிப்யூண்' பத்திரிகை ஆபீசின் 33 மாடிக் கட்டிடத்தில் பூமி நிரப்பின் கீழே 5 மாடிகள் இருக்கின்றனவாம். பத்திராசியர்களும் தலையங்கம் எழுதுவோரும் 4-வது மாடியில் இருக்கிறார்களாம். அந்தக் கட்டிடம் ஒரு சிறு நகரம்போல் இருக்கிறதாம். ஒவ்வொரு மாடியிலும், ஒவ்வொரு, இலாகா ஏற்படுத்தப் பட்டிருக்கிறதாம். மூன்றாவது, மாடியில் அச்சுக் கோர்ப்போர் (compositors) வேலை செய்கிறார்கள். நான்காவது மாடியில், சமாச்சாரம் சேகரம் செய்வோர் வேலை செய்கின்றனர். 5-ம் 6-ம் மாடிகளில் கணக் கெழுத் தாளர்களும், பரிசோதகர்களும் இருக்கிறார்கள். 8-ம் 9-ம் 10-ம் மாடிகளில் விளம்பர இலாகா வேலை செய்கின்றதாம்.

அமெரிக்காவில் கல்வி அபரிமிதமாக வளர்ச்சியடைந் திருப்பதால் அந்நாட்டு ஜனங்களுக்கு பத்திரிகை வாசிக்காமல் முடியாது ஐந்து வயது குழந்தை முதல், 100 வயது கிழவர்வரை பத்திரிகை வாசிப்பவர்களே. அவரவர்கள் வாசனைக்கும் மனப்பாங்குக்கும் ஏற்றபடி பத்திரிகைகள் பிரசுரிக்க படுகின்றனவாம்.

பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்கள் தவிர மாணவர்கள் பத்திரிகைகளும் வாசிக்கிறார்களாம். பத்திரிகை வாசித்தல் ஒரு முக்கியமான படிப்பு முறையாகக் கருதப் படுகிறதாம்.

தற்கால தேச வர்த்தமானங்களும் ராஜீய விஷயங்களும் ஒவ்வொரு மாணவனும் அறிந்திருக்க வேண்டியது அவசியமென அந்

நாட்டுக் கல்விமான்கள் வற்புறுத்துகிறார்களாம். புஸ்தகப் படிப்பினால் ஒருவனது ஞானம் பூரணமாகா தென்பது அமெரிக்கரின் கொள்கை. பத்திரிகை வாசிப்புமூலம் உலக சம்பவங்களைப் படித்தறிவதே உத்தமக் கல்வியாம்.

பத்திராசிரியத் தொழில் போதனை செய்யும் பொருட்டு அமெரிக்காவில் பல கல்விச்சாலைகளும், கல்லூரிகளும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றனவாம். 17 வருஷங்களுக்கு முன் மிசௌரி சர்வகலா சங்கத்தார் முதன் முதல் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார்களாம். இப்பொழுது 200 கலாசாலைகளுக்கு மேல் பத்திரிகாசிரியத் தொழில் கற்பிக்கின்றனவாம். அக்கலாசாலைகளில் படித்து பட்டம் பெறுபவருக்கு பி. எஸ். ஸி. எம். எஸ். ஸி. (Bachelor or master of science in Journalism) என்னும் பட்டங்கள் வழங்கப் படுகின்றனவாம். இப்பட்டம் பெற்றவர்களைப் பத்திரிகை உடமஸ்தர்கள் நல்ல சம்பளம் கொடுத்து வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறார்களாம்.

இப்பட்டங்கள் பெற்ற அநேக பெண்கள் பத்திரிகை ஆபீசுகளில் உயர்ந்த உத்தியோகங்கள் பெற்று சுதந்தர ஜீவிதம் செய்கிறார்கள்.

தமிழகத்தீரே! நம் நாட்டுப் பத்திரிகைகளின் நிலைமை என்ன தமிழ் நாடு எச்சமயத்திலாவது அமெரிக்கா மாதிரி பத்திரிகைத் தொழிலில் விருத்தி யடையுமா? தமிழர் ஆதரிக்க முன் வருவார்களா?

குறைந்த விலை! முந்துங்கள்!!

அமெரிக்கன் ரோல்டு கோல்டு இமிடேஷன் கம்மல்கள்.

(1) இமிடேஷன் வைரக்கற்கள் பதித்த கம்மல்கள் அமெரிக்கன் ரோல்டு கோல்டு பொன்னினால் வெகு சுந்தர வேலைப்பாடாய் செய்து இமிடேஷன் வைரங்கள், கெம்புகள் செதுக்கியது. பார்வைக்கு மிக்க அழகையும் பிரமிப்பையும் தரக்கூடியது.

இதன்கற்கள் நிறம் எப்போதும் மாறுவது கிடையாது. இவைகள் இரவில் வெகு ஜொலி ஜொலிப்பாயும்பார்வைக்கு அசல் வைரம்போலவே தோன்றும் ஒரு ஜதை கம்மல் 1-க்கு விலை ரூபா 2—4—0.

(2) 5 கல் பதித்த இமிடேஷன் வைர மோதிரம் ரூ. 1-8. (3) லேடீஸ் (Radio) ஜொலிக்கும் கண்டாபரணம் ரூ. 3. (4) லேடீஸ் ரோல்டு கோள்டினால் செய்த (Necklace) என்னும் கண்டாபரணமும் லாக்கட்டும் ரூ. 3. (5) எலக்டிரிக் கெஜ்ஜட்டிகை 1-க்கு (அரும்பு கட்டியது) கருப்பு கயிர் உள்பட விலை ரூ. 2. (6) எலக்டிரிக் மங்களூர் வளையல்கள் ஜதை 1-க்கு ரூபா 2. (7) எலக்டிரிக் சரட்டட்டிகை 1-க்கு ரூ. 3-8.

சிடி நாவல்டி ஸ்டோர்ஸ், தபால் பெட்டி நெ, 1155,
Wash'pet P. O. Madras.



உங்களுக்கு தேவையா?

Electric Time-Keeper.

எலெக்ட்ரிக் டைம்கீப்பர் என்பது ராத்திரியில் கம்பீரமான வெளிச்சமும் அதில் வைக்கப் பட்டிருக்கிற கெடியாரமானது நேரத்தையும் காட்டக் கூடியது. இதில் கண்ட பெட்டி இங்கிலீஷ் மரத்தினால் செய்யப்பட்டது. ஸ்டேண்டானது துரும்பு பிடிக்காத நிக்கலினால் செய்யப்பட்டதும். மத்தியில் வெல்வெட்டினால் லைனிங் கொடுக்கப் பட்டிருக்கிறது. பலமான காற்று அடிக்கிற இடத்திலும் வைக்கலாம். விலை ரூபா 14–8.

CLYDON & CO.,
35 Nambulier Street, Madras.

TALISMANS AND CHARMS.

For those People to Avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life.

	Rs.	A.
For Honour, Riches, Learning and Greatness	7	8
For Health, Physical Strength, etc.	7	8
For Power of Eloquence, Speeches, etc.	7	8
For success in any Undertaking or Litigation, etc.	10	0
For Success in Sport, Racing, Cards, Games of Chance etc.	7	8
For Success in Spiritual and Religious Life.	10	0
For Success in Trade and Business	10	0

	Rs.	A.
For Men's Love to Women	7	8
For Women's Love to Men	10	0
For Love of Opposite Sex, Attractive Power	7	8
For Agricultural Prosperity, Farming, Good Crops, etc.	7	8
For Success in Minning Plumbago, etc.	100	0
For Success in Gemming	225	0
Rabbi Solomon's Special Talisman for every success	15	0
Specially valued and worn by every successful Hebrew, 2nd quality	21	0
1st quality	30	0

NOTE.—A money Order or G. C. Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs. 15, to Rs. 25 three Rs. 30 or more at a time at Rs. 10 per reading. Remit with birth date. Always the full amount should be remitted in advance. No V. P. P.

Apply to:—**RAM DUTH. Astrologer.**
No 30 & 55 (L). Cheku Street, Colombo. (Ceylon).

ஜர்மனி மின்சார விளக்கு.



இந்த விளக்கு ஜர்மனியிலிருந்து வந்தது. இதை மேஜையின் பேரிலும் சுவற்றிலும் வைக்கலாம் ராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்டகயிற்றின் உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயல்காற்று அடித்தாலும் எரியும் விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்க கும்பலாக கூடிவிடுவார்கள். இதை வீடுகளிலோ மாணவர்கள் படிக்கும் அறையிலோ வைத்தால் சூரியனே இரவில் வந்துவிட்டாற்போலிருக்கும் குறைந்த விலை ரூ. 5-8.

கிடைக்குமிடம்:—**CLYDON & Co., Sowcarpet, Madras, (L),**

இனாம்! தபால் சிலவு!! இனாம்!!!

ஒரே மாதம்தான்.

குடும்பாஞ்சனம்

எல்லாவிதமான
நோவுகளுக்கும்,
வலிகளுக்கும்
அவசியமான
மருந்து.

புட்டி 1-க்கு விலை அணா 4.

ஏஜண்டுகள் தேவை.

Kudumbanjan Depo. Park Town, Madras.

Just arrived! *Just arrived!!*

The "Amulet" Glare Protector

Patented spring Vulcanite Clapse. Mounted in nickel frame complete in a case. Price Rs. 5 each.

Apex Cooling Glass.

Different colors and shades. Bright nickel frame with four sides glasses complete in a case No. 1 Price Rs. 4 each No. 2 Price Rs. 3 each.

Combs.

We have Alumunium, hard rubber and Raw horn dressing Combs of large assortments coarse and fine teeth 6" long highly finished oval or straight.

Price Alumunium As. 14 each.
" Hard Rubber " 12 "
" Horn " 10 "

Apply:—**A. M. BUSHANAM**

38 Nambulier Street, Sowcarpet Madras

ஸினி மோட்டோ கிராப்.

இந்த மிஷன் வில் இசையை சுழற்றிக் கொண்டே வந்தால் பயாஸ் கோப்பில் காண்பதுபோலவே காணலாம்.—இதில் அடங்கிய ஆட்டங்களின் சுருக்கம் :—சோம்பலுள்ள பிரபு ஒருவர் ரயில்வே ஸ்டேஷனுக்குள் போகும் போது ரயில் பிரயாணப் பட்டுப் போக அதைப் பிடிக்க அதன்பின் ஓடுதல், ஜாலவித்தைக் காரர்கள் பந்துக்களின் மீதில் பலவித ஆட்டங்கள் ஆடுவது, ஜப்பான், ஜர்மன் சண்டை—பயங்கரமான தோற்றம், பாரீஸ்தேசத்து ஸ்திரீகள் டான்சுகள் ஆடுவது, சமுத்திர கப்பற் சண்டை, ஓர் திருடன் வண்ணான் வீட்டில் துணிகளைத் திருடிக் கொண்டு போகும் போது சேவகன் பிடிக்க ஓட அவன் தப்பித்து ஓடும் காட்சியைக்காண விடா நகைப்பைத்தரும்.

ஸ்திரீ புருஷர்களின் குதிரை சவாரி பந்தயம் ஆச்சரியம். இன்னும் பலவித பிலிம்கள் கொண்ட ஸினி மோட்டகிராப் மிஷன் பெட்டி. 1-க்கு ரூ. 1-4. (தபால் சிலவு அணா 7.)

ஓவர்லாண்டு மெயில் வாச்சு கம்பனி, மின்ட் புல்டிங் மதராஸ்

தனித்தனி ரப்பர் இங்கிலீஷ் எழுத்துக்கள்.

இந்த ரப்பர் எழுத்து பெட்டிகள் ஒவ்வொருவரிடமும் அவசியமாய் இருக்கவேண்டியது. ஏனெனில் அச்சடிக்க முடியாத சில்லரைவேலைகள் இதனால் கவர்கள் பேரிலும் இன்னும் அநேக சிறிய வேலைகளுக்குமே, அனுகூலமானது இவ்வெழுத்து பெட்டியுடன் இங்க்பாட், சிராவணம், கப்போஸ்டிகள், இந்த 3 சாமான் அனுப்பப்படும். 1. A B C D என்று ஒவ்வொரு எழுத்திலும் 4 எழுத்துகள் வீதம் 150 எழுத்துகள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபாய் 2. 2. A B C D என்று ஒவ்வொரு எழுத்திலும் 6 எழுத்து வீதம் 250 எழுத்துகள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபாய் 3-8.



விலாசம் :—லில்லி கம்பேனி,

கிருஷ்ணப்ப நாயகன் குளத் தெரு மதராஸ் (L).

---

100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை.

மாதம் சம்பாதிக்கலாம் !

ஏன் கவலைப்படுகிறீர்கள் ? இனி கவலை வேண்டாம் !!

நம் தேச முன்னேற்றத்தைக் கருதி நமது அநுபவ "கைத்தொழில்" முறைகளும், "புதிய யோஜனைகளும், யாவருக்கும் இனமாக அனுப்பி வருகிறோம் ! ஒரு அணா தபால் முத்திரையுடன் உடனே தங்கள் விலாசத்தை தெரிவியுங்கள் !! எந்த தேசத்து தபால் முத்திரையாக யிருந்தாலும் அனுப்பலாம்.

மானேஜர், "கைத்தொழில் கல்விச்சாலை"

(டிபாட் 10) சிவகெங்கை, S. India.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும்
செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு
எழுதவும்.

மானேஜர்:—வேஸ்ட் அண்டு கோ.,
மவுண்ட் ரோட் : : சென்னை.

TRADE

MARK

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை யெடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிகயின்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத் துக்கு |மேற்பட்ட 96-வியாதிகளை கண்டிக்கும். இந்ததூள் எக்காலமும் கெடாது. எந்த கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ.எஸ். மார்க்கை கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 டஜன் 1-க்கு ரூ 2-4 ஷை சேர் 1-க்கு ரூ 3.

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1க்கு அணா 3ஷை டஜன் 1-க்கு ரூ 2 ஷை சேர் 1-க்கு ரூ 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதரூஸ்.

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது புதுமாதிரியாக இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக் கூடிய சுலபமான தமிழில் பிரசுரிக்கபட்டிருக்கிறது. இவ் விஷயத்தை யாவரும் கவனித்து எழுதுங்கள். உடனே எழுதுங்கள்.

ஆங்கில ஆசான்

அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள்
தெரிந்து கொள்ளலாம்.

இது நான்காம் பதிப்பு 450 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும், எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப் பட்டிருக்கின்றது. மாதகளுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், மிகவும் முக்கியமானது.

இப்புத்தகம் 1க்கு விலை ரூ. 2. தபால் செலவு அணா. 6.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 259, தங்கசாலை தெருவு,
மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

சுத்தமான கதர் வேஷ்டிகள்

அழகான கரைகள் போட்டது

4 மு × 52" ஜோடி 1-க்கு ரூ. 3-2
4½ மு × 52" ஜோடி 1-க்கு ரூ. 3-8
5 மு × 52" ஜோடி 1-க்கு ரூ. 4.

கே. எஸ். முத்தையா அண்டு கோ.,
தபால் பெட்டி 99, சென்னை.

நமது புதிய பிரசுரங்கள்.

காசி அல்லது புண்ணிய பூமி

காசிமாநகரம் இன்று நேற்றுண்டான பட்டணமல்ல. 4000 வருடங்களுக்கு முற்காலந் தொட்டே பல்லோர் போற்றும் நல்ல தோர் நகரமாய் விளங்கிவருகிறது. ஆகவே அதைப்பற்றிய வரலாறு இந்தியர்களுக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதே. இந்நூல் காசிமா நகரத்தின் சரித்திரத்தை சவிஸ்தாரமாகக் கூறுவது. காசிமா நகரத்தில் விசுவேசர் ஆலயம், முக்கிய கட்டடங்கள், வடமதுரை, பிருந்தாவனம் ஆலயங்கள் ஆதியான 15 ஆப்டோன் சித்திரப் படங்கள் அடங்கியது. நயம் கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிடப்பெற்றது. விலை அணு 12.

மனோஹரி :—இது பெயருக்கேற்பவே ஒரு மனோஹரமான நாடகம். கற்பின் மகிமை, புருஷ தம்பதிகளின் சுகவாழ்வின் ரகசியங்கள், இல்லற தருமங்கள் முதலியன இதில் தெளிவுற விளக்கப் பட்டுள்ளன. விலை அணு 8.

பரிமளா :—தமிழுலகெங்கும் பெயர்பெற்றது. பிரஜானுகூலன் பத்திராதிபர் எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள் எழுதிய ஒரு துப்பறியும் நாவல். ஆசிரியர் பெயரும் அவர்களது நூல்களின் பெருமையும் தமிழ் நாட்டார் நன்கறிவர். ஆகையால் இந்நூலின் சிறப்பை விரிவாகக் கூறவில்லை. விலை ரூ. 1.

வர்த்தக யுக்தி :—'திரைகடல் ஓடியும் திரவியம்தேடு' என்றார் ஔவையார். பொருளீட்டுவதற்கு வர்த்தகத்தைப் போல் சிறந்த தொழில் ஒன்றுமில்லை. ஆனால் தராசுக்கோலும் படியும் எடுத்தவ ரெல்லாம் வர்த்தகராக மாட்டார். டாக்டர், வக்கீல், இஞ்சினீயர் முதலியோர் அவ்வத் தொழிலுக்கு லாயக்கடைய எவ்வளவோ காலம் படித்துத் தேர்ச்சியடைகிறார்கள். தற்கால வர்த்தகத்துக்குக் கற்றுக்கொள்ள வேண்டிய முறைகளும் விதிகளும் அநந்தம் உள்ளன. அவற்றை யெல்லாம் ஒன்றாகத் திரட்டி இந்நூல் விளக்கிக் கூறுகின்றது. தமிழ் நாட்டு வர்த்தகர் அவசியம் வாசித்தறிய வேண்டியது. விலை அணு 12.

மணிவடக் களவு :—பட்டப் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தின மாலையைத் திருடி மறைந்த ஒரு சுந்தர மாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஒரு அற்புதமான துப்பறியும் கதை. விலை அணு 4.

பங்கஜம் :—இது ஒரு அழகிய சிறுகதை. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களை விவாகம் செய்வதால் ஏற்படும் இடுக்கண்களை விரிவாக எடுத்துக் கூறுவது. விலை அணு 2.

விலாசம் :—லக்ஷிமி புத்தகசாலை,

தபால் பெட்டி 99, சென்னை.

நமது புதிய பிரசுரங்கள்.

துயில்மொழி :—ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு இதைவிட மனவெழுச்சியைக் கொடுக்கக் கூடிய கதை இல்லவே இல்லை. விலை அணா 2.

எனது காங்கிரஸ் யாத்திரை :—இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோரெல்லாம் அவசியம் படித்தறியவேண்டிய நூல். தற்காலத் தேசாபிமானிகளின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டுவது. அழகிய நடை. விலை அணா 3.

லக்ஷ்மி தாலாட்டுக் கோவை :—நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமிழ் நாட்டுத் தாய்மாருக்கு ஏற்றது. விலை அணா 3.

பழமொழித் திரட்டு :—பண்டைக்காலந் தொட்டே தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளில் சிறந்தவைகளை ஒன்றாகத் திரட்டி அச்சிடப் பெற்றது. விலை அணா 3.

நடராஜப் பத்து :—நடராஜப் பத்து, நடராஜர் பதிகப் பஞ்சகம், தில்லை நடராஜர் பதிகம், இம் மூன்றும் ஒரே புத்தகத்தில் சந்தி பிரித்து கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிடப் பட்டது விலை அணா 2.

கந்தரலங்காரம் :—இதில் கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், சத்ருசங்கார வேற்பதிகம் அகத்தியப் பஞ்சகம் முதலியவைகள் அடங்கி இருக்கிறது. கிளேஸ் கடிதம் விலை அணா 4.

பாய்பரமானந்தன்:—தேச பக்தியைப் புகட்டும் ஓர் சிறந்த நவீனம். புஸ்கத்தை கையில் எடுத்தால் முடிக்காமல் கீழேவைக்க மனம் வராது. 250 பக்கம் விலை ரூ. 1.

பாணபுரத்து வீரன்:—இவ்வழகிய நூலில் பாணபுரத்தார் தங்கள் தங்கள் உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் துறந்து தேசத்தின் விடுதலை பெறச் செய்த வீரச்செயலும், தேசபக்தியும் அவர்கள் மேன்மையை அழகாக விளக்கப்பட்டு இருக்கிறது. விலை ரூ. 1.

மதிமுகி :— இனியதேனொழுகும் துப்பறியும் நாவல். விலை அணா8.

ஜே. ஆர். ரெங்க ராஜு அவர்கள் இயற்றிய துப்பறியும் நாவல்கள்.

இராஜாம்பாள்	0 12	சந்திரகாந்தா	0 12
ஆனந்த கிஷ்ணன்	0 12	இராஜேந்திரன்	1 0
மோஹன சுந்தரம்	0 12		

கண்ணகியின் சாபம் :—ஸ்ரீமான் P. S. முருகேச முதலியார் அவர்கள் இயற்றியது. விலை அணா 10.

லக்ஷ்மி புத்தகசாலை,
தபால் பெட்டி 99 சென்னை.

நமது புதிய பிரசுரங்கள்

ராவ்சாஹேப், பி. சம்பந்த முதலியார் அவர்கள் இயற்றிய நாடகங்கள்.

	ரூ.	அ.
ஹரிச்சந்திரா	1	0
அமலாதித்தியன்	1	0
இரண்டு நண்பர்கள்	0	14
கீதமஞ்சரி	0	8
கோனேரி அரசகுமாரன்	0	8
கள்வர்தலைவன்	0	12
சாரங்கதரன்	0	8
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்	0	8
ரத்னாவளி	0	14
வாணீபுரவணிகன்	0	12
விரும்பிய விதமே	1	0
சிறுத்தொண்டர்	0	8
சபாபதி	0	8
சத்ருஜித்	0	12
பேயல்ல பெண்மணியே	0	8
புத்த அவதாரம்	1	0
பொன் விலங்குகள்	0	10
மார்க்கண்டேயர்	0	10
ரஜபுத்ரவீரன்	0	8
வள்ளி மணம்	0	12
வேதாள உலகம்	0	8
பிரஹசனங்கள்	0	8
மனோஹரன்	0	12
மூன்று வைரங்கள்	0	6

இதர நாவல்கள்.

	ரூ.	அ.
அமிர்த குமாரி	1	4
இந்திர ஜித்தன்	1	4
கமல பவன அற்புதம்	0	10
கபட சந்யாசி	0	14
கமலாஸனி	1	0
குணசுந்தரம்	1	4
கற்கோட்டை	2	0
ஸரஸமோஹனா	0	8
சுந்தர்ஸிங்	1	8
தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி	1	4
பத்மநாபன்	0	14
பன்னீர் செல்வம்	1	0
பொற்றொடி	1	4
மஞ்சள் அறையின் மர்மம்	1	8
காதலா கருணையா	0	14
காளிங்கராயன் கோட்டை 1-ம் பாகம்	1	8
ஷை இரண்டாம் பாகம்	1	8
கருங்குயில் குன்றத்துக் கொலை 1-ம் பாகம்	1	6
ஷை 2-ம் பாகம்	1	6
ஷை 3-ம்பாகம் மரகதவல்லி	1	6
ஸ்ரீமதி	0	12
திலோத்தமை	0	12
பாலாமணி அல்லது பக்காத் திருடன் 1-ம் பாகம்	1	8
ஷை 2-ம் பாகம்	1	8
மாண்டி கிருஸ்டோ 1-ம் பாகம்	1	8
ஷை 2-ம் பாகம்	1	8
மீனலோசனி	0	6
இரத்னபுரி இரகசியம் 1-ம் பாகம்	2	0
ஷை 2-ம்பாகம்	2	0
வேதவல்லி	0	5
வசந்த சமுத்திரம்	0	14
வீரவன்மன் வெற்றி முதல் பாகம்	1	4
2-ம் பாகம்	1	4
விஜயசுந்தரம்	2	8
வஜ்ரலேகை	2	4
வரதசுந்தரம்	2	0

இதர புத்தகங்கள்.

	ரூ.	அ.
அணிகலக்கணம்	0	4
அபிமன்னன் சுந்தரிமாலை	0	6
அருணகிரிநாத யந்தாதி	0	6
அத்யாத்ம ராமாயணம்	2	8

லக்ஷ்மி புத்தகசாலை,

தபால் பெட்டி 99, சென்னை.

நமது புதிய பிரசுரங்கள்

அரிச்சந்திர புராண வசனம்		1	8
அல்லிராணி சரித்திரம் அம்மானை		0	0
அறிவுரைத் திரட்டு		0	12
ஆரியமதவுபாக்கியானம்		0	10
ஆத்திசூடி 9 பை	0	0	9
ஆங்கில ஆசான்		2	0
கௌதம புத்தர்		0	5
காட்டுராஜன்		0	4
கொன்றைவேந்தன் 9பை			
கண்டி ராஜன்		0	8
கட்டுரைத் தொகுதி		1	0
குசேலன்		0	2
சந்தர சேகரன்		0	4
சகசால புரட்டன்			
சிரைச்சாலை அனுபவம்		0	8
சிவப்பிரகாசக் கட்டளை		0	2
சண்டாளர் சகவாசம்		0	12
சோதிடக்களஞ்சியம்		1	0
சாதக அலங்காரம்		1	0
சம்பூர்ண ராமாயணம்		1	0
சௌந்தரிய லாகரி		0	6
ஜெயலக்ஷ்மி		0	10
ஸௌந்தரகோகிலம் 1-ம் பாகம்		1	8
2-ம் பாகம் அச்சில்			
மர்மமுகி		0	12
இரேகை சாஸ்திரம்		1	0
இந்தியாவும் சுய ஆட்சியும்		1	8
இராமாயணச் சுருக்கம்		0	12
இரசவாத சிட்கா			
இனியவை நாற்பது		0	5
உலோகாதிசய விளக்கம்		0	10
உபதேச காண்டம்		5	8
ஒக்கப்பிலேரி		0	4
ஓங்கார உண்மை		0	1
ஓங்கார இலக்ஷணம்		0	1
குசேலன்		0	2
கிரிமினல் புரோசீடர் கோர்ட்		3	0
கிராம முனிசீப் சட்டம்		1	0
கம்பன் சோழன்		0	2
கண்ணப்பன்		0	2
சைவசித்தாந்த ரகசியம்		8	0
சாதிபேத விளக்கம்		0	2
சில்லரைக்கொத்து		2	0
சச்சிதானந்த சிவம்		1	2
சர்வ விஷ முரிப்பு		0	2
சைவசமய நெறியுரை		1	2
சிவபோக சாரம்	0	2	6
ஜாலத்திரட்டு			
சித்திரபுத்திரனகதை		0	6
சைவ வினாவிடை முதல் பாகம்		0	8
ஷை 2-ம் பாகம்		0	8
சிலப்பதிகாரக்கதை		1	0
திருப்புகள்		0	3
தென்னால் ராமன்		0	2
நமோநாராயணயா		0	1
நல்வழி		1	6
நெப்போலியன்		1	8
நல்ல தங்காள்		0	6
பாரத நீதி		0	2
பஞ்சபாண்டவர் வனவாசம்		1	0
பஞ்சபக்ஷி சாஸ்திரம்		0	12
பாஸ்கரதாஸ் கீர்த்தனை		0	5
பத்மனாபன்		0	14
பூஸ்திதி		3	8
போகர் ஏழு		4	0
பாரத வசனம் 5 வால்யம் செட்		9	0
புதுச்சட்டகணிதம்		0	6
முருகர் தியானம்		0	4
மனோன்மணிகதைச்சுருக்கம்		0	12
மாமிகள் துயரம்		0	2
மஹாராஜா துறவு		0	6
மதுரை வீரன் பெரிய யெழுத்து		0	4
மானிட மர்ம சாஸ்திரம்		7	0
யாபிலக்கணம்		0	4
யயாதி		0	8
ராஜயோகம்		1	2

லக்ஷ்மி புத்தகசாலை,

தபால் பெட்டி 99, சென்னை.

நமது புதிய பிரசுரங்கள்

ராபின்ஸன் குரூசோ	0	4
சுந்தரமூர்த்தி தேவாரம்	2	8
தடிராமன்	0	6
தினைமொழி ஐம்பது	0	5
தேசிங்குராஜன் கதை	0	4
நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும்	0	10
நவரத்தின ஒப்பாரி	0	5
நன்னெறி	0	1
நன்னூல் கண்டிகை யுரை	1	12
நாற்பது திருடர்கள்	0	4
பக்தி	0	2
பக்தி ஆனந்த கேலிப்பதங்கள்	0	5
பஞ்சாக்ஷர ரகசியம்	0	4
பிரஹலாத சரித்திரம்	0	4
பழமொழி மூலமும் உரையும்	1	6
பட்டினத்து பிள்ளையார் சரித்திர புராணம்	1	8
புறநானூறு மூலமும் உரையும்	5	10
பூலோக விநோதக் கதைகள் செட்	5	8
மெஸ்மெரிஸம்	0	6
மனோன்மணீயம்	2	8
மரைசை யந்தாதி	0	5
மருமகள் துயரம்	0	2
மதனும் ரதி	1	0
மூலிகை சாலரத்னம்	0	4
மஹாபாகவத வசனம் 1, 2, செட்	3	0
ஷை விராட பர்வம்	1	8
ராமனுதன்	0	2
ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்	1	4
லேடிஸ் குக்கரி	1	0
வைகுந்த அம்மானை	0	6
விஷவைத்திய சிந்தாமணி	0	12
வாக்குண்டாம் 1 அணு 6பை.		
வியாபாரதந்திரம்	1	8
சங்கரநாராயண டிக்ஷனரி	2	8
திருமுருகாற்றுப்படை	0	3
விக்கிரமாதித்தியன் கதை	2	0
வசுதேவ மனனம்	1	8
விநயகபுராண வசனம்	4	8
தொல்காப்பியம் பொருள் அதிகாரம்	1	4

லக்ஷ்மி புத்தகசாலை,
தபால் பெட்டி 99, சென்னை.

கந்தரந்தாதி ... 0 4 0

லக்ஷ்மி ஆபீஸ்,
சென்னை.

---

108 சிவலிங்க படங்கள்.

இது அநேகர் வேண்டு கோளின்படி நல்ல வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யப் பட்டது. வெகு அழகான வேலை செய்யப் பட்டு இரண்டுவித கலர் அச்சில் முழு டிம்மிசையிஸ் 2 அடி நிகளம் $1\frac{1}{2}$ அடி அகலம் படமாக உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப் பட்டுள்ளது. சொற்ப காபிகளே அச்சிடப் பட்டுள்ளதால் சீக்கிரம் ஆர்டர் செய்வதே உத்தமம். படம் 1க்கு அணு 12. மூன்று படம் ரூ. 2.

ENGLISH SWISS WATCH TRADING & CO.,
P. B. No. 285, G. T. Madras.

தமிழ்நாடு
210350

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது. 1 செ. விலை ரூ. 11 முதல் 15 வரை.
2 ,, ,, 10 ,, 11 ,,
3 ,, ,, 8½ ,, 10 ,,

கம்பளிச் சட்டை.

முழங்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே, கருப்பு, சிவப்பு.
5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.
விலை அணா 12, ரூ. 1, 1½.
உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.
போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடிதாவளி.

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்தவுடன் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம் 24 இஞ்ச அக. ரூ. 2		10 முழம் 40 இஞ்ச அக. ரூ. 7
6 ,, 24 ,, ,, 2½		16 ,, 40 ,, ,, 12
7 ,, 29 ,, ,, 3		18 ,, 40 ,, ,, 14
8 ,, 40 ,, ,, 5½		

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ், - - காசி.

நமது புதிய பிரசுரங்கள்

ராபின்ஸன் குரூசோ	0	4
சுந்தரமூர்த்தி தேவாரம்	2	8
தடிராமன்	0	6
திணைமொழி ஐம்பது	0	5
தேசிங்குராஜன் கதை	0	4
நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும்	0	10
நவரத்தின ஒப்பாரி	0	5
நன்னெறி	0	1
நன்னூல் கண்டிகையுரை	1	12
நாற்பது திருடர்கள்	0	4
பக்தி	0	2
பக்தி ஆனந்த கேலிப்பதங்கள்	0	5
பஞ்சாக்ஷர ரகசியம்	0	4
பிரஹலாத சரித்திரம்	0	4
பழமொழி மூலமும் உரையும்	1	6
பட்டினத்து பிள்ளையார் சரித்திர புராணம்	1	8
புறநானூறு மூலமும் உரையும்	5	10
பூலோக விநோதக் கதைகள் செட்	5	8
மெஸ்மெரிஸம்	0	6
மனோன்மணீயம்	2	8
மறைசை யந்தாதி	0	5
மருமகள் துயரம்	0	2
மதனும் ரதி	1	0
மூலிகை சாலரத்னம்	0	4
மஹாபாகவத வசனம் 1, 2, செட்	3	0
ஷை விராட பர்வம்	1	8
ராமனுதன்	0	2
ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்	1	4
லேடிஸ் குக்கரி	1	0
வைகுந்த அம்மானை	0	6
விஷவைத்திய சிந்தாமணி	0	12
வாக்குண்டாம் 1 அணா 6 பை.		
வியாபாரதந்திரம்	1	8
சங்கரநாராயண டிக்ஷனெரி	2	8
திருமுருகாற்றுப்படை	0	3
விக்கிரமாதித்தியன் கதை	2	0
வசுதேவ மனனம்	1	8
விநாயகபுராண வசனம்	4	8
தொல்காப்பியம் பொருள் அதிகாரம்	1	4

லக்ஷ்மி புத்தகசாலை,
தபால் பெட்டி 99, சென்னை.

கந்தரந்தாதி ... 0 4 0

லக்ஷ்மி ஆபீஸ்,
சென்னை.

---

108 சிவலிங்க படங்கள்.

இது அநேகர் வேண்டுகோளின்படி நல்ல வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யப் பட்டது. வெகு அழகான வேலை செய்யப் பட்டு இரண்டுவித கலர் அச்சில் முழு டிம்மிசையிஸ் 2 அடி நீளம் 1½ அடி அகலம் படமாக உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப் பட்டுள்ளது. சொற்ப காபிகளே அச்சிடப் பட்டுள்ளதால் சீக்கிரம் ஆர்டர் செய்வதே உத்தமம். படம் 1க்கு அணா 12. மூன்று படம் ரூ. 2.

ENGLISH SWISS WATCH TRADING & CO.,
P. B. No. 285, G. T. Madras.

தமிழ்நாடு
210350

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	செ.	விலை	ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,		10	,,	11	,,
3	,,	,,		8½	,,	10	,,

கம்பளிச் சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போர்த்திக் கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1¼.

உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடிதாவளி.

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5	முழம்	24	இஞ்ச	அக.	ரூ.	2	10	முழம்	40	இஞ்ச	அக.	ரூ.	7
6	,,	24	,,		,,	2¼	16	,,	40	,,		,,	12
7	,,	29	,,		,,	3							
8	,,	40	,,		,,	5¼	18	,,	40	,,		,,	14

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ், - - காசி.



PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த
வித பாட்டில்களிலும்
வைத்து உபயோகிக்கலாம்.

விலை 1-க்கு
ரூ. 2-4.



**"Collapsible"
Key Ring.**

A Key Ring that
does not buldge
the pocket.

**Price As. 3
each.
Dozen Rs. 2.**

திருநெல்வேலி நூல் துண்டுகள்.

புது மாதிரி நெசவு. நீடித்து உழைக்கும்.
3 மு. துண்டு 1-க்கு அணு 14.
4 மு. ,, 1-க்கு ரூ. 1.

K. S. MUTHIAH & CO., Tinnevelly.

Printed at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.